Koviloor Digital Library

திருமலை - திருப்பதி தேவஸ்தான வெளியீடு.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மயர்வற மதிநலமருளப்பெற்ற ஆழ்வார்கள்

அருளிச்செய்த

நித்யாநுஸந்தாநம்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 3254

திருமலை - திருப்பதி தேவஸ்தான அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1982

Koviloor Digital Library

T. T. D. Religious Publications Series No. 121
Copies : 5,000

வெளியிடுபவர் :
பி. வி. ஆர். கே. பிரஸாத், ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்,
திருமலை - திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

அச்சிட்டோர் :
திருமலை - திருப்பதி தேவஸ்தான அச்சகம்
திருப்பதி.

Koviloor Digital Library



ஸ்ரீ வெங்கடேஸ்வர பெருமாள்

Koviloor Digital Library

Koviloor Digital Library



ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தனியன்கள்

நம்பெருமாள் அருளிச் செய்தது

ராமாநுஜதயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம்|
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம்||

கூரத்தாழ்வான் அருளிச் செய்தவை

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம் |
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ||

யோ நித்ய மச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே |
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ ஸரணம் ப்ரபத்யே ||

ஆளவந்தார் அருளிச் செய்தது

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் |
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா ||

ஸ்ரீ பராசர பட்டர் அருளிச் செய்தது

பூதம் ஸரஸ்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந் |
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிச்ராந்
ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோ஽ஸ்மி நித்யம் ||

—*—

Koviloor Digital Library

திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழிகளின்

தனியன்கள்

நாதமுனிகள் அருளிச் செய்தது

குருமுக மநதீத்ய ப்ராஹ வேதாநசேஷாந்
நரபதிபரிக்லுப்தம் சுல்கமாதாதுகாம: ।
ச்வசுர மமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

பாண்டிய பட்டர் அருளிச் செய்தவை

நேரிசை வெண்பா

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூ ரென்றொருகால்*
சொன்னார் கழற்கமலஞ் சூடினோம்*—முன்னாள்
கிழியறுத்தா னென்றுரைத்தோம்* கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று*
ஈண்டிய சங்க மெடுத்தூத* வேண்டிய
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்*
பாதங்கள் யாமுடைய பற்று.

—*—

Koviloor Digital Library

பெரியாழ்வார் அருளிச்செய்த

திருப்பல்லாண்டு

வெண்செந்துறை

நாட்டைராகம் - அடதாளம்

†பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா* உன்
சேவடி செவ்வி திருக்காப்பு. (1)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

†அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு*
வடிவாய் நின்வலமார்பினில் வாழ்கின்றமங்கையும் பல்லாண்டு*
வடிவார்சோதிவலத்துறையுஞ் சுடராழியும் பல்லாண்டு*
படைபோர் புக்கு முழங்கும் அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே.(2)

வாழாட்பட்டுநின்றீருள்ளீரேல் வந்துமண்ணும்மணமும்கொண்மின்
கூழாட்பட்டுநின்றீர்களை எங்கள்குழுவினில் புகுதலொட்டோம்*
ஏழாட்காலும்பழிப்பிலோம்நாங்கள் இராக்கதர்வாழ்* இலங்கை
பாழாளாகப்படைபொருதானுக்குப் பல்லாண்டுகூறுதுமே.(3)

ஏடுநிலத்திலிடுவதன்முன்னம்வந்து எங்கள் குழாம்புகுந்து*
கூடுமனமுடையீர்கள் வரம்பொழி வந்தொல்லைக்கூடுமினோ*
நாடும்நகரமும்நன்கறிய நமோநாராயணாயவென்று*
பாடுமனமுடைப்பத்தருள்ளீர்! வந்துபல்லாண்டுகூறுமினே(4)

அண்டக்குலத்துக்கதிபதியாகி அசுரரிராக்கதரை*
இண்டைக்குலத்தையெடுத்துக்களைந்த இருடீகேசன்தனக்கு*
தொண்டக்குலத்திலுள்ளீர்! வந்தடிதொழுது ஆயிரநாமம் சொல்லி
பண்டைக்குலத்தைத்தவிர்ந்துபல்லாண்டுபல்லாயிரத்தாண்டென்மினே

எந்தைதந்தைதந்தைதந்தைதம்மூத்தப்பன் ஏழ்படிகால்தொடங்கி*
வந்துவழிவழிஆட்செய்கின்றோம்* திருவோணத்திருவிழவில்
அந்தியம்போதிலரியுருவாகி அரியையழித்தவனை*
பந்தனைதீரப்பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே.

Koviloor Digital Library

தீயிற்பொலிகின்றசெஞ்சுடராழி திகழ்திருச்சக்கரத்தின்
கோயிற்பொறியாலேஒற்றுண்டுநின்று குடிகுடியாட் செய்கின்றோம்*
மாயப்பொருபடைவாணனை ஆயிரந்தோளும்பொழிகுருதி
பாய* சுழற்றியஆழிவல்லானுக்குப் பல்லாண்டுகூறுதுமே. (7)

நெய்யிடைநல்லதோர்சோறும் நியதமும்அத்தாணிச்சேவகமும்*
கையடைக்காயும்கழுத்துக்குப்பூணொடு காதுக்குக்குண்டலமும்
மெய்யிடநல்லதோர்சாந்தமும்தந்து என்னைவெள்ளுயிராக்கவல்ல
பையுடைநாகப்பகைக்கொடியானுக்குப் பல்லாண்டு கூறுவனே. (8)

உடுத்துக்களைந்தநின்பீதகவாடையுடுத்துக் கலத்ததுண்டு*
தொடுத்ததுழாய்மலர்சூடிக்களைந்தன சூடுமித்தொண்டர்களோம்
விடுத்ததிசைக்கருமம்திருத்தித் திருவோணத்திருவிழவில்*
படுத்தபைந்நாகணைப்பள்ளிகொண்டானுக்குப்பல்லாண்டுகூறுதுமே.

எந்நாளெம்பெருமான் ! உன்தனக்கடியோமென்றெழுத்துப்பட்ட
அந்நாளே* அடியோங்களடிக்குடில் வீடுபெற்றுய்ந்ததுகாண்*
செந்நாள்தோற்றித் திருமதுரையுள்சிலைகுனித்து* ஐந்தலைய
பைந்நாகத்தலைப்பாய்ந்தவனே ! உன்னைப்பல்லாண்டுகூறுதுமே.(10)

†அல்வழக்கொன்றுமில்லாஅணிகோட்டியர்கோன்* அபிமானதுங்கன்
செல்வனைப்போலத்திருமாலே! நானும்உனக்குப்பழவடியேன்*
நல்வகையால்நமோநாராயணாவென்று நாமம்பலபரவி*
பல்வகையாலும்பவித்திரனே! உன்னைப்பல்லாண்டுகூறுவனே. (11)

†பல்லாண்டென்றுபவித்திரனைப் பரமேட்டியை* சார்ங்கமென்னும்
வில்லாண்டான்தன்னை வில்லிபுத்தூர்விட்டுசித்தன்விரும்பியசொல்*
நல்லாண்டென்றுநவின்றுரைப்பார் நமோநாராயணாயவென்று*
பல்லாண்டும்பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர்பல்லாண்டே. (12)

அடிவரவு :— பல் அடி வாழ் ஏடு அண்டம் எந்தை தீ நெய் உடுத்து எந்நாள் அல்வழக்கு பல்லாண்டு வண்ணம்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

—*—

Koviloor Digital Library

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த
திருப்பள்ளி யெழுச்சி

திருமாலையாண்டான் அருளிச் செய்தது

தமேவ மத்வா பரவாஸுதேவம்
ரங்கேசயம் ராஜவதர்ஹணியம்|
ப்ராபோதகீம் யோऽக்ருத ஸூக்திமாலாம்
பக்தாங்க்ரிரேணும் பகவந்தமீடே ||

திருவரங்கப்பெருமாளரையர் அருளிச் செய்தது

நேரிசை வெண்பா.

மண்டங்குடியென்பர் மாமறையோர் மன்னியசீர்*
தொண்டரடிப்பொடி தொன்னகரம்*—வண்டு
திணர்த்தவயல் தென்னரங்கத் தம்மானை* பள்ளி
யுணர்த்தும் பிரானுதித்த வூர்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

பூபாளராகம் - அடதாளம்

†கதிரவன்குணதிசைச்சிகரம் வந்தணைந்தான்
கனையிருளகன்றது காலையம்பொழுதாய்*
மதுவிரிந்தொழுகின மாமலரெல்லாம்
வானவரரசர்கள் வந்துவந்தீண்டி*
எதிர்திசைநிறைந்தனர் இவரொடும்புகுந்த
இருகங்ளிற்றீட்டமும் பிடியொடுமுரசும்*
அதிர்தலில்அலைகடல் போன்றுளதுஎங்கும்
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே! (1)

கொழுங்கொடிமுல்லையின் கொழுமலரணவிக்
கூர்ந்ததுகுணதிசை மாருதம்இதுவோ*
எழுந்தன மலரணைப்பள்ளிகொள்ளன்னம்
ஈன்பனிநனைந்த தமிருஞ்சிறகுதறி*
விழுங்கியமுதலையின் பிலம்புரைபேழ்வாய்
வெள்ளெயிறுற அதன்விடத்தினுக்கனுங்கி*
அழுங்கியஆனையி னருந்துயர்கெடுத்த
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (2)

Koviloor Digital Library

சுடரொளிபரந்தன சூழ்திசையெல்லாம்
துன்னியதாரகை மின்னொளிசுருங்கி*
படரொளிபசுத்தனன் பனிமதிஇவனோ
பாயிருளகன்றது பைம்பொழிற்கமுகின்*
மடலிடைக்கீறி வண்பாளைகள்நாற
வைகறைகூர்ந்தது மாருதம்இதுவோ*
அடலொளிதிகழ்தரு திகிரியந்தடக்கை
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (3)

மேட்டிளமேதிகள் தளைவிடும்ஆயர்கள்
வேய்ங்குழலோசையும் விடைமணிக்குரலும்*
ஈட்டியவிசைதிசை பரந்தனவயலுள்
இரிந்தனசுரும்பினம் இலங்கையர்குலத்தை*
வாட்டியவரிசிலை வானவரேறே!
மாமுனிவேள்வியைக் காத்து* அவபிரதம்
ஆட்டியவடுதிற லயோத்தியெம்மரசே!
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (4)

புலம்பினபுட்களும் பூம்பொழில்களின்வாய்
போயிற்றுக்கங்குல் புகுந்ததுபுலரி*
கலந்ததுகுணதிசைக் கனைகடலரவம்
களிவண்டுமிழற்றிய கலம்பகம்புனைந்த*
அலங்கலந்தொடையல்கொண்டு அடியிணைபணிவான்
அமரர்கள்புகுந்தனர் ஆதலில்அம்மா!*
இலங்கையர்கோன்வழிபாடுசெய்கோயில்
எம்பெருமான்! பள்ளியெழுந்தருளாயே. (5)

இரவியர்மணிநெடுந்தேரொடும்இவரோ
இறையவர் பதினொருவிடையரும்இவரோ *
மருவியமயிலினன் அறுமுகன்இவனோ
மருதரும்வசுக்களும் வந்துவந்தீண்டி*
புரவியோடாடலும் பாடலும்தேரும்
குமரதண்டம்புகுந்து ஈண்டியவெள்ளம்*
அருவரையனையநின் கோயில்முன்இவரோ
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (6)

Koviloor Digital Library

அந்தரத்தமரர்கள் கூட்டங்கள்இவையோ
அருந்தவமுனிவரும் மருதரும்இவரோ*
இந்திரனானையும் தானும்வந்துஇவனோ
எம்பெருமான்! உன்கோயிலின்வாசல்*
சுந்தரர்நெருக்க விச்சாதரர் நூக்க
இயக்கரும்மயங்கினர் திருவடித்தொழுவான்*
அந்தரம்பாரிட மில்லைமற்றிதுவோ
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (7)

வம்பவிழ்வானவர் வாயுறைவழங்க
மாநிதிகபிலை ஒண்கண்ணாடிமுதலா*
எம்பெருமான்படிமக்கலங்காண்டற்கு
ஏற்பனவாயின கொண்டுநன்முனிவர்*
தும்புருநாரதர் புகுந்தனர்இவரோ
தோன்றினன் இரவியும் துலங்கொளிபரப்பி*
அம்பரதலத்தினின்று அகல்கின்றதுஇருள்போய்
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (8)

ஏதமில்தண்ணுமை எக்கம்மத்தளி
யாழ்குழல்முழவமோடு இசைதிசைகெழுமி*
கீதங்கள்பாடினர் கிந்நரர்கெருடர்கள்
கந்தருவரவர் கங்குலுளெல்லாம்*
மாதவர்வானவர் சாரணர்இயக்கர்
சித்தரும்மயங்கினர் திருவடித்தொழுவான்*
ஆதலில்அவர்க்கு நாளோலக்கமருள
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (9)

†கடிமலர்க்கமலங்கள் மலர்ந்தனஇவையோ
கதிரவன்கனைகடல் முளைத்தனன்இவனோ*
துடியிடையார் சுரிகுழல்பிழிந்துதறித்
துகிலுடுத்தேறினர் சூழ்புனலரங்கா!*
தொடையொத்ததுளவமும் கூடையும்பொலிந்து
தோன்றியதோள்தொண்டரடிப்பொடியென்னும்
அடியனை* அளியனென்றருளி உன்னடியார்க்கு
ஆட்படுத்தாய்! பள்ளியெழுந்தருளாயே. (10)

அடிவரவு:— கதிர் கொழு சுடர் மேட்டு புலம்பின இரவி அந்தரம் வம்பவிழ் ஏதம் கடி அமலன்.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்.

—*—

Koviloor Digital Library

ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த
திருப்பாவை

ஸ்ரீ பராசரபட்டர் அருளிச்செய்தது

நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ச்ருதிசதசிரஸ்ஸித்தமத்யாபயந்தீ|
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்-
கோதா தஸ்யை நம இதமிதம் பூய ஏவாஸ்து பூயః ‖ [க்தே

உய்யக்கொண்டார் அருளிச் செய்தவை

நேரிசை வெண்பா

அன்னவயல்புதுவை யாண்டாள்* அரங்கற்குப்
பன்னுதிருப்பாவைப் பல்பதியம்*—இன்னிசையால்
பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை* பூமாலை
சூடிக்கொடுத்தாளைச் சொல்லு.

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே!* தொல்பாவை
பாடியருளவல்ல பல்வளையாய்!*—நாடிநீ
வேங்கடவற்கு என்னைவிதி என்ற இம்மாற்றம்*
நாம்கடவாவண்ணமே நல்கு.

எட்டடி நாற்சீ ரோருவிகற்பக் கொச்சகக் கலிப்பா

பிலஹரிராகம் - அடதாளம்

†மார்கழித்திங்கள் மதிநிறைந்தநன்னாளால்*
நீராடப்போதுவீர் போதுமினோ நேரிழையீர்!*
சீர்மல்கும்ஆய்ப்பாடிச் செல்வச்சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்*
ஏரார்ந்தகண்ணி யசோதையிளஞ்சிங்கம்*
கார்மேனிச்செங்கண் கதிர்மதியம்போல்முகத்தான்*
நாராயணனே நமக்கேபறைதருவான்*
பாரோர்புகழப் படிந்தேலோரெம்பாவாய். (1)

Koviloor Digital Library

பந்துவராளிராகம் - ஆதிதாளம்

வையத்துவாழ்வீர்காள்! நாமும்நம்பாவைக்கு*
செய்யும்கிரிசைகள் கேளீரோ* பாற்கடலுள்
பையத்துயின்ற பரமனடிபாடி*
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலேநீராடி*
மையிட்டெழுதோம் மலரிட்டுநாம்முடியோம்*
செய்யாதனசெய்யோம் தீக்குறளைசென்றோதோம்*
ஐயமும்பிச்சையும் ஆந்தனையும்கைகாட்டி
உய்யுமாறெண்ணி உகந்தேலோரெம்பாவாய். (2)

பந்துவராளிராகம் – திரிபுடைதாளம்

†ஓங்கியுலகளந்த உத்தமன்பேர்பாடி*
நாங்கள்நம்பாவைக்குச் சாற்றிநீராடினால்*
தீங்கின்றிநாடெல்லாம் திங்கள்மும்மாரிபெய்து*
ஓங்குபெருஞ்செந்நெலூடுகயலுகள*
பூங்குவளைப்போதில் பொறிவண்டுகண்படுப்ப*
தேங்காதேபுக்கிருந்து சீர்த்தமுலைபற்றி
வாங்க* குடம்நிறைக்கும் வள்ளல்பெரும்பசுக்கள்*
நீங்காதசெல்வம் நிறைந்தேலோரெம்பாவாய். (3)

காம்போதிராகம் - அடதாளம்

ஆழிமழைக்கண்ணா! ஒன்றும்நீகைகரவேல்*
ஆழியுள்புக்கு முகந்துகொடுஆர்த்தேறி*
ஊழிமுதல்வனுருவம்போல் மெய்கறுத்து*
பாழியந்தோளுடைப் பற்பநாபன்கையில்*
ஆழிபோல்மின்னி வலம்புரிபோல்நின்றதிர்ந்து*
தாழாதே சார்ங்கமுதைத்தசரமழைபோல்*
வாழஉலகினில்பெய்திடாய்* நாங்களும்
மார்கழிநீராட மகிழ்ந்தேலோரெம்பாவாய். (4)

தோடிராகம் - ரூபகதாளம்

மாயனை மன்னுவடமதுரைமைந்தனை*
தூயபெருநீர் யமுனைத்துறைவனை*
ஆயர்குலத்தினில்தோன்றும் அணிவிளக்கை*
தாயைக்குடல்விளக்கஞ்செய்த தாமோதரனை*

Koviloor Digital Library

தூயோமாய்வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால்பாடி மனத்தினால்சிந்திக்க*
போயபிழையும் புகுதருவான்நின்றனவும்*
தீயினில்தூசாகும் செப்பேலோரெம்பாவாய். (5)

பூபாளராகம் - ஆதிதாளம்

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன்கோயில்*
வெள்ளைவிளிசங்கின் பேரரவம்கேட்டிலையோ*
பிள்ளாய்! எழுந்திராய் பேய்முலைநஞ்சுண்டு
கள்ளச்சகடம் கலக்கழியக்காலோச்சி*
வெள்ளத்தரவில் துயிலமர்ந்தவித்தினை*
உள்ளத்துக்கொண்டு முனிவர்களும்யோகிகளும்*
மெள்ளஎழுந்து அரியென்றபேரரவம்*
உள்ளம்புகுந்து குளிர்ந்தேலோரெம்பாவாய். (6)

பூபாளராகம் - ரூபகதாளம்

கீசுகீசென்றெங்கும் ஆனைச்சாத்தன்* கலந்து
பேசினபேச்சரவம் கேட்டிலையோபேய்ப்பெண்ணே!*
காசும்பிறப்பும் கலகலப்பக்கைபேர்த்து*
வாசநறுங்குழலாய்ச்சியர்* மத்தினால்
ஓசைபடுத்த தயிரரவம்கேட்டிலையோ*
நாயகப்பெண்பிள்ளாய்! நாராயணன்மூர்த்தி
கேசவனைப்பாடவும் நீ கேட்டேகிடத்தியோ*
தேசமுடையாய்! திறவேலோரெம்பாவாய். (7)

பூபாளராகம் - ஆதிதாளம்

கீழ்வானம்வெள்ளென்று எருமைசிறுவீடு*
மேய்வான்பரந்தனகாண் மிக்குள்ளபிள்ளைகளும்*
போவான்போகின்றாரைப் போகாமல்காத்து* உன்னைக்
கூவுவான்வந்துநின்றோம்* கோதுகலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப்பறைகொண்டு*
மாவாய்பிளந்தானை மல்லரைமாட்டிய*
தேவாதிதேவனைச் சென்றுநாம்சேவித்தால்*
ஆவாவென்றாராய்ந் தருளேலோரெம்பாவாய். (8)

Koviloor Digital Library

மோஹனராகம் - ஆதிதாளம்

தூமணிமாடத்துச் சுற்றும் விளக்கெரிய*
தூபம்கமழத் துயிலணைமேல்கண்வளரும்*
மாமான்மகளே! மணிக்கதவம்தாள்திறவாய்*
மாமீர்! அவளையெழுப்பீரோ?* உன்மகள்தான்
ஊமையோஅன்றிச் செவிடோஅனந்தலோ
ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ*
மாமாயன்மாதவன் வைகுந்தனென்றென்று*
நாமம்பலவும் நவின்றேலோரெம்பாவாய். (9)

அசாவேரிராகம் - ஆதிதாளம்

நோற்றுச்சுவர்க்கம் புகுகின்றஅம்மனாய்!*
மாற்றமும்தாராரோ வாசல்திறவாதார்*
நாற்றத்துழாய்முடி நாராயணன்* நம்மால்
போற்றப்பறைதரும்புண்ணியனால்* பண்டுஒருநாள்
கூற்றத்தின்வாய்வீழ்ந்த கும்பகரணனும்*
தோற்றும்உனக்கே பெருந்துயில்தான்தந்தானோ*
ஆற்றஅனந்தலுடையாய்! அருங்கலமே!*
தேற்றமாய்வந்து திறவேலோரெம்பாவாய். (10)

ஸஹானாராகம் - திரிபுடைதாளம்

கற்றுக்கறவைக் கணங்கள்பலகறந்து*
செற்றார்திறலழியச் சென்றுசெருச்செய்யும்*
குற்றமொன்றில்லாத கோவலர்தம்பொற்கொடியே!
புற்றரவல்குல் புனமயிலே! போதராய்*
சுற்றத்துத்தோழிமா ரெல்லாரும்வந்து* நின்
முற்றம்புகுந்த முகில்வண்ணன்பேர்பாட*
சிற்றாதேபேசாதே செல்வப்பெண்டாட்டி!* நீ
எற்றுக்குஉறங்கும் பொருளேலோரெம்பாவாய். (11)

கேதாரகௌளராகம் - ஆதிதாளம்

கனைத்திளங்கற்றெருமை கன்றுக்கிரங்கி*
நினைத்துமுலைவழியே நின்றுபால்சோர*
நனைத்தில்லம்சேறாக்கும் நற்செல்வன்தங்காய்!*
பனித்தலைவீழ நின்வாசற்கடைபற்றி

Koviloor Digital Library

சினத்தினால்தென் னிலங்கைக்கோமானைச்செற்ற*
மனத்துக்கினியானைப் பாடவும்நீவாய்திறவாய்*
இனித்தானெழுந்திராய் ஈதென்னபேருறக்கம்?*
அனைத்தில்லத்தாரும் அறிந்தேலோரெம்பாவாய். (12)

அடாணாராகம் - ரூபகதாளம்

புள்ளின்வாய்கீண்டானை* பொல்லா அரக்கனைக்
கிள்ளிக்களைந்தானைக் கீர்த்திமைபாடிப்போய்*
பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம்புக்கார்*
வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று*
புள்ளும்சிலம்பினகாண் போதரிக்கண்ணினாய்!*
குள்ளக்குளிரக் குடைந்துநீராடாதே*
பள்ளிக்கிடத்தியோ பாவாய்! நீநன்னாளால்*
கள்ளம்தவிர்ந்து கலந்தேலோரெம்பாவாய். (13)

ஸாரங்கராகம் - ஆதிதாளம்

உங்கள்புழைக்கடைத் தோட்டத்துவாவியுள்*
செங்கழுநீர்வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய்கூம்பினகாண்*
செங்கல்பொடிக்கூறை வெண்பல்தவத்தவர்*
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான்போதந்தார்*
எங்களைமுன்னம் எழுப்புவான்வாய்பேசும்*
நங்காய்! எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்*
சங்கொடுசக்கரம் ஏந்தும்தடக்கையன்*
பங்கயக்கண்ணானைப் பாடேலோரெம்பாவாய். (14)

ஸௌராஷ்டிரராகம் - அடதாளம்

எல்லே! இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ!*
சில்லென்றழையேன்மின் நங்கைமீர்! போதர்கின்றேன்*
வல்லைஉன்கட்டுரைகள் பண்டேஉன்வாயறிதும்*
வல்லீர்கள் நீங்களே நானேதானாயிடுக*
ஒல்லைநீபோதாய் உனக்கென்னவேறுடையை*
எல்லாரும்போந்தாரோ போந்தார்போந்தெண்ணிக்கொள்*
வல்லானைகொன்றானை மாற்றாரைமாற்றழிக்க
வல்லானை* மாயனைப் பாடேலோரெம்பாவாய். (15)

Koviloor Digital Library

யமுனகலியாணிராகம் - ஆதிதாளம்

†நாயகனாய்நின்ற நந்தகோபனுடைய
கோயில்காப்பானே!* கொடித்தோன்றும்தோரண
வாயில்காப்பானே!* மணிக்கதவம்தாள்திறவாய்*
ஆயர்சிறுமியரோமுக்கு* அறைபறை
மாயன்மணிவண்ணன் நென்னலேவாய்நேர்ந்தான்*
தூயோமாய்வந்தோம் துயிலெழப்பாடுவான்*
வாயால்முன்னம்முன்னம் மாற்றாதேஅம்மா!* நீ
நேயநிலைக்கதவம் நீக்கேலோரெம்பாவாய். (16)

யமுனகலியாணிராகம் - ரூபகதாளம்

அம்பரமேதண்ணீரே சோறேஅறஞ்செய்யும்*
எம்பெருமான்! நந்தகோபாலா! எழுந்திராய்*
கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!*
எம்பெருமாட்டி! யசோதாய்! அறிவுறாய்*
அம்பரமூடறுத்தோங்கி உலகளந்த*
உம்பர்கோமானே! உறங்காதுஎழுந்திராய்*
செம்பொற்கழலடிச்செல்வா! பலதேவா!*
உம்பியும்நீயும் உறங்கேலோரெம்பாவாய். (17)

சாவேரிராகம் - ஆதிதாளம்

†உந்துமதகளிற்றன் ஓடாததோள்வலியன்*
நந்தகோபாலன்மருமகளே! நப்பின்னாய்!*
கந்தம்கமழும்குழலீ! கடைதிறவாய்*
வந்துஎங்கும்கோழி அழைத்தனகாண்* மாதவிப்
பந்தல்மேல் பல்கால்குயிலினங்கள்கூவினகாண்*
பந்தார்விரலி! உன்மைத்துனன்பேர்பாட*
செந்தாமரைக்கையால் சீரார்வளையொலிப்ப*
வந்துதிறவாய் மகிழ்ந்தேலோரெம்பாவாய். (18)

ஸ்ரீராகம் - ஆதிதாளம்

குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால்கட்டில்மேல்*
மெத்தென்ற பஞ்சசயனத்தின்மேலேறி*
கொத்தலர்பூங்குழல் நப்பின்னைகொங்கைமேல்*
வைத்துக்கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்*

Koviloor Digital Library

மைத்தடங்கண்ணினாய்! நீ உன்மணாளனை*
எத்தனைபோதும் துயிலெழவொட்டாய்காண்*
எத்தனையேலும் பிரிவாற்றகில்லாயால்*
தத்துவமன்று தகவேலோரெம்பாவாய். (19)

தேசியராகம் - ஆதிதாளம்

முப்பத்துமூவர் அமரர்க்குமுன்சென்று*
கப்பம்தவிர்க்கும் கலியே! துயிலெழாய்*
செப்பமுடையாய்! திறலுடையாய்!* செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்*
செப்பன்னமென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்*
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்*
உக்கமும்தட்டொளியும் தந்துஉன்மணாளனை*
இப்போதேஎம்மை நீராட்டேலோரெம்பாவாய். (20)

காம்போதிராகம் - ஆதிதாளம்

ஏற்றகலங்கள் எதிர்பொங்கிமீதளிப்ப*
மாற்றாதேபால்சொரியும் வள்ளல்பெரும்பசுக்கள்*
ஆற்றப்படைத்தான்மகனே! அறிவுறாய்*
ஊற்றமுடையாய்! பெரியாய்!* உலகினில்
தோற்றமாய்நின்ற சுடரே! துயிலெழாய்*
மாற்றார்உனக்குவலிதொலைந்து உன்வாசற்கண்*
ஆற்றாதுவந்து உன்னடிபணியுமாபோலே*
போற்றியாம்வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். (21)

பைரவிராகம் - ஆதிதாளம்

அங்கண்மாஞாலத்து அரசர்* அபிமான
பங்கமாய்வந்து நின்பள்ளிக்கட்டில்கீழே*
சங்கமிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்*
கிங்கிணிவாய்ச்செய்த தாமரைப்பூப்போலே*
செங்கண்சிறுச்சிறிதே எம்மேல்விழியாவோ*
திங்களும்ஆதித்தியனும் எழுந்தாற்போல்*
அங்கணிரண்டும்கொண்டு எங்கள்மேல்நோக்குதியேல்*
எங்கள்மேல்சாபம் இழிந்தேலோரெம்பாவாய். (22)

Koviloor Digital Library

அடாணுராகம் - ஆதிதாளம்

†மாரிமலைமுழைஞ்சில் மன்னிக்கிடந்துஉறங்கும்*
சீரியசிங்கம் அறிவுற்றுத்தீவிழித்து*
வேரிமயிர்பொங்க எப்பாடும்பேர்ந்துதறி*
மூரிநிமிர்ந்து முழங்கிப்புறப்பட்டு*
போதருமாபோலே நீ பூவைப்பூவண்ணா! *உன்
கோயில்நின்றும்இங்ஙனே போந்தருளி *கோப்புடைய
சீரியசிங்காசனத்துஇருந்து* யாம்வந்த
காரியம்ஆராய்ந்தருளேலோ ரெம்பாவாய். (23)

பியாகடைராகம் - ஆதிதாளம்

†அன்று இவ்வுலகம்அளந்தாய்! அடிபோற்றி*
சென்றங்குத் தென்னிலங்கைசெற்றாய்! திறல்போற்றி*
பொன்றச்சகடம்உதைத்தாய்! புகழ்போற்றி*
கன்றுகுணிலாஎறிந்தாய்! கழல்போற்றி!
குன்றுகுடையாஎடுத்தாய்! குணம்போற்றி*
வென்றுபகைகெடுக்கும் நின்கையில்வேல்போற்றி*
என்றென்றுஉன்சேவகமே ஏத்திப்பறைகொள்வான்*
இன்றுயாம்வந்தோம் இரங்கேலோரெம்பாவாய். (24)

சங்கராபரணராகம் - ஆதிதாளம்

ஒருத்திமகனாய்ப் பிறந்து *ஓரிரவில்
ஒருத்திமகனாய் ஒளித்துவளர*
தரிக்கிலானாகித் தான்தீங்குநினைந்த*
கருத்தைப்பிழைப்பித்துக் கஞ்சன்வயிற்றில்*
நெருப்பென்னநின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்துவந்தோம் பறைதருதியாகில்*
திருத்தக்கசெல்வமும் சேவகமும்யாம்பாடி*
வருத்தமும்தீர்ந்து மகிழ்ந்தேலோரெம்பாவாய். (25)

ஆரபிராகம் - ஆதிதாளம்

மாலே! மணிவண்ணா! மார்கழிநீராடுவான்*
மேலையார் செய்வனகள் வேண்டுவனகேட்டியேல்*
ஞாலத்தையெல்லாம் நடுங்கமுரல்வன*
பாலன்னவண்ணத்து உன்பாஞ்சசன்னியமே*

Koviloor Digital Library

போல்வனசங்கங்கள் போய்ப்பாடுடையனவே*
சாலப்பெரும்பறையே பல்லாண்டிசைப்பாரே*
கோலவிளக்கே கொடியேவிதானமே*
ஆலினிலையாய்! அருளேலோரெம்பாவாய். (26)

ஆனந்தபைரவிராகம் - ஆதிதாளம்

†கூடாரைவெல்லும்சீர்க் கோவிந்தா!* உன்தன்னைப்
பாடிப்பறைகொண்டு யாம்பெறுசம்மானம்*
நாடுபுகழும்பரிசினால் நன்றாக*
சூடகமேதோள்வளையே தோடேசெவிப்பூவே*
பாடகமேயென்றனைய பல்கலனும்யாம்அணிவோம்*
ஆடையுடுப்போம் அதன்பின்னேபாற்சோறு
மூடநெய்பெய்து முழங்கைவழிவார*
கூடியிருந்து குளிர்ந்தேலோரெம்பாவாய். (27)

தன்யாசிராகம் - ஆதிதாளம்

†கறவைகள்பின்சென்று கானம்சேர்ந்துண்போம்*
அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்து* உன்தன்னைப்
பிறவிபெறுந்தனை புண்ணியம்யாமுடையோம்*
குறைவொன்றும் இல்லாத கோவிந்தா! உன்தன்னோடு
உறவேல்நமக்கு இங்கு ஒழிக்கஒழியாது*
அறியாதபிள்ளைகளோம் அன்பினால்* உன்தன்னைச்
சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே*
இறைவா! நீதாராய் பறையேலோரெம்பாவாய். (28)

கல்யாணிராகம் — ஆதிதாளம்

சிற்றஞ்சிறுகாலே வந்துஉன்னைச் சேவித்து* உன்
பொற்றாமரையடியே போற்றும் பொருள்கேளாய்*
பெற்றம்மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து* நீ
குற்றவேல்எங்களைக் கொள்ளாமற்போகாது*
இற்றைப்பறைகொள்வா னன்றுகாண்கோவிந்தா!*
எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கும்* உன்தன்னோடு
உற்றோமேயாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்*
மற்றைநங்காமங்கள் மாற்றேலோரெம்பாவாய். (29)

Koviloor Digital Library

சுருட்டிராகம் – ரூபகதாளம்

†வங்கக்கடல்கடைந்த மாதவனைக்கேசவனை*
திங்கள்திருமுகத்துச் சேயிழையார்சென்றிறைஞ்சி*
அங்கப்பறைகொண்டஆற்றை* அணிபுதுவைப்
பைங்கமலத்தண்தெரியல் பட்டர்பிரான்கோதைசொன்ன*

சங்கத்தமிழ்மாலை முப்பதும்தப்பாமே*
இங்குஇப்பரிசுரைப்பார் ஈரிரண்டுமால்வரைத்தோள்*
செங்கண்திருமுகத்துச் செல்வத்திருமாலால்*
எங்கும்திருவருள்பெற்று இன்புறுவரெம்பாவாய். (30)

அடிவரவு :—மார்கழி வையம் ஓங்கி ஆழி மாயன் புள்ளும் கீசு கீழ்வானம் தூமணி நோற்று கற்று கனைத்து புள்ளின் உங்கள் எல்லே நாயகன் அம்பரம் உந்து குத்து முப்பத்து ஏற்ற அங்கண் மாரி அன்று ஒருத்தி மாலே கூடாரை கறவைகள் சிற்றம் வங்கம் தை.

ஆண்டாள் திருவடிகளே சரணம்

—*—

திருமஞ்சன காலத்தில் அநுஸந்திப்பது

நீராட்டம்

பெரியாழ்வார்திருமொழி 2-ஆம் பத்து, 4-ஆம் திருமொழி

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

பிலஹரிராகம் - சம்பைதாளம்

வெண்ணெயளைந்தகுணுங்கும் விளையாடுபுழுதியும்கொண்டு*
திண்ணெனவிவ்விராவுன்னைத்*தேய்த்துக்கிடக்கநான்ஒட்டேன்*
எண்ணெய்புளிப்பழங்கொண்டு இங்குஎத்தனைபோதும் இருந்தேன்
நண்ணலரியபிரானே! நாரணா! நீராடவாராய். (1)

Koviloor Digital Library

கன்றுகளோடச்செவியில் கட்டெறும்புபிடித்திட்டால்*
தென்றிக்கெடுமாகில்வெண்ணெய்திரட்டிவிழுங்குமாகாண்பன்*
நின்றமராமரம்சாய்த்தாய்! நீபிறந்த திருவோணம்*
இன்று நீநீராடவேண்டும் எம்பிரான்! ஓடாதேவாராய். (2)

பேய்ச்சிமுலையுண்ணக்கண்டு பின்னையும்நில்லாது என்னெஞ்சம்*
ஆய்ச்சியரெல்லாரும்கூடி அழைக்கவும்நான்முலைதந்தேன்*
காய்ச்சினநீரொடுநெல்லி கடாரத்தில்பூரித்துவைத்தேன்*
வாய்த்தபுகழ்மணிவண்ணா! மஞ்சனமாடநீவாராய் (3)

கஞ்சன்புணர்ப்பினில்வந்த கடியசகடமுதைத்து*
வஞ்சகப்பேய்மகள் துஞ்ச வாய்முலைவைத்தபிரானே!*
மஞ்சளும் செங்கழுநீரின் வாசிகையும் நாறுசாந்தும்*
அஞ்சனமும்கொண்டுவைத்தேன் அழகனே! நீராடவாராய். (4)

அப்பம்கலந்தசிற்றுண்டி அக்காரம்பாலில்கலந்து
சொப்படநான்சுட்டுவைத்தேன் தின்னலுறுதியேல்நம்பீ!*
செப்பிளமென்முலையார்கள் சிறுபுறம்பேசிச்சிரிப்பர்*
சொப்படநீராடவேண்டும் சோத்தம்பிரான்! இங்கேவாராய்.(5)

எண்ணெய்க்குடத்தையுருட்டி இளம்பிள்ளைகிள்ளியெழுப்பி*
கண்ணைப்புரட்டிவிழித்துக் கழகண்டுசெய்யும்பிரானே!*
உண்ணக்கனிகள்தருவன் ஒலிகடலோதநீர்போலே*
வண்ணம் அழகியநம்பீ! மஞ்சனமாடநீவாராய். (6)

கறந்தநற்பாலும்தயிரும் கடைந்துஉறிமேல்வைத்தவெண்ணெ
பிறந்ததுவேமுதலாகப் பெற்றறியேன்எம்பிரானே!* [ய்*
சிறந்தநற்றாய் அலர்தூற்றும் என்பதனால்பிறர்முன்னே*
மறந்தும்உரையாடமாட்டேன் மஞ்சனமாடநீவாராய். (7)

கன்றினைவாலோலைகட்டிக் கனிகளுதிரஎறிந்து [னாய்போலும்*
பின்தொடர்ந்தோடியோர்பாம்பைப் பிடித்துக்கொண்டாட்டி
நின்திறத்தேனல்லேன்நம்பி! நீபிறந்ததிருநன்னாள்*
நன்றுநீநீராடவேண்டும் நாரணா! ஓடாதேவாராய். (8)

பூணித்தொழுவினில்புக்குப் புழுதியளைந்தபொன்மேனி*
காணப்பெரிதும்உகப்பன் ஆகிலும்கண்டார்பழிப்பர்*
நாணெத்தனையுமிலாதாய்! நப்பின்னைகாணில்சிரிக்கும்*
மாணிக்கமே! என்மணியே! மஞ்சனமாடநீவாராய். (9)

Koviloor Digital Library

†கார்மலிமேனிநிறத்துக் கண்ணபிரானைஉகந்து*
வார்மலிகொங்கையசோதை மஞ்சனமாட்டியவாற்றை*
பார்மலிதொல்புதுவைக்கோன்பட்டர்பிரான்சொன்னபாடல்*
சீர்மலிசெந்தமிழ்வல்லார் தீவினையாதும்இலரே. (10)

அடிவரவு :—வெண்ணெய் கன்று பேய்ச்சி கஞ்சன் அப்பம் எண்ணெய் கறந்த கன்றினை பூணி கார் பின்னை.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்

—*—

திருமஞ்சனகாலத்தில் சேர்த்து அநுஸந்திக்கும் பாசுரங்கள்

திருக்குறுந்தாண்டகம்

முன்பொலாஇராவணன்தன் முதுமதிளிலங்கைவேவித்து*
அன்பினால்அனுமன்வந்து ஆங்கடியிணைபணியநின்றார்க்கு*
என்பெலாம்உருகியுக்கிட்டு என்னுடைநெஞ்சமென்னும்*
அன்பினால்ஞானநீர்கொண்டு ஆட்டுவன் அடியனேனே. (15)

மாயமான்மாயச்செற்று மருதிறநடந்து* வையம்
தாயமாபரவைபொங்கத் தடவரைதிரித்து* வானோர்க்கு
ஈயுமாலெம்பிரானார்க்கு என்னுடைச்சொற்களென்னும்*
தூயமாமாலைகொண்டு சூட்டுவன்தொண்டனேனே. (16)

திருவிருத்தம்

சூட்டுநன்மாலைகள் தூயனவேந்தி* விண்ணோர்கள்நன்னீ
ராட்டிஅந்தூபம்தராநிற்கவேஅங்கு* ஓர்மாயையினால்
ஈட்டியவெண்ணெய்தொடுவுண்ணப்போந்து இமிலேற்றுவன்கூன்
கோட்டிடையாடினைகூத்து* அடலாயர்தம்கொம்பினுக்கே. (2)

பெரியாழ்வார் திருமொழி 3-ஆம் பத்து, 3-ஆம் திருமொழி

காடுகளூடுபோய்க்கன்றுகள்மேய்த்து மறியோடி* கார்க்கோடல்பூச்
சூடிவருகின்றதாமோதரா! கற்றுத்தூளிகாண்உன்னுடம்பு*
பேடைமயிற்சாயல்பின்னைமணாளா! நீராட்டமைத்துவைத்தேன்*
ஆடிஅமுதுசெய்அப்பனுமுண்டிலன் உன்னோடுஉடனேயுண்பான். (3)

Koviloor Digital Library

திண்ணார்வெண்சங்குடையாய்திருநாள்திருவோணமின்றேழுநாள்*முன்
பண்ணேர்மொழியாரைக்கூவி முளையட்டிப்பல்லாண்டுகூறுவித்தேன்*
கண்ணாலம்செய்யக்கறியும் கலத்ததரிசியுமாக்கிவைத்தேன்*
கண்ணா!நீநாளைத்தொட்டுக்கன்றின்பின் போகேல்கோலம்செய்து
இங்கேயிரு. (9)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

—*—

அந்திவேளையில் திருமாலைசாத்தும்போது அநுஸந்திப்பது.

பூச்சூட்டல்

பெரியாழ்வார் திருமொழி 2-ஆம் பத்து, 7-ஆம் திருமொழி

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

அடாணாராகம் - ரூபகதாளம்.

†ஆநிரைமேய்க்கநீபோதி அருமருந்தாவதறியாய்*
கானகமெல்லாம்திரிந்து உன்கரியதிருமேனிவாட*
பானையில்பாலைப்பருகிப் பற்றாதாரெல்லாம்சிரிப்ப*
தேனிலினியபிரானே! செண்பகப்பூச்சூட்டவாராய். (1)

கருவுடைமேகங்கள்கண்டால் உன்னைக்கண்டாலொக்கும் கண்
உருவுடையாய்! உலகேழும் உண்டாகவந்துபிறந்தாய்!*[கள்*
திருவுடையாள்மணவாளா! திருவரங்கத்தேகிடந்தாய்!*
மருவிமணம்கமழ்கின்ற மல்லிகைப்பூச்சூட்டவாராய். (2)

மச்சொடுமாளிகையேறி மாதர்கள்தம்மிடம்புக்கு*
கச்சொடுபட்டைக்கிழித்துக் காம்புதுகிலவைகீறி*
நிச்சலும்தீமைகள்செய்வாய்! நீள்திருவேங்கடத்தெந்தாய்!*
பச்சைத்தமனகத்தோடு பாதிரிப்பூச்சூட்டவாராய். (3)

தெருவின்கண்நின்றுஇளவாய்ச்சிமார்களைத்தீமைசெய்
மருவும்தமனகமும்சீர் மாலைமணம்கமழ்கின்ற* [யாதே*
புருவம்கருங்குழல்நெற்றி பொலிந்தமுகிற்கன்றுபோலே*
உருவமழகியநம்பீ! உகந்து இவைசூட்ட நீவாராய். (4)

Koviloor Digital Library

புள்ளினைவாய்பிளந்திட்டாய்! பொருகரியின்கொம்பொசித்தா
கள்ளஅரக்கியைமூக்கொடு காவலனைத்தலைகொண்டாய்! [ய்!
அள்ளிநீவெண்ணெய்விழுங்க அஞ்சாது அடியேன் அடித்தேன்*
தெள்ளிநீரிலெழுந்த செங்கழுநீர் சூட்டவாராய். (5)

எருதுகளோடுபொருதி ஏதும் உலோபாய்காண்நம்பி!*
கருதியதீமைகள்செய்து கஞ்சனைக்கால்கொடுபாய்ந்தாய்*
தெருவின்கண்தீமைகள்செய்து சிக்கெனமல்லர்களோடு*
பொருதுவருகின்றபொன்னே! புன்னைப்பூச்சூட்டவாராய். (6)

குடங்களெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்லஎங்கோவே!*
மடங்கொள்மதிமுகத்தாரை மால்செய்யவல்லஎன்மைந்தா!*
இடந்திட்டு இரணியன்நெஞ்சை இருபிளவாகமுன்கீண்டாய்!*
குடந்தைக்கிடந்தஎம்கோவே! குருக்கத்திப்பூச்சூட்டவாராய்.

சீமாலிகனவனோடு தோழமைகொள்ளவும்வல்லாய்*
சாமாறுஅவனைநீ எண்ணிச் சக்கரத்தால்தலைகொண்டாய்*
ஆமாறுஅறியும்பிரானே! அணியரங்கத்தேகிடந்தாய்!*
ஏமாற்றம்என்னைத்தவிர்த்தாய் இருவாட்சிப்பூச்சூட்டவாராய்

அண்டத்தமரர்கள்சூழ அத்தாணியுள்ளங்கிருந்தாய்!*
தொண்டர்கள்நெஞ்சிலுறைவாய்! தூமலராள்மணவாளா!*
உண்டிட்டுஉலகினையேழும் ஓராலிலையில்துயில்கொண்டாய்!*
கண்டுநான்உன்னையுகக்கக் கருமுகைப்பூச்சூட்டவாராய். (9)

†செண்பகமல்லிகையோடு செங்கழுநீர் இருவாட்சி*
எண்பகர்பூவும்கொணர்ந்தேன் இன்றிவைசூட்டவாவென்று*
மண்பகர்கொண்டானை ஆய்ச்சிமகிழ்ந்துஉரைசெய்தஇம்மாலை*
பண்பகர்வில்லிபுத்தூர்கோன் பட்டர்பிரான்சொன்னபத்தே. (10)

அடிவரவு:— ஆநிரை கரு மச்சு தெரு புள் எருது குடம் சீமாலிகன் அண்டம் செண்பகம் இந்திரன்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

—*—

Koviloor Digital Library

திருவழகிற்குத் தோஷம்வாராதபடி திருவந்திக்காப்பிடுதல்.

காப்பிடல்

பெரியாழ்வார் திருமொழி 2-ஆம் பத்து, 8-ஆம் திருமொழி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

தோடிராகம் - ரூபகதாளம்

† இந்திரனோடுபிரமன் ஈசன் இமையவரெல்லாம்*
மந்திரமாமலர்கொண்டு மறைந்து உவராய்வந்துநின்றார்*
சந்திரன்மாளிகைசேரும் சதுரர்கள்வெள்ளறைநின்றாய்!
அந்தியம்போதிதுவாகும் அழகனே! காப்பிடவாராய். (1)

கன்றுகள்இல்லம்புகுந்து கதறுகின்றபசுவெல்லாம்*
நின்றொழிந்தேன் உன்னைக்கூவி நேசமேலொன்றுமிலாதாய்!*
மன்றில்நில்லேல்அந்திப்போதுமதிள்திருவெள்ளறைநின்றாய்!*
நன்றுகண்டாய்என்தன்சொல்லு நான்உன்னைக்காப்பிடவாராய்.*(2)

செப்போதுமென்முலையார்கள் சிறுசோறும்இல்லும்சிதைத்திட்டு*
அப்போதுநானுரப்பப்போய் அடிசிலுமுண்டிலைஆள்வாய்!*
முப்போதும்வானவரேத்தும்முனிவர்கள்வெள்ளறைநின்றாய்!*
இப்போதுநான்ஒன்றும்செய்யேன் எம்பிரான்! காப்பிடவாராய்

கண்ணில்மணல்கொடுதூவிக்காலினால்பாய்ந்தனையென்றென்று
எண்ணரும்பிள்ளைகள்வந்திட்டு இவரால்முறைப்படுகின்றார்*
கண்ணனே! வெள்ளறைநின்றாய்! கண்டாரோடே தீமைசெய்வாய்*
வண்ணமேவேலையதொப்பாய்! வள்ளலே! காப்பிடவாராய் (4)

பல்லாயிரவர் இவ்வூரில்பிள்ளைகள் தீமைகள்செய்வார்* [ய்*
எல்லாம்உன்மேலன்றிப்போகாது எம்பிரான்! நீஇங்கேவாரா-
நல்லார்கள்வெள்ளறைநின்றாய்! ஞானச்சுடரே! உன்மேனி*
சொல்லாரவாழ்த்திநின்றேத்திச் சொப்படக்காப்பிடவாராய்.

கஞ்சன்கறுக்கொண்டு நின்மேல்கருநிறச்செம்மயிர்ப்பேயை!*
வஞ்சிப்பதற்குவிடுத்தான் என்பதுஓர்வார்த்தையும்உண்டு*
மஞ்சுதவழ்மணிமாட மதிள்திருவெள்ளறைநின்றாய்!*
அஞ்சுவன்நீஅங்குநிற்க அழகனே! காப்பிடவாராய். (6)

Koviloor Digital Library

கள்ளச்சகடும்மருதும் கலக்கழிய உதைசெய்த*
பிள்ளையரசே! நீ பேயைப்பிடித்துமுலையுண்டபின்னை*
உள்ளவாறென்றுமறியேன் ஒளியுடைவெள்ளறைநின்றாய்!*
பள்ளிகொள்போதுஇதுவாகும் பரமனே! காப்பிடவாராய்.(7)

இன்பமதனைஉயர்த்தாய்! இமையவர்க்கென்றுமரியாய்!*
கும்பக்களிறட்டகோவே! கொடுங்கஞ்சன்நெஞ்சினில்கூற்றே!*
செம்பொன்மதிள்வெள்ளறையாய்! செல்வத்தினால்வளர்பிள்ளாய்!*
கம்பக்கபாலிகாண்அங்குக் கடிதோடிக்காப்பிடவாராய். (8)

இருக்கொடுநீர்சங்கில்கொண்டிட்டு எழில்மறையோர்வந்துநின்றார்*
தருக்கேல்நம்பி! சந்திநின்று தாய்சொல்லுக்கொள்ளாய்சிலநாள்*
திருக்காப்புநான் உன்னைச்சாத்தத் தேசுடைவெள்ளறைநின்றாய்!*
உருக்காட்டும்அந்திவிளக்குஇன்று ஒளிகொள்ளஏற்றுகேன்வாராய்

†போதமர்செல்வக்கொழுந்து புணர்திருவெள்ளறையானை*
மாதர்க்குயர்ந்தஅசோதைமகன் தன்னைக்காப்பிட்டமாற்றம்*
வேதப்பயன்கொள்ளவல்ல விட்டுசித்தன்சொன்னமாலை*
பாதப்பயன்கொள்ளவல்ல பத்தருள்ளார்வினைபோமே. (10)

அடிவரவு:—இந்திரன் கன்று செப்பு கண்ணில் பல்லாயிரவர் கஞ்சன் கள்ளம் இன்பம் இருக்கொடு போதமர் வெண்ணெய் விழுங்கி.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்

—*—

மன்னோர் விண்ணோர்தொழும் திருவேங்கடத்தானிடத்தில் சேஷத்துவமாக அநுஸந்திக்குமது.

சென்னியோங்கு

பெரியாழ்வார் திருமொழி 5-ஆம் பத்து, 4-ம் திருமொழி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஸ்ரீராகம் - திரிபுடைதாளம்.

†சென்னியோங்கு தண்திருவேங்கடமுடையாய்!* உலகு
தன்னைவாழநின்றநம்பீ! தாமோதரா! சதிரா* [கொண்டு
என்னையும் என்னுடைமையும்உன் சக்கரப் பொறியொற்றிக்
நின்னருளே புரிந்திருந்தேன் இனிஎன்திருக்குறிப்பே. (1)

Koviloor Digital Library

பறவையேறுபரம்புருடா! நீஎன்னைக்கைக்கொண்டபின்*
பிறவியென்னும்கடலும்வற்றிப் பெரும்பதமாகின்றதால்*
இறவுசெய்யும்பாவக்காடு தீக்கொளீஇவேகின்றதால்*
அறிவையென்னும் அமுதவாறு தலைப்பற்றிவாய்க்கொண்டதே

எம்மனா! என்குலதெய்வமே! என்னுடைநாயகனே! [வார்*
நின்றுள்ளேனாய்ப்பெற்றநன்மை இவ்வுலகினில் ஆர்பெறு-
நம்மன்போலேவீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ளபாவமெல்லாம்*
சும்மெனாதேகைவிட்டோடித் தூறுகள்பாய்ந்தனவே. (3)

கடல்கடைந்துஅமுதம்கொண்டுகலசத்தைநிறைத்தாற்போல்*
உடலுருகிவாய்திறந்து மடுத்துஉன்னைநிறைத்துகொண்டேன்*
கொடுமைசெய்யும் கூற்றமும் என்கோலாடிகுறுகப்பெறா*
தடவரைத்தோள்சக்கரபாணீ! சார்ங்கவிற்சேவகனே! (4)

பொன்னைக்கொண்டுஉரைகல்மீதேநிறமெழஉரைத்தாற்போல்
உன்னைகொண்டுஎன்நாவகம்பால்மாற்றின்றிஉரைத்துக்கொண்டேன்*
உன்னைக்கொண்டுஎன்னுள்வைத்தேன் என்னையும்உன்னிலிட்டேன்*
என்னப்பா! என்இருடீகேசா! என்னுயிர்க்காவலனே! (5)

உன்னுடையவிக்கிரமம் ஒன்றொழியாமல் எல்லாம்*
என்னுடையநெஞ்சகம்பால் சுவர்வழிஎழுதிக்கொண்டேன்*
மன்னடங்கமழுவலங்கைக்கொண்ட இராமநம்பீ!
என்விடைவந்துஎம்பெருமான்! இனிஎங்குப்போகின்றதே?(6)

பருப்பதத்துக்கயல்பொறித்தபாண்டியர்குலபதிபோல்*
திருப்பொலிந்தசேவடி என்சென்னியின்மேல்பொறித்தாய்*
மருப்பொசித்தாய்! மல்லடர்த்தாய்! என்றென்றுஉன்வாசகமே*
உருப்பொலிந்தநாவினேனை உனக்குஉரித்தாக்கினையே. (7)

அனந்தன்பாலும்கருடன்பாலும் ஐதுநொய்தாகவைத்து* என்
மனந்தனுள்ளேவந்துவைகி வாழச்செய்தாய் எம்பிரான்!*
நினைந்து என்னுள்ளேநின்றுநெக்குக் கண்கள் அசும்பொழுக*
நினைந்திருந்தேசிரமம்தீர்ந்தேன் நேமிநெடியவனே! (8)

†பனிக்கடலில்பள்ளிகோளைப் பழகவிட்டு* ஓடிவந்து என்
மனக்கடலில்வாழவல்ல மாயமணாளநம்பீ!*
தனிக்கடலே தனிச்சுடரே தனியுலகே என்றென்று*
உனக்கிடமாயிருக்க என்னை உனக்குஉரித்தாக்கினையே. (9)

Koviloor Digital Library

†தடவரைவாய்மிளிர்ந்துமின்னும் தவளநெடுங்கொடிபோல்*
சுடரொளியாய்நெஞ்சினுள்ளே தோன்றும்என்சோதிநம்பீ!*
வடதடமும்வைகுந்தமும் மதிள்துவராபதியும்*
இடவகைகள்இகழ்ந்திட்டுஎன்பால் இடவகைகொண்டனையே.

†வேயர்தங்கள்குலத்துதித்த விட்டுசித்தன்மனத்தே*
கோயில்கொண்ட கோவலனைக்கொழுங்குளிர்முகில்வண்ணனை*
ஆயரேற்றைஅமரர்கோவை அந்தணர்தம் அமுதத்தினை*
சாயைபோலப்பாடவல்லார்தாமும் அணுக்கர்களே. (11)

அடிவரவு:—சென்னி பறவை எம்மனு கடல் பொன் உன் பருப்பு அனந்தன் பனி தடவரை வேயர் மார்கழி.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

—*—

திருமேனிஸௌந்தர்ய தர்சநாநந்தரப்பேறுதருமது

திருப்பாணாழ்வார் அருளிச்செய்த

அமலனுதிபிரான்

பெரியநம்பிகள் அருளிச்செய்தது

ஆபாதசூடமநுபூய ஹரிம் சயாநம்
மத்யே கவேரதுஹிதுர் முதிதாந்தராத்மா ।
அத்ரஷ்ட்ருதாம் நயநயோர் விஷயாந்தராணும்
யோ நிஶ்சிகாய மநவை முநிவாஹநம் தம் ॥

திருமலைநம்பிகள் அருளிச்செய்தது
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

காட்டவேகண்டபாதகமலம் நல்லாடைஉந்தி*
தேட்டருமுதரபந்தம் திருமார்புகண்டம்செவ்வாய்*
வாட்டமில்கண்கள்மேனி முனியேறித்தனிபுகுந்து*
பாட்டினால்கண்டுவாழும் பாணர்தாள்பரவினோமே.

Koviloor Digital Library

ஆரியத்துறை

பமுருகல்யாணிராகம் - திரிபுடைதாளம்

†அமலனுதிபிரான் அடியார்க்குஎன்னை ஆட்படுத்த
விமலன்*விண்ணவர்கோன் விரையார்பொழில்வேங்கடவன்*
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள்மதிளரங்கத்தம்மான்*திருக்
கமலபாதம்வந்து என் கண்ணினுள்ளன ஒக்கின்றதே. (1)

உவந்தவுள்ளத்தனாய் உலகமளந்து அண்டமுற*
நிவந்தநீள்முடியன் அன்றுநேர்ந்த நிசாசரரை*
கவர்ந்தவெங்கணைக்காகுத்தன்கடியார்பொழிலரங்கத்தம்மான்*அரைச்
சிவந்தஆடையின்மேல் சென்றதாம்என்சிந்தனையே. (2)

†மந்திபாய் வடவேங்கடமாமலை* வானவர்கள்
சந்திசெய்யநின்றான் அரங்கத்தரவினணையான்*
அந்திபோல்நிறத்தாடையும் அதன்மேலயனைப்படைத்ததோரெழில்*
உந்திமேலதன்றோ அடியேனுள்ளத்தின்னுயிரே. (3(

சதுரமாமதிள்சூழ் இலங்கைக்கிறைவன் தலைபத்து
உதிரவோட்டி*ஓர்வெங்கணைஉய்த்தவன் ஓதவண்ணன்*
மதுரமாவண்டுபாட மாமயிலாடரங்கத்தம்மான்*திருவயிற்று
உதரபந்தம் என்னுள்ளத்துள் நின்றுஉலாகின்றதே. (4)

பாரமாய பழவினைப்பற்றறுத்து* என்னைத்தன்
வாரமாக்கிவைத்தான் வைத்ததன்றி என்னுள்புகுந்தான்*
கோரமாதவம்செய்தனன்கொல் அறியேன் அரங்கத்தம்மான்*திரு
ஆரமார்பதன்றோ அடியேனைஆட்கொண்டதே. (5)

துண்டவெண்பிறையன் துயர்தீர்த்தவன்*அஞ்சிறைய
வண்டுவாழ்பொழில்சூழ் அரங்கநகர்மேய அப்பன்*
அண்டரண்டபகிரண்டத்து ஒருமாநிலம்எழுமால்வறை*முற்றும்
உண்டகண்டம்கண்டீர் அடியேனைஉய்யக்கொண்டதே. (6)

கையினார்சுரிசங்கனலாழியர்* நீள்வரைபோல்
மெய்யனார் துளபவிரையார் கமழ்நீள்முடி எம்
ஐயனார்* அணியரங்கனார் அரவினணைமிசைமேயமாயனார்*
செய்யவாய்ஐயோ! என்னைச்சிந்தைகவர்ந்ததுவே. (7)

Koviloor Digital Library

பரியனாகிவந்த அவுணனுடலிடந்த* அமரர்க்கு
அரியஆதிப்பிரான் அரங்கத்தமலன்முகத்து*
கரியவாகிப்புடைபரந்து மிளிர்ந்துசெவ்வரியோடி* நீண்டஅப்
பெரியவாயகண்கள் என்னைப்பேதைமைசெய்தனவே. (8)

†ஆலமரத்தினிலைமேல் ஒருபாலகனாய்*
ஞாலமேழும்உண்டான் அரங்கத்தரவினணையான்*
கோலமாமணியாரமும்முத்துத்தாமமும்முடிவில்லதோரெழில்*
நீலமேனிஐயோ! நிறைகொண்டது என்நெஞ்சினையே. (9)

†கொண்டல்வண்ணனைக் கோவலனாய்வெண்ணெய்
உண்டவாயன்* என்னுள்ளம் கவர்ந்தானை*
அண்டர்கோன் அணியரங்கன் என்னமுதினைக்
கண்டகண்கள் *மற்றொன்றினைக் காணாவே. (10)

அடிவரவு:— அமலன் உவந்த மந்தி சதுரம் பாரம் துண்டம் கை பரி ஆலம் கொண்டல் கண்ணி.

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்.

—*—

மாயவன் தன்னை மணஞ்செயக்கண்ட தூயநற்கனவைத்
தோழிக்கு உரைத்தல்.

ஆண்டாள் அருளிச்செய்த

நாச்சியார் திருமொழி, 6-ஆம்-திருமொழி

வாரணமாயிரம்

———

திருக்கண்ணமங்கையாண்டான் அருளிச்செய்தவை
இருவிகற்ப நேரிசைவெண்பா.

அல்லிநாள்தாமரைமே லாரணங்கின் இன்துணைவி*
மல்லிநாடாண்டமடமயில் மெல்லியலாள்*
ஆயர்குலவேந்தனாகம்தாள்* தென்புதுவை
வேயர்பயந்த விளக்கு.

Koviloor Digital Library

கட்டளைக்கலித்துறை

கோலச்சுரிசங்கை மாயன்செவ்வாயின் குணம்வினவும்
சீலத்தனள் *தென் திருமல்லிநாடி *செழுங்குழல்மேல்
மாலைத்தொடை தென்னரங்கருக்கீயும்மதிப்புடைய
சோலைக்கிளி* அவள் தூயநற்பாதம் துணைநமக்கே.

கலிவிருத்தம்

கல்யாணிராகம் - ரூபகதாளம்

†வாரணமாயிரம் சூழவலஞ்செய்து*
நாரணநம்பி நடக்கின்றானென்றெதிர்*
பூரணபொற்குடம் வைத்துப்புரமெங்கும்*
தோரணம்நாட்டக் கனாக்கண்டேன்தோழீ! நான் (1)

நாளைவதுவை மணமென்று நாளிட்டு*
பாளைகமுகு பரிசுடைப் பந்தற்கீழ்*
கோளரிமாதவன் கோவிந்தனென்பான்ஓர்*
காளைபுகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான். (2)

இந்திரனுள்ளிட்ட தேவர்குழாமெல்லாம்*
வந்திருந்து என்னைமகட்பேசி மந்திரித்து*
மந்திரக்கோடியுடுத்தி மணமாலை*
அந்தரிசூட்டக்கனாக்கண்டேன் தோழீ! நான். (3)

நால்திசைத்தீர்த்தம்கொணர்ந்து நனிநல்கி*
பார்ப்பனச்சிட்டர்கள் பல்லாரெடுத்தேத்தி*
பூப்புனைகண்ணிப் புனிதனோடுஎன்தன்னை*
காப்புநான்கட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான். (4)

கதிரொளிதீபம் கலசமுடனேந்தி*
சதிரிளமங்கையர்தாம் வந்து எதிர்கொள்ள*
மதுரையார்மன்னன் அடிநிலைதொட்டு* எங்கும்
அதிரப்புகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான். (5)

மத்தளம்கொட்ட வரிசங்கம்நின்றூத*
முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்தபந்தற்கீழ்*
மைத்துனன்நம்பி மதுசூதன்வந்து* என்னைக்
கைத்தலம்பற்றக் கனாக்கண்டேன் தோழீ! நான். (6)

Koviloor Digital Library

வாய்நல்லார் நல்லமறையோதிமந்திரத்தால்*
பாசிலைநாணல்படுத்துப் பரிதிவைத்து*
காய்சினமாகளிறன்னான் என்னைப்பற்றி*
தீவலம்செய்யக் கனாக்கண்டேன் தோழீ! நான். (7)

இம்மைக்கும் ஏழேழ்பிறவிக்கும்பற்றாவான்*
நம்மையுடையவன் நாராயணன் நம்பி*
செம்மையுடைய திருக்கையால்தாள்பற்றி*
அம்மிமிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ! நான். (8

வரிசிலைவாள்முகத்து என்னைமார்தாம்வந்திட்டு*
எரிமுகம்பாரித்து என்னைமுன்னேநிறுத்தி*
அரிமுகன் அச்சுதன் கைம்மேல் என்கைவைத்து*
பொரிமுகந்தட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான். (9)

குங்குமமப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து*
மங்கலவீதி வலம்செய்து மணநீர்*
அங்குஅவனோடும்உடன்சென்று அங்குஆனைமேல்*
மஞ்சனமாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான். (10)

ஆயனுக்காகத் தான்கண்டகனாவினை*
வேயர்புகழ் வில்லிபுத்தூர்க்கோன்கோதைசொல்*
தூயதமிழ்மாலை ஈரைந்தும்வல்லவர்*
வாயும்நன்மக்களைப்பெற்றுமகிழ்வரே. (11)

அடிவரவு:— வாரணம் நாளை இந்திரன் நால்திசை கதிர் மத்தளம் வாய்நல்லார் இம்மைக்கும் வரிசிலை குங்குமம் ஆயனுக்காக கருப்பூரம்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்

*—

Koviloor Digital Library

மதுரகவியாழ்வார் அருளிச்செய்த
கண்ணிநுண் சிறுத்தாம்பு

நாதனுக்கு நாலாயிரமுரைக்கைக்கு மூலமந்திரமானது.
நாதமுனிகள் அருளிச்செய்தவை.

அவிதவிஷயாந்தர: சடாரேருபநிஷதாமுபகாநமாத்ரபோக:
அபிச குணவசாத் ததேகசேஷீ மதுரகவிர்ஹ்ருதயே மமாவிரஸ்து

இருவிகற்ப நேரிசைவெண்பா

வேறொன்றும் நானறியேன் வேதம் தமிழ்செய்த*
மாறன் சடகோபன் வண்குருகூர்—ஏறு* எங்கள்
வாழ்வாமென்றேத்தும் மதுரகவியார்* எம்மை
ஆள்வாரவரே அரண்.

கலிவிருத்தம்

ஆரபிராகம் - ஆதிதாளம்

‡கண்ணிநுண்சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணியபெருமாயன்* என்னப்பனில்*
நண்ணித்தென்குருகூர் நம்பிஎன்றக்கால்*
அண்ணிக்கும் அமுதூறும் என்நாவுக்கே. (1)

நாவினால்நவிற்று இன்பமெய்தினேன்*
மேவினேன் அவன் பொன்னடிமெய்ம்மையே*
தேவுமற்றறியேன் குருகூர்நம்பி*
பாவினின்னிசை பாடித்திரிவனே. (2)

திரிதந்தாகிலும் தேவபிரானுடை*
கரியகோலத் திருவுருக்காண்பன்நான்*
பெரியவண்குருகூர் நகர்நம்பிக்குஆள்
உரியனாய்* அடியேன்பெற்றநன்மையே. (3)

நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்*
புன்மையாகக் கருதுவராதலின்*
அன்னையாய்அத்தனாய் என்னையாண்டிடும்
தன்மையான்* சடகோபன் என்நம்பியே. (4)

Koviloor Digital Library

நம்பினேன் பிறர்நன்பொருள்தன்னையும்*
நம்பினேன் மடவாரையும்முன்னெலாம்*
செம்பொன்மாடத் திருக்குருகூர்நம்பிக்கு
அன்பனாய்* அடியேன் சதிர்த்தேன்இன்றே. (5)

இன்றுதொட்டும் எழுமையும்எம்பிரான்*
நின்றுதன்புகழ் ஏத்தஅருளினான்*
குன்றமாடத் திருக்குருகூர்நம்பி*
என்றும்என்னை இகழ்விலன்காண்மினே. (6)

கண்டுகொண்டுஎன்னைக் காரிமாறப்பிரான்*
பண்டைவல்வினை பாற்றியருளினான்*
எண்திசையும் அறியஇயம்புகேன்*
ஒண்தமிழ்ச் சடகோபனருளையே (7)

அருள்கொண்டாடும் அடியவர்இன்புற*
அருளினான் அவ்வருமறையின்பொருள்*
அருள்கொண்டு ஆயிரம்இன்தமிழ்பாடினான்*
அருள்கண்டீர் இவ்வுலகினில்மிக்கதே. (8)

மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள்*
நிற்கப்பாடி என்நெஞ்சுள்நிறுத்தினான்*
தக்கசீர்ச் சடகோபன்என்நம்பிக்கு* ஆள்
புக்ககாதல் அடிமைப்பயனன்றே. (9)

†பயனன்றாகிலும் பாங்கலராகிலும்*
செயல்நன்றாகத்திருத்திப் பணிகொள்வான்!*
குயில்நின்றார்பொழில்சூழ் குருகூர்நம்பி!*
முயல்கின்றேன் உன்தன்மொய்கழற்கன்பையே. (10)

†அன்பன்தன்னை அடைந்தவர்கட்கெல்லாம்
அன்பன்* தென்குருகூர் நகர்நம்பிக்கு*
அன்பனாய் மதுரகவிசொன்னசொல்
நம்புவார்பதி* வைகுந்தம்காண்மினே. (11)

அடிவரவு:—கண்ணி நாவினால் திரி நன்மை நம்பினேன் இன்று கண்டு அருள் மிக்க பயன் அன்பன் வாடினேன்.

மதுரகவியாழ்வார் திருவடிகளே சரணம்.

—*—

Koviloor Digital Library

ஸ்ரீய:பதியின் திருவடிகளிலே அடிமைசெய்து உஜ்ஜீவி என்று
நம் திருவுள்ளத்தைக்குறித்து உரைத்தல்.

நம்மாழ்வார் அருளிச்செய்த

கோயில் திருவாய்மொழி

நாதமுனிகள் அருளிச்செய்தது.

பக்தாம்ருதம் விச்வஜநாநுமோதநம்
ஸர்வார்த்ததம் ஸ்ரீசடகோபவாங்மயம் ।
ஸஹஸ்ரசாகோபநிஷத்ஸமாகமம்
நமாம்யஹம் த்ராவிடவேதஸாகரம் ॥

ஈச்வரமுனிகள் அருளிச்செய்தது.

இருவிகற்ப நேரிசைவெண்பா.

திருவழுதிநாடென்றும் தென்குருகூரென்றும்*
மருவினிய வண்பொருநலென்றும்*—அருமறைகள்
அந்தாதிசெய்தானடியிணையே எப்பொழுதும்*
சிந்தியாய் நெஞ்சே! தெளிந்து.

சொட்டைநம்பிகள் அருளிச்செய்தது.

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர்பேணும்*
இனத்தாரையல்லாது இறைஞ்சேன்*—தனத்தாலும்
ஏதும்குறைவிலேன் எந்தைசடகோபன்*
பாதங்கள் யாமுடையபற்று.

அனந்தாழ்வான் அருளிச்செய்தது.

ஏய்ந்தபெருங்கீர்த்தி இராமானுசமுனிதன்*
வாய்ந்தமலர்ப்பாதம் வணங்குகின்றேன்*—ஆய்ந்தபெருஞ்
சீரார்சடகோபன் செந்தமிழ்வேதம்தரிக்கும்*
பேராதவுள்ளம்பெற.

பட்டர் அருளிச்செய்தவை.

வான்திகழும்சோலை மதிளரங்கர்வண்புகழ்மேல்*
ஆன்றதமிழ்மறைகளாயிரமும்*—ஈன்ற
முதல்தாய்சடகோபன் மொய்ம்பால்வளர்த்த*
இதத்தாய் இராமானுசன்.

Koviloor Digital Library

மிக்கவிறைநிலையும் மெய்யாம் உயிர்நிலையும்*
தக்கநெறியும் தடையாகித்—தொக்கியலும்*
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்*
யாழினிசை வேதத் தியல்.

திருவாய்மொழி, 1-ஆம் பத்து, 1-ஆம் திருவாய்மொழி.

கலி விருத்தம்.

கமாஸ்ராகம் - ஆதிதாளம்.

†உயர்வறவுயர்நலம் உடையவன்யவனவன்*
மயர்வறமதிநலம் அருளினன்யவனவன்*
அயர்வறுமமரர்கள் அதிபதியவனவன்*
துயரறுசுடரடி தொழுதெழுஎன்மனனே! (1)

மனனகமலமற மலர்மிசையெழுதரும்*
மனனுணர்வளவிலன் பொறியுணர்வவையிலன்
இனனுணர்முழுநலம் எதிர்நிகழ்கழிவினும்*
இனனிலனெனனுயிர் மிகுநரையிலனே. (2)

இலனதுவுடையனிதென நினைவரியவன்*
நிலனிடைவிசும்பிடை உருவினன் அருவினன்*
புலனொடுபுலனலன் ஒழிவிலன்பரந்த* அந்
நலனுடையொருவனை நணுகினம்நாமே. (3)

நாமவனிவனுவன் அவளிவளுவளெவள்*
தாமவரிவருவர் அதுவிதுவுதுவெது*
வீமவையிவையுவை அவைநலம் தீங்கவை*
ஆமவையாயவை ஆய்நின்றஅவரே. (4)

அவரவர்தமதமது அறிவறிவகைவகை*
அவரவரிறையவர் என் அடியடைவர்கள்*
அவரவரிறையவர் குறைவிலர் இறையவர்*
அவரவர்விதிவழி அடையநின்றனரே. (5)

நின்றனர் இருந்தனர் கிடந்தனர்திரிந்தனர்*
நின்றிலர் இருந்திலர் கிடந்திலர்திரிந்திலர்*
என்றுமொரியல்வினர் எனநினைவரியவர்*
என்றுமொரியல்வொடு நின்றவெந்திடரே. (6)

Koviloor Digital Library

திடவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை*
படர்பொருள்முழுவதுமாய் அவையவைதொறும்*
உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும்பரந்துளன்*
சுடர்மிகுசுருதியுள் இவையுண்டசுரனே. (7)

சுரரறிவருநிலை விண்முதல்முழுவதும்*
வரன்முதலாயவை முழுதுண்டபரபரன்*
புரமொருமூன்றெரித்து அமரர்க்குமறிவியந்து*
அரனயனென உலகழித்தமைத்துளனே. (8)

உளனெனிலுளன் அவனுருவம் இவ்வுருவுகள்*
உளனலனெனில் அவனருவம் இவ்வருவுகள்*
உளனென இலனென இவைகுணமுடைமையில்*
உளனிருதகைமையொடு ஒழிவிலன்பரந்தே. (9)

பரந்ததண்பரவையுள் நீர்தொறும்பரந்துளன்*
பரந்தஅண்டமிதென நிலவிசும் பொழிவற*
கரந்தசிலிடந்தொறும் இடந்திகழ்பொருள்தொறும்*
கரந்தெங்கும் பரந்துளன் இவையுண்டகரனே. (10)

†கரவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை*
வரனவில்திறம்வலி அளிபொறையாய்நின்ற*
பரனடிமேல் குருகூர்ச்சடகோபன்சொல்*
நிரனிறையாயிரத்து இவைபத்தும்வீடே. (11)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

—*—

இதர விஷயங்களை விட்டு பகவத்பக்தியைப் பண்ணி உஜ்ஜீவியுங்கோள் என்று பரரைக்குறித்து உபதேசிக்கின்றார். திருவாய்மொழி, 1-ஆம் பத்து, 2-ஆம் திருவாய்மொழி.

வஞ்சித்துறை

செஞ்சுருட்டிராகம் - அடதாளம்

வீடுமின்முற்றவும்* வீடுசெய்து* உம்முயிர்
வீடுடையானிடை* வீடுசெய்ம்மினே. (1)

மின்னின்நிலையில* மன்னுயிராக்கைகள்*
என்னுமிடத்து* இறை உன்னுமின்நீரே. (2)

Koviloor Digital Library

நீர்நுமதென்றிவை* வேர்முதல்மாய்த்து* இறை
சேர்மின்உயிர்க்கு* அதன் நேர்நிறையில்லே. (3)

இல்லதும்உள்ளதும்* அல்லதுஅவனுரு*
எல்லையில் அந்நலம்* புல்குபற்றற்றே. (4)

அற்றதுபற்றெனில்* உற்றதுவீடுஉயிர்*
செற்றதுமன்னுறில்* அற்றிறைபற்றே. (5)

பற்றிலன்ஈசனும்* முற்றவும்நின்றனன்*
பற்றிலையாய்* அவன் முற்றிலடங்கே. (6)

அடங்கெழில்சம்பத்து* அடங்கக்கண்டு* ஈசன்
அடங்கெழிலஃதென்று* அடங்குகஉள்ளே. (7)

உள்ளமுரைசெயல்* உள்ள இம்மூன்றையும்*
உள்ளிக்கெடுத்து* இறை உள்ளிலொடுங்கே. (8)

ஒடுங்கஅவன்கண்* ஒடுங்கலுமெல்லாம்*
விடும்பின்னும் ஆக்கை* விடும்பொழுது எண்ணே. (9)

எண்பெருக்கந்நலத்து* ஒண்பொருளீறில*
வண்புகழ்நாராணன்* திண்கழல்சேரே. (10)

†சேர்த்தடத்* தென்குருகூர்ச்சடகோபன்சொல்*
சீர்த்தொடையாயிரத்து* ஓர்த்தஇப்பத்தே. (11)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

—*—

இளமை கெடுவதன்முன்னம் திருமாலிருஞ்சோலைமலையைச் சேர்ந்து உய்யும்படி உபதேசிக்கிறார்.

திருவாய் மொழி, 2-ஆம் பத்து, 10-ஆம் திருவாய்மொழி.

கலி விருத்தம்

கேதாரகௌளராகம் - ஆதிதாளம்

†கிளரொளியிளமை கெடுவதன்முன்னம்*
வளரொளிமாயோன் மருவியகோயில்*
வளரிளம்பொழில்சூழ் மாலிருஞ்சோலை*
தளர்விலராகில் சார்வதுசதிரே. (1)

Koviloor Digital Library

சதிரிளமடவார் தாழ்ச்சியை மதியாது*
அதிர்குரல்சங்கத்து அழகர்தம்கோயில்*
மதிதவழ்குடுமி மாலிருஞ்சோலை*
பதியதுஏத்தி எழுவதுபயனே. (2)

பயனல்லசெய்து பயனில்லைநெஞ்சே!*
புயல்மழைவண்ணர் புரிந்துறைகோயில்*
மயல்மிகுபொழில்சூழ் மாலிருஞ்சோலை*
அயல்மலையடைவது அதுகருமமே. (3)

கருமவன்பாசம் கழித்துழன்றுய்யவே*
பெருமலையெடுத்தான் பீடுறைகோயில்*
வருமழைதவழும் மாலிருஞ்சோலை*
திருமலையதுவே அடைவதுதிறமே. (4)

திறமுடைவலத்தால் தீவினைபெருக்காது*
அறமுயலாழிப் படையவன்கோயில்*
மறுவில்வண்சுனைசூழ் மாலிருஞ்சோலை*
புறமலைசாரப்போவதுகிறியே. (5)

கிறியெனநினைமின் கீழ்மைசெய்யாதே*
உறியமர்வெண்ணெய் உண்டவன்கோயில்*
மறியொடுபிணைசேர் மாலிருஞ்சோலை*
நெறிபடஅதுவே நினைவதுநலமே. (6)

நலமெனநினைமுன் நரகழுந்தாதே*
நிலமுனம்இடந்தான் நீடுறைகோயில்*
மாமறுமதிசேல மாலிருஞ்சோலை*
வலமுறையெய்தி மருவுதல்வலமே. (7)

வலம்செய்துவைகல் வலம்கழியாதே*
வலம்செய்யும் ஆயமாயவன்கோயில்*
வலம்செய்யும்வானோர் மாலிருஞ்சோலை*
வலம்செய்துநாளும் மருவுதல்வழக்கே. (8)

வழக்கெனநினைமின் வல்வினைமூழ்காது*
அழக்கொடியட்டான் அமர்பெருங்கோயில்
மழக்களிற்றினம்சேர் மாலிருஞ்சோலை*
தொழக்கருதுவதே துணிவதுசூதே. (9)

Koviloor Digital Library

சூதென்றுகளவும் சூதும்செய்யாதே*
வேதம்முன்விரித்தான் விரும்பியகோயில்*
மாதுறுமயில்சேர் மாலிருஞ்சோலை*
போதவிழ்மலையே புகுவதுபொருளே. (10)

†பொருளென்றுஇவ்வுலகம் படைத்தவன்புகழ்மேல்*
மருளில்வண்குருகூர் வண்சடகோபன்*
தெருள்கொள்ளச்சொன்ன ஓராயிரத்துள் இப்பத்து*
அருளுடையவன்தாள் அணைவிக்கும்முடித்தே. (11)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

—*—

தெற்குத் திருமலையில் தாம் அனுபவிக்கக்கோரி, பெருது சோகிக்கிற ஆழ்வார்க்கு ஈச்வரன் வடக்குத் திருமலையைக் காட்டக் கண்டு நிலைபெறுகிருர்.

திருவாய்மொழி 3-ஆம் பத்து, 3-ஆம் திருவாய்மொழி

கலி விருத்தம்.

சௌராஷ்டிரராகம் - அடதாளம்.

†ஒழிவில்காலமெல்லாம் உடனாய்மன்னி
வழுவிலா அடிமை செய்யவேண்டும்நாம்*
தெழிகுரலருவித் திருவேங்கடத்து*
எழில்கொள்சோதி எந்தைதந்தைதந்தைக்கே. (1)

எந்தைதந்தைதந்தை தந்தைதந்தைக்கும்
முந்தை* வானவர்வானவர்கோனொடும்*
சிந்துபூமகிழும் திருவேங்கடத்து*
அந்தமில்புகழ்க் காரெழிலண்ணலே. (2)

அண்ணல்மாயன் அணிகொள்செந்தாமரைக்
கண்ணன்* செங்கனிவாய்க் கருமாணிக்கம்*
தெண்ணிறைச்சுனைநீர்த் திருவேங்கடத்து*
எண்ணில்தொல்புகழ் வானவரீசனே. (3)

ஈசன்வானவர்க்கு என்பன் என்றால்* அது
தேசமோ திருவேங்கடத்தானுக்கு?*
நீசனேன் நிறைவொன்றுமிலேன்* என்கண்
பாசம்வைத்த பரஞ்சுடர்ச்சோதிக்கே. (4)

Koviloor Digital Library

சோதியாகி எல்லாவுலகும்தொழும்*
ஆதிமூர்த்தியென்றால் அளவாகுமோ?*
வேதியர் முழுவேதத்தமுதத்தை*
தீதில்சீர்த் திருவேங்கடத்தானையே. (5)

வேங்கடங்கள் மெய்ம்மேல்வினைமுற்றவும்*
தாங்கள் தங்கட்கு நல்லனவேசெய்வார்*
வேங்கடத்துறைவார்க்கு நமவென்ன-
லாம்கடமை* அதுசுமந்தார்கட்கே. (6)

சுமந்துமாமலர் நீர்சுடர் தூபங்கொண்டு*
அமர்ந்துவானவர் வானவர்கோனொடும்*
நமன்றெழும் திருவேங்கடம்நங்கட்கு*
சமன்கொள்வீடுதரும் தடங்குன்றமே. (7)

†குன்றமேந்திக் குளிர்மழைகாத்தவன்
அன்றுஞாலம் அளந்தபிரான்* பரன்
சென்றுசேர் திருவேங்கடமாமலை*
ஒன்றுமேதொழ நம்வினைஓயுமே. (8)

ஓயும்மூப்புப் பிறப்பிறப்புப்பிணி*
வீயுமாறுசெய்வான் திருவேங்கடத்தாயன்*
நாள்மலராம் அடித்தாமரை*
வாயுள்ளும்மனத்துள்ளும் வைப்பார்கட்கே. (9)

வைத்தநாள்வரை எல்லைகுறுகிச்சென்று*
எய்த்திளைப்பதன்முன்னம் அடைமினோ*
பைத்தபாம்பணையான் திருவேங்கடம்*
மொய்த்தசோலை மொய்பூந்தடம்தாழ்வரே. (10)

†தாள்பரப்பி மண்தாவியஈசனை*
நீள்பொழில் குருகூர்ச்சடகோபன்சொல்*
கேழிலாயிரத்து இப்பத்தும்வல்லவர்*
வாழ்வர்வாழ்வெய்தி ஞாலம்புகழவே. (11)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

—✡—

Koviloor Digital Library

இதர தேவதைகள்பக்கல் உண்டான பரத்வசங்கையை அறுத்து ஸர்வஸ்ரஷ்டாவான நாராயணன் தான் ஸந்நிதி கொண்டு திருநகரியிலே ஸந்நிஹிதன் ஆனுனகையால் அவனை ஆச்ரயியுங்கோள் என்று அருளிச்செய்கிறார்.

திருவாய்மொழி 4-ஆம் பத்து, 10-ஆம் திருவாய்மொழி.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்

சுருட்டிராகம் - ரூபகதாளம்.

†ஒன்றும்தேவும்உலகும்உயிரும் மற்றும்யாதுமில்லா
அன்று* நான்முகன்தன்னெடு தேவருலகோடு உயிர்படைத்தான்*
குன்றம்போல்மணிமாடநீடு திருக்குருகூரதனுள்*
நின்றஆதிப்பிரான்நிற்க மற்றைத்தெய்வம்நாடுதிரே. (1)

நாடிநீர்வணங்கும்தெய்வமும் உம்மையும்முன்படைத்தான்*
வீடில்சீர்ப்புகழாதிப்பிரான் அவன்மேவியுறைகோயில்*
மாடமாளிகைசூழ்ந்தழகாய திருக்குருகூரதனை*
பாடியாடிப்பரவிச்சென்மின்கள் பல்லுலகீர்! பரந்தே. (2)

பரந்ததெய்வமும் பல்லுலகும்படைத்து அன்றுஉடனேவிழுங்கி*
கரந்துமிழ்ந்துகடந்திடந்தது கண்டும்தெளியகில்லீர்*
சிரங்களால்அமரர்வணங்கும் திருக்குருகூரதனுள்*
பரன்திறமன்றிப்பல்லுலகீர்! தெய்வம்மற்றில்லைபேசுமினே. (3)

பேசநின்றசிவனுக்கும் பிரமன்தனக்கும்பிறர்க்கும்
நாயகன்அவனே*கபாலநன்மோக்கத்துக் கண்டுகொண்மின்*
தேசமாமதிள்சூழ்ந்தழகாய திருக்குருகூரதனுள்*
ஈசன்பால்ஓரவம்பறைதல் என்னுவதுஇலிங்கியர்க்கே? (4)

†இலிங்கத்திட்டபுராணத்தீரும் சமணரும் சாக்கியரும்*
வலிந்துவாதுசெய்வீர்களும்மற்றுநுந்தெய்வமுமாகிநின்றுன்*
மலிந்துசெந்நெல்கவரிவீசும் திருக்குருகூரதனுள்*
பொலிந்துநின்றபிரான்கண்டீர் ஒன்றும்பொய்யில்லைபோற்றுமினே.

போற்றிமற்றோர்தெய்வம் பேணப்புறத்திட்டு* உம்மைஇன்னே
தேற்றிவைத்தது எல்லீரும்வீடுபெற்றால் உலகில்லையென்றே*
சேற்றில் செந்நெல்கமலமோங்கு திருக்குருகூரதனுள்*
ஆற்றவல்லவன் மாயம்கண்டீர் அதறிந்தறிந்தோடுமினே. (6)

Koviloor Digital Library

ஓடியோடிப்பலபிறப்பும்பிறந்து மற்றோர் தெய்வம்*
பாடியாடிப்பணிந்து பல்படிகால்வழியேறிக்கண்டீர்*
கூடிவானவரேத்தநின்ற திருக்குருகூரதனுள்*
ஆடுபுட்கொடியாதிமூர்த்திக்கு அடிமைபுகுவதுவே. (7)

புக்கடிமையினால்தன்னைக்கண்ட மார்க்கண்டேயனவனை*
நக்கபிரானும் அன்றுய்யக்கொண்டது நாராயணனருளே*
கொக்கலர்தடந்தாழைவேலித் திருக்குருகூரதனுள்*
மிக்கஆதிப்பிரான்நிற்க மற்றைத்தெய்வம்விளம்புதிரே. (8)

விளம்பும் ஆறுசமயமும் அவையாகியும்மற்றும்தன்பால்*
அளந்துகாண்டற்கரியனாகிய ஆதிப்பிரானமரும்*
வளங்கொள்தண்பணைசூழ்ந்தழகாய திருக்குருகூரதனை*
உளங்கொள்ஞானத்துவைம்மின் உம்மையுய்யக் கொண்டுபோ
[குறிலே. (9)

உருவதாவதெத்தேவும் எவ்வுலகங்களும்மற்றும்தன்பால்*
மருவில்மூர்த்தியோடொத்து இத்தனையும்நின்றவண்ணம்நிற்கவே*
செறுவில்செந்நெல்கரும்பொடோங்கு திருக்குருகூரதனுள்*
குறியமாணுருவாகியநீள்குடக் கூத்தனுக்கு ஆட்செய்வதே.

†ஆட்செய்தாழிப்பிரானைச்சேர்ந்தவன் வண்குருகூர்நகரான்*
நாட்கமழ்மகிழ்மாலைமார்பினன் மாறன்சடகோபன்* [லார்*
வேட்கையால்சொன்னபாடல் ஆயிரத்துள் இப்பத்தும்வல்-
மீட்சியின்றிவைகுந்தமாநகர் மற்றதுகையதுவே. (11)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

—*—

ஈச்வரன் தர்சந ஸ்பர்சந வார்த்தைகளொன்றும் செய்யாமையாலே புக்கு தம் அபேக்ஷிதங்களைக் கிட்டுவோமென்றெண்ணி கிட்டாமல் அவஸந்நராகிறார்.

திருவாய்மொழி 5-ஆம் பத்து, 8-ஆம் திருவாய்மொழி.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்

தந்யாசிராகம் - ஆதிதாளம்

†ஆராவமுதே! அடியேனுடலம் நின்பால் அன்பாயே*
நீராயலைந்துகரைய உருக்குகின்றநெடுமாலே!*
சீரார்செந்நெல்கவரிவீசும் செழுநீர்த்திருக்குடந்தை*
ஏரார்கோலந்திகழக்கிடந்தாய்! கண்டேன்எம்மானே! (1)

Koviloor Digital Library

எம்மானே! என்வெள்ளைமூர்த்தி! என்னையாள்வானே!*
எம்மாவுருவும்வேண்டுமாற்றால் ஆவாய்! எழிலேறே!*
செம்மாகமலம் செழுநீர்மிசைக்கண்மலரும் திருக்குடந்தை*
அம்மாமலர்க்கண்வளர்கின்றானே! என்நான் செய்கேனே? (2)

என்நான்செய்கேன்? யாரேகளைகண்? என்னைஎன்செய்கின்றாய்?*
உன்னாலல்லால்யாவராலும் ஒன்றும்குறைவேண்டேன்*
கன்னார்மதில்சூழ்குடந்தைக்கிடந்தாய்! அடியேனருவாணாள்*
சென்னாள்எந்நாள்? அந்நாள்? உனதாள்பிடித்தேசெலக்காணே.

செலக்காண்கிற்பார்காணுமளவும் செல்லும்கீர்த்தியாய்!*
உலப்பிலானே! எல்லாவுலகுமுடையவொருமூர்த்தி?* [நான்
நலத்தால்மிக்கார்குடந்தைக்கிடந்தாய்? உன்னைக்காண்பான்
அலப்பாய்* ஆகாசத்தைநோக்கி அழுவன்தொழுவனே. (4)

அழுவன்தொழுவன் ஆடிக்காண்பன் பாடியலற்றுவன்*
தழுவல்வினையால்பக்கம்நோக்கிநாணிக்கவிழ்ந்திருப்பன்*[ணா!*
செழுவொண் பழனக்குடந்தைக் கிடந்தாய்? செந்தாமரைக்கண்-
தொழுவனேனைஉனதாள் சேரும்வகையேசூழ்கண்டாய். (5)

சூழ்கண்டாய்? என்தொல்லைவினையையறுத்து உன்னடிசேரும்
ஊழ்கண்டிருந்தே* தூராக்குழிதூர்த்துஎனைநாள் அகன்றிருப்பன்?*
வாழ்தொல்புகழார்குடந்தைக்கிடந்தாய்?வானோர்கோமானே?*
யாழினிசையே! அமுதே! அறிவின்பயனே! அரியேறே! (6)

அரியேறே! என்னம்பொற்சுடரே! செங்கண்கருமுகிலே!*
எரியே! பவளக்குன்றே! நால்தோளெந்தாய்! உனதருளே*
பிரியாவடிமைஎன்னைக்கொண்டாய்! குடந்தைத்திருமாலே!*
தரியேன்இனிஉன்சரணம்தந்து என்சன்மம்களையாயே. (7)

களைவாய்துன்பம்களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்*
வளைவாய்நேமிப்படையாய்! குடந்தைக்கிடந்தமாமாயா!
தளராவுடலம்எனதாவி சரிந்துபோம்போது*
இளையாது உனதாள்ஒருங்கப்பிடித்துப் போதஇசைநீயே. (8)

இசைவித்துஎன்னைஉன்தாளிணைக்கீழ் இருத்தும்அம்மானே!*
அசைவிலமரர்தலைவர்தலைவா! ஆதிப்பெருமூர்த்தி!*
திசைவில்வீசும்செழுமாமணிகள்சேரும் திருக்குடந்தை*
அசைவிலுலகம்பரவக்கிடந்தாய்! காணவாராயே. (9)

Koviloor Digital Library

வாராவருவாய்வருமென்மாயா! மாயாமூர்த்தியாய்!*
ஆராவமுதாய்அடியேனுவி யகமேதித்திப்பாய்!*
தீராவினைகள்தீரஎன்னையாண்டாய்! திருக்குடந்தை
ஊரா!* உனக்காட்பட்டும் அடியேன்இன்னம் உழல்வேனோ?

†உழலையென்பின்பேய்ச்சிமுலையூடு அவளைஉயிருண்டான்*
கழல்களவையேசரணுகக்கொண்ட குருகூர்ச்சடகோபன்*
குழலின்மலியச்சொன்ன ஓராயிரத்துள்இப்பத்தும்*
மழலைதீரவல்லார் காமர்மானேய்நோக்கியர்க்கே. (11)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

—*—

திருமலையிலே நாய்ச்சிமாருடனேகூடி நின்றருளின ஸௌசீல்யத்தைக் கண்டு பெரியபிராட்டி முன்னிலையாக அநந்யகதித்வத்தை விண்ணப்பம்செய்து சரணம்புக்கு தம்முடைய அத்யவஸாயத்தை அறிவிக்கின்றார்.

திருவாய்மொழி 6-ஆம் பத்து, 10-ஆம் திருவாய்மொழி

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

நாதநாமக்ரியைராகம்-ஆதிதாளம்

†உலகமுண்டபெருவாயா! உலப்பில்கீர்த்தியம்மானே!*
நிலவும்சுடர்சூழொளிமூர்த்தி! நேடியாய்!அடியேனுருயிரே*
திலதமுலகுக்காய்நின்ற திருவேங்கடத்தெம்பெருமானே?*
குலதொல்லடியேன்உனபாதம் கூடுமாறுகூருயே. (1)

கூருய்நீராய்நிலனுகிக் கொடுவல்லசுரர்குலமெல்லாம்*
சீருவெறியும் திருநேமிவேலவா! தெய்வக்கோமானே!*
சேறூர்சுனைத்தாமரைசெந்திமலரும் திருவேங்கடத்தானே!*
ஆருவன்பிலடியேன் உன்னடிசேர்வண்ணம்அருளாயே. (2)

வண்ணமருள்கொளணிமேகவண்ணு!மாயவம்மானே!*
எண்ணம்புகுந்துதித்திக்கும்அமுதே! இமையோரதிபதியே!*
தெண்ணலருவிமணிபொன்முத்தலைக்கும் திருவேங்கடத்
[தானே
அண்ணலே?உன்னடிசேர அடியேற்குஆவாவென்னுயே. (3)

Koviloor Digital Library

ஆவாவென்னாதுஉலகத்தையலைக்கும் அசுரர்வாணாள்மேல்*
தீவாய்வாளிமழைபொழிந்தசிலையா! திருமாமகள்கேள்வா!
தேவா!* சுரர்கள்முனிக்கணங்கள்விரும்பும் திருவேங்கடத்தானே!*
பூவார்கழல்கள் அருவினையேன் பொருந்துமாறுபுணராயே.

புணராநின்றமரமேழ் அன்றெய்தஒருவில்வலவாவோ!*
புணரேய்நின்றமரமிரண்டின் நடுவேபோனமுதல்வாவோ!*
திணரார்மேகமெனக்களிறுசேரும் திருவேங்கடத்தானே!*
திணரார்சார்ங்கத்துஉனபாதம் சேர்வதுஅடியேன்எந்நாளே?

எந்நாளேநாம்மண்ணளந்த இணைத்தாமரைகள்காண்பதற்கென்று*
எந்நாளும்நின்றுஇமையோர்களேத்தி இறைஞ்சிஇனமினமாய்*
மெய்ந்நாமனத்தால்வழிபாடுசெய்யும் திருவேங்கடத்தானே!*
மெய்ந்நானெய்திஎந்நாள் உன்னடிகள் அடியேன்மேவுவதே?* (6)

அடியேன்மேவியமர்கின்றஅமுதே! இமையோரதிபதியே!*
கொடியாவடுபுள்ளுடையானே! கோலக்கனிவாய்ப்பெருமானே!*
செடியார்வினைகள்தீர்மருந்தே! திருவேங்கடத்தெம்பெருமானே!*
நொடியார்பொழுதும் உனபாதம் காணநோலாதாற்றேனே. (7)

நோலாதாற்றேன்உன்பாதம் காணவென்றுநுண்ணுணர்வின்*
நீலார்கண்டத்தம்மானும் நிறைநான்முகனும்இந்திரனும்*
சேலேய்கண்ணார்பலர்சூழவிரும்பும் திருவேங்கடத்தானே!*
மாலாய்மயக்கிஅடியேன்பால் வந்தாய்போலேவாராயே. (8)

வந்தாய்போலேவாராதாய்! வாராதாய்போல்வருவானே!*
செந்தாமரைக்கண்செங்கனிவாய் நால்தோளமுதே!எனதுயிரே!*
சிந்தாமணிகள்பகரல்லைப்பகல்செய் திருவேங்கடத்தானே!*
அந்தோ!அடியேன்உனபாதம் அகலகில்லேன்இறையுமே. (9)

†அகலகில்லேனிறையுமென்றுஅலர்மேல்மங்கையுறைமார்பா*
நிகரில்புகழாய்!உலகம்மூன்றுடையாய்!என்னையாள்வானே!*
நிகரிலமரர்முனிக்கணங்கள் விரும்பும்திருவேங்கடத்தானே!*
புகலொன்றில்லா அடியேன் உன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேனே. (10)

†அடிக்கீழமர்ந்துபுகுந்துஅடியீர்! வாழ்மினென்றென்றருள்கொடுக்கும்
படிக்கேழில்லாப்பெருமானைப் பழனக்குருகூர்ச்சடகோபன்*
முடிப்பான்சொன்னஆயிரத்துத் திருவேங்கடத்துக்குஇவைபத்தும்*
பிடித்தார்பிடித்தார்வீற்றிருந்து பெரியவானுள்நிலாவுவரே. (11)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

—*—

Koviloor Digital Library

சரணம்புக்கும் அபேக்ஷிதம் பெருமையாலே ஈச்வரன் கைவிட்டானாகவென்னி, தம்மையும் ஸம்ஸாரியாகச் சங்கித்து என்னை விடாதொழியவேண்டுமென்று அவன் குணங்களைச் சொல்லிக் கூப்பிடுகிறார்.

திருவாய்மொழி 7.ஆம் பத்து, 2-ஆம் திருவாய்மொழி

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

நீலாம்புரிராகம்-ஆதிதாளம்

†கங்குலும்பகலும் கண்துயிலறியாள்
கண்ணநீர் கைகளாலிறைக்கும்*
சங்குசக்கரங்களென்று கைகூப்பும்
தாமரைக்கண்ணென்றே தளரும்*
எங்ஙனேதரிக்கேன் உன்னைவிட்டுஎன்னும்
இருநிலம் கைதுழாவிருக்கும்*
செங்கயல்பாய்நீர்த்திருவரங்கத்தாய்!
இவள்திறத்து என்செய்கின்றாயே ? (1)

என்செய்கின்றாய் என்தாமரைக்கண்ணா!
என்னும் கண்ணீர்மல்க இருக்கும்*
என்செய்கேன் எறிநீர்த்திருவரங்கத்தாய்!
என்னும் வெவ்வுயிர்த் துயிர்த் துருகும்*
முன்செய்தவினையே முகப்படாயென்னும்
முகில்வண்ணா! தகுவதோஎன்னும்*
முன்செய்து இவ்வுலகமுண்டுமிழ்ந்தளந்தாய்!
என்கொலோ முடிகின்றது இவட்கே? (2)

வட்கிலளிறையும் மணிவண்ணா! என்னும்
வானமேநோக்கும் மையாக்கும்*
உட்குடையசுரருயிரெல்லாமுண்ட
ஒருவனே! என்னும்உள்ளுருகும்*
கட்கிலீ! உன்னைக்காணுமாறருளாய்
காகுத்தா! கண்ணனே! என்னும்*
திட்கொடிமதிள்சூழ் திருவரங்கத்தாய்!
இவள்திறத்து என்செய்திட்டாயே? (3)

Koviloor Digital Library

இட்டகா லிட்டகையளாயிருக்கும்
எழுந்துலாய் மயங்கும் கைகூப்பும்*
கட்டமே காதலென்று மூர்ச்சிக்கும்
கடல்வண்ணா! கடியைகாணென்னும்*
வட்டவாய்நேமிவலங்கையா! என்னும்
வந்திடாய் என்றென்றே மயங்கும்*
சிட்டனே! செழுநீர்த்திருவரங்கத்தாய்!
இவள்திறத்து என்சிந்தித்தாயே? (4)

சிந்திக்கும் திசைக்கும் தேறும் கைகூப்பும்
திருவரங்கத்துள்ளாய்! என்னும்
வந்திக்கும்* ஆங்கே மழைக்கண்நீர்மல்கு
வந்திடாயென்றென்றே மயங்கும்*
அந்திப்போதவுண னுடலிடந்தானே!
அலைகடல் கடைந்த ஆரமுதே!*
சந்தித்துஉன்சரணம் சார்வதேவலித்த
தையலை மையல்செய்தானே! (5)

மையல்செய்துஎன்னை மனம்கவர்ந்தானே!
என்னும் மாமாயனே! என்னும்*
செய்யவாய் மணியே! என்னும் தண்புனல்சூழ்
திருவரங்கத்துள்ளாய்! என்னும்*
வெய்யவாள்தண்டு சங்குசக்கரம்
வில்லேந்தும் விண்ணோர்முதலென்னும்*
பைகொள்பாம்பணையாய்! இவள்திறத்தருளாய்
பாவியேன் செயற்பாலதுவே. (6)

பாலதுன்பங்களின்பங்கள் படைத்தாய்!
பற்றிலார் பற்றநின்றானே!*
காலசக்கரத்தாய்! கடலிடங்கொண்ட
கடல்வண்ணா! கண்ணனே! என்னும்*
சேல்கொள்தண்புனல்சூழ் திருவரங்கத்தாய்!
என்னும் என்தீர்த்தனே! என்னும்*
கோலமாமழைக்கண்பனிமல்க இருக்கும்
என்னுடைக் கோமளக்கொழுந்தே. (7)

Koviloor Digital Library

கொழுந்துவானவர்கட்கென்னும் குன்றேந்திக்
கோவிரை காத்தவனென்னும்*
அழும்தொழும் ஆவியனலவெவ்வுயிர்க்கும்
அஞ்சனவண்ணனே! என்னும்*
எழுந்துமேல்நோக்கி இமைப்பிலளிருக்கும்
எங்ஙனே நோக்குகேன்? என்னும்*
செழுந்தடம்புனல்சூழ் திருவரங்கத்தாய்!
என்செய்கேன் என்திருமகட்கே? (8)

†என்திருமகள்சேர்மார்பனே! என்னும்
என்னுடையாவியே! என்னும்*
நின்திருவெயிற்றால் இடந்துநீகொண்ட
நிலமகள்கேள்வனே! என்னும்*
அன்றுஉருவேழும் தழுவிநீ கொண்ட
ஆய்மகளன்பனே! என்னும்*
தென்திருவரங்கம் கோயில்கொண்டானே!
தெளிகிலேன் முடிவுஇவள்தனக்கே. (9)

முடிவுஇவள்தனக்கொன்றறிகிலே னென்னும்
மூவுலகாளியே! என்னும்*
கடிகமழ்கொன்றைச்சடையனே! என்னும்
நான்முகக்கடவுளே! என்னும்*
வடிவுடைவானோர்தலைவனே! என்னும்
வண்திருவரங்கனே! என்னும்*
அடியடையாதாள்போல் இவள்அணுகி
யடைந்தனள் முகில்வண்ணனடியே. (10)

†முகில்வண்ணனடியை அடைந்தருள் சூடி
உய்ந்தவன் மொய்புனல்பொருநல்*
துகில்வண்ணத்தூநீர்ச்சேர்ப்பன் வண்பொழில்சூழ்
வண்குருகூர்ச் சடகோபன்*
முகில்வண்ணனடிமேல் சொன்னசொல்மாலை
ஆயிரத்து இப்பத்தும்வல்லார்*
முகில்வண்ணவானத்து இமையவர்சூழ
இருப்பர் பேரின்பவெள்ளத்தே. (11)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

—*—

Koviloor Digital Library

ப்ரணவ நமஸ்ஸுக்களில் போதரும் அநந்யார்ஹசேஷத்வத்துக்கு ஸீமாபூமி ததீயசேஷத்வமாகைமாலே, அத் ததீயர்க்கு க்ரய விக்ரயார்ஹமான சேஷத்வத்தைப் பிரார்த்திக்கின்றார்.

திருவாய்மொழி 8-ஆம் பத்து, 10-ஆம் திருவாய்மொழி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஸஹானாராகம் - அடதாளம்

+நெடுமாற்கடிமைசெய்வேன்போல் அவனைக்கருதவஞ்சித்து*
தடுமாற்றற்றதீக்கதிகள் முற்றும்தவிர்ந்தசதிர்நினைந்தால்*
கொடுமாவினையேன் அவனடியாரடியே கூடும்இதுவல்லால்*
விடுமாறென்பதென்? அந்தோ! வியன்மூவுலகுபெறினுமே. (1)

வியன்மூவுலகுபெறினும்போய்த் தானேதானேயானாலும்*
புயல்மேகம்போல்திருமேனியம்மான் புனைபூங்கழலடிக்கீழ்*
சயமேஅடிமைதலைநின்றார் திருத்தாள்வணங்கி* இம்மையே*
பயனேஇன்பம்யான்பெற்றது உறுமோபாவியேனுக்கே? (2)

உறுமோபாவியேனுக்கு? இவ்வுலகம்மூன்றும்உடன்நிறைய*
சிறுமாமேனிநிமிர்த்த என்செந்தாமரைக்கண்திருக்குறளன்*
நறுமாவிரைநாள்மலரடிக்கீழ்ப் புகுதலன்றி அவனடியார்*
சிறுமாமனிசராய்என்னையாண்டார் இங்கேதிரியவே. (3)

இங்கேதிரிந்தேற்குஇழக்குற்றென்? இருமாநிலம்முன்னுண்டுமிழ்ந்த*
செங்கோலத்தபவளவாய்ச் செந்தாமரைக்கண்என்னம்மாள்*
பொங்கேழ்புகழ்கள்வாயவாய்ப் புலன்கொள்வடிவுஎன்மனத்தாய்*
அங்கேய்மலர்கள்கையவாய் வழிபட்டோடஅருளிலே. (4)

வழிபட்டோடஅருள்பெற்று மாயன்கோலமலரடிக்கீழ்*
சுழிபட்டோடும்சுடர்ச்சோதிவெள்ளத்துஇன்புற்றிருந்தாலும்
இழிபட்டோடும்உடலினிற்பிறந்து தன்சீர்யான்கற்று*
மொழிபட்டோடும்கவியமுதம்நுகர்ச்சிஉறுமோ?முழுதுமே(5)

நுகர்ச்சியுறுமோ? மூவுலகின் வீடுபேறுதன்கேழில்*
புகர்ச்செம்முகத்தகளிறட்ட பொன்னாழிக்கைஎன்னம்மான்*
நிகர்ச்செம்பங்கிஎரிவிழிகள்நீண்ட அசுரருயிரெல்லாம்*
தகர்த்துண்டுழலும்புட்பாகன் பெரியதனிமாப்புகழே. (6)

Koviloor Digital Library

தனிமாப்புகழேஎஞ்ஞான்றும் நிற்கும்படியாத்தான்தோன்றி*
முனிமாப்பிரமமுதல்வித்தாய் உலகமூன்றும்முளைப்பித்த*
தனிமாத்தெய்வத்தளிரடிக்கீழ்ப் புகுதலன்றிஅவனடியார்*
நனிமாக்கலவியின்பமே நாளும்வாய்க்கநங்கட்கே. (7)

நாளும்வாய்க்கநங்கட்கு நளிர்நீர்க்கடலைப்படைத்து* தன்
தாளும்தோளும்முடிகளும் சமனிலாதபலபரப்பி*
நீளும்படர்பூங்கற்பகக்காவும் நிறைபன்னுயிற்றின்*
கோளுமுடையமணிமலைபோல்கிடந்தான்தமர்கள்கூட்டமே(8)

தமர்கள்கூட்டவல்வினையை நாசம்செய்யும்சதுமூர்த்தி*
அமர்கொள் ஆழிசங்குவாள் வில்தண்டு ஆதிபல்படையன்*
குமரன்கோலவைங்கணைவேள்தாதை கோதிலடியார்தம்*
தமர்கள்தமர்கள்தமர்களாம் சதிரேவாய்க்கதமியேற்கே. (9)

வாய்க்கதமியேற்கு ஊழிதோறூழியூழி* மாகாயாம்
பூக்கொள்மேனிநான்குதோள் பொன்னாழிக்கைஎன்னம்மான்*
நீக்கமில்லா அடியார்தம் அடியாரடியாரடியார்எம்
கோக்கள்* அவர்க்கேகுடிகளாய்ச் செல்லும் நல்லகோட்பாடே. (10)

நல்லகோட்பாட்டுலகங்கள் மூன்றினுள்ளும்தான்நிறைந்த*
அல்லிக்கமலக்கண்ணனை அந்தண்குருகூர்ச்சடகோபன்*
சொல்லப்பட்டஆயிரத்துள்இவையும்பத்தும்வல்லார்கள்*
நல்லபதத்தால்மனைவாழ்வர் கொண்டபெண்டிர்மக்களே. (11)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

*—

சரீராவஸாநஸமயத்தில் இவன் பக்கல் ஆத்மஸமர்ப்பணம்பண்ணி ப்ராப்யபூமியிலே போக்காமல் நமக்காக்கிக் கொள்ளுகிறே மென்னும் ஈச்வரனை வழித்துணையாகப் பற்றுதல்.

கலிவிருத்தம்

கேதாரகௌளராகம் - ஆதிதாளம்

†மாலைநண்ணித்தொழுதெழுமினோவினைகெட*
காலைமாலை கமலமலரிட்டுநீர்*
வேலைமோதும்மதிள்சூழ் திருக்கண்ணபுரத்து*
†ஆலின்மேலாலமர்ந்தான் அடியிணைகளே. (1)

Koviloor Digital Library

கள்ளவிழும்மலரிட்டு நீர்இறைஞ்சுமின்*
நள்ளிசேரும்வயல்சூழ் கிடங்கின்புடை*
வெள்ளியேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரம்
உள்ளி* நாளும்தொழுதெழுமினோ தொண்டரே! (2)

தொண்டர்! நுந்தம் துயர்போக நீர்ஏகமாய்*
விண்டுவாடாமலரிட்டு நீர்இறைஞ்சுமின்*
வண்டுபாடும்பொழில்சூழ் திருக்கண்ணபுரத்து
அண்டவாணன்* அமரர்பெருமானையே. (3)

மானைநோக்கி மடப்பின்னைதன்கேள்வனை*
தேனைவாடாமலரிட்டு நீர்இறைஞ்சுமின்*
வானையுந்துமதிள்சூழ் திருக்கண்ணபுரம்*
தான்நயந்தபெருமான் சரணாகுமே. (4)

சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்*
மரணமானால் வைகுந்தம்கொடுக்கும்பிரான்*
அரணமைந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரத்
தரணியாளன்* தனதன்பர்க்கு அன்பாகுமே. (5)

அன்பனாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்*
செம்பொனாகத்து அவுணனுடல்கீண்டவன்*
நன்பொனேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரத்து
அன்பன்* நாளும் தனமெய்யர்க்குமெய்யனே. (6)

மெய்யனாகும் விரும்பித்தொழுவார்க்கெல்லாம்*
பொய்யனாகும் புறமேதொழுவார்க்கெல்லாம்*
செய்யில்வாளையுகளும் திருக்கண்ணபுரத்து
ஐயன்* ஆகத்தணைப்பார்கட்கு அணியனே. (7)

அணியனாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்*
பிணியும்சாரா பிறவிகெடுத்தாளும்*
மணிபொனேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரம்
பணிமின்* நாளும் பரமேட்டிதன்பாதமே. (8)

பாதம்நாளும்பணியத் தணியும்பிணி*
ஏதம்சாரா எனக்கேல் இனியென்குறை?*
வேதநாவர் விரும்பும் திருக்கண்ணபுரத்து
ஆதியானை* அடைந்தார்க்கு அல்லலில்லையே. (9)

Koviloor Digital Library

இல்லையல்லல்எனக்கேல் இனியென்குறை?*
அல்லிமாதரமரும் திருமார்பினன்*
கல்லிலேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரம்
சொல்ல* நாளும்துயர் பாடுசாராவே. (10)

†பாடுசாராவினை பற்றறவேண்டுவீர்!*
மாடநீடு குருகூர்ச்சடகோபன்* சொல்
பாடலானதமிழ் ஆயிரத்துள் இப்பத்தும்
பாடியாடி* பணிமின் அவன்தாள்களே. (11)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

—*—

ஈச்வரன், ஆழ்வாருக்கு அர்ச்சிராதிமார்க்கத்தையும், ஆதிவாஹிக ஸத்காரங்களையும், பரமபதத்தையும், தானும் நித்தியஸூரிகளும் பிராட்டிமாரும் எதிரேவந்து ஆதரிக்கும்படியையும் நித்தியஸூரி ஸேவிதராய் பிராட்டியோடு வீற்றிருக்கும்படியைக் கண்டு தான் ஆனந்த நிர்ப்பரனாயிருக்கிறபடியையும் காட்ட அதைக்கண்டு ஆழ்வார் ப்ரீதராதல்

திருவாய்மொழி, 10-ஆம் பத்து, 9-ஆம் திருவாய்மொழி.

கலி விருத்தம்

கல்யாணிராகம் — ஆதிதாளம்

†சூழ்விசும்பணிமுகில் தூரியம்முழக்கின*
ஆழ்கடலலைதிரை கையெடுத்தாடின*
ஏழ்பொழிலும் வளமேந்தியஎன்னப்பன்*
வாழ்புகழ்நாரணன்தமரைக் கண்டுகந்தே. (1)

நாரணன்தமரைக்கண்டுகந்து நல்நீர்முகில்*
பூரணபொற்குடம் பூரித்ததுஉயர்விண்ணில்*
நீரணிகடல்கள் நின்றார்த்தன* நெடுவரைத்
தோரணம்நிரைத்து எங்கும் தொழுதனருலகே. (2)

தொழுதனர் உலகர்கள் தூபம்நல்மலர்மழை
பொழிவனர்* பூமியன்றளந்தவன் தமர்முன்னே*
எழுமினென்றுஇருமருங்குஇசைத்தனர் முனிவர்கள்*
வழியிதுவைகுந்தற்கென்று வந்தெதிரே. (3)

Koviloor Digital Library

எதிரெதிர்இமையவர் இருப்பிடம்வகுத்தனர்*
கதிரவரவரவர் கைந்நிரைகாட்டினர்*
அதிர்குரல்முரசங்கள் அலைகடல்முழக்கொத்த*
மதுவிரிதுழாய்முடி மாதவன்தமர்க்கே. (4)

மாதவன்தமரென்று வாசலில் வானவர்*
போதுமின்எமதிடம் புகுதுகவென்றலும்*
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்*
வேதநல்வாயவர் வேள்வியுள்மடுத்தே. (5)

வேள்வியுள் மடுத்தலும் விரைகமழ்நறும்புகை*
காளங்கள் வலம்புரிகலந்து எங்கும் இசைத்தனர்*
ஆண்மின்கள் வானகம் ஆழியான் தமரென்று*
வாளோண்கண்மடந்தையர் வாழ்த்தினர் மகிழ்ந்தே. (6)

மடந்தையர்வாழ்த்தலும் மருதரும்வசுக்களும்*
தொடர்ந்தெங்கும் தோத்திரம் சொல்லினர்* தொடுகடல்
கிடந்தவெங்கேசவன் கிளரொளிமணிமுடி*
குடந்தைஎங்கோவலன் குடியடியார்க்கே. (7)

குடியடியார்இவர் கோவிந்தன் தனக்கென்று*
முடியுடைவானர் முறைமுறை எதிர்கொள்ள*
கொடியணிநெடுமதிள் கோபுரம்குறுகினர்*
வடிவுடைமாதவன் வைகுந்தம்புகவே. (8)

வைகுந்தம்புகுதலும் வாசலில்வானவர்*
வைகுந்தன்தமர்எமர் எமதிடம்புகுதென்று*
வைகுந்தத்தமரரும் முனிவரும் வியந்தனர்*
வைகுந்தம் புகுவது மண்ணவர்விதியே. (9)

விதிவகைபுகுந்தனர் என்று நல்வேதியர்*
பதியினில்பாங்கினில் பாதங்கள் கழுவினர்*
நிதியும்நற்சுண்ணமும் நிறைகுடவிளக்கமும்*
மதிமுகமடந்தையர் ஏந்தினர்வந்தே. (10)

†வந்தவர்எதிர்கொள்ள மாமணிமண்டபத்து*
அந்தமில்பேரின்பத்து அடியரோடிருந்தமை
கொந்தலர் பொழில் குருகூர்ச்சடகோபன்* சொல்
சந்தங்களாயிரத்து இவைவல்லார் முனிவரே. (11)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

—*—

Koviloor Digital Library

ஈச்வரன் பெரியதிருவடிமேல்தோன்றி ப்ரக்ருதிஸம்பந்தத்தை ஒழித்து நித்யஸூரிகளிலேபுகுந்து விடாய்தீர்ந்து இவர்க்கும் அவ்வருகான தன்விடாய்தீரும்படி ஸம்ச்லேஷித்தருளுதல்

திருவாய்மொழி, 10–ஆம் பத்து, 10-ஆம் திருவாய்மொழி

கலி நிலைத்துறை

கல்யாணிராகம் - அடதாளம்.

†முனியே! நான்முகனே! முக்கண்ணப்பா!* என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண்கருமாணிக்கமே! என்கள்வா! *
தனியேனாருயிரே! என்தலைமிசையாய்வந்திட்டு*
இனிநான் போகலொட்டேன் ஒன்றும்மாயம்செய்யேல் என்னையே.

மாயம் செய்யேல்என்னை உன்திருமார்வத்துமாலைநங்கை*
வாசம்செய்பூங்குழலாள் திருவாணைநின்னாணைகண்டாய்*
நேசம்செய்துஉன்னோடுஎன்னை உயிர்வேறின்றிஒன்றாகவே*
கூசம்செய்யாதுகொண்டாய்என்னைக் கூவிக்கொள்ளாய்வந்தந்தோ!

கூவிக்கொள்ளாய்வந்தந்தோ என்பொல்லாக்கருமாணிக்கமே
ஆவிக்கோர்பற்றுக்கொம்பு நின்னலால்அறிகின்றிலேன்நான்*
மேவித்தொழும்பிரமன் சிவன் இந்திரனாதிக்கெல்லாம்*
நாவிக்கமலமுதற்கிழங்கே! உம்பரந்ததுவே. (3)

உம்பரந்தண்பாழேயோ! அதனுள்மிசை நீயேயோ!*
அம்பரநற்சோதி! அதனுள்பிரமன் அரன்நீ*
உம்பரும்யாதவரும் படைத்த முனிவனவன்நீ
எம்பரம்சாதிக்கலுற்று என்னைப்போரவிட்டிட்டாயே. (4)

போரவிட்டிட்டு என்னைநீபுறம்போக்கலுற்றால்* பின்னையான்
ஆரைக்கொண்டுஎத்தையந்தோஎனதென்பதென்?யானென்பதென்!
தீரஇரும்புண்டநீரதுபோல என்னாருயிரை*
ஆரப்பருக* எனக்கு ஆராவமுதானாயே. (5)

எனக்காராவமுதாய் எனதாவியைஇன்னுயிரை*
மனக்காராமைமன்னியுண்டிட்டாய் இனியுண்டொழியாய்*
புனக்காயாநிறத்த புண்டரிகக்கண்செங்கனிவாய்*
உனக்கேற்கும்கோலமலர்ப்பாவைக்கன்பா! என்னன்பேயோ. (6)

Koviloor Digital Library

†கோலமலர்ப்பாவைக்கன்பாகிய என்னன்பேயோ!
நீலவரைஇரண்டுபிறைகவ்வி நிமிர்ந்ததொப்ப*
கோலவராகமொன்ருய் நிலம்கோட்டிடைக்கொண்டஎந்தாய்!*
நீலக்கடல்கடைந்தாய்! உன்னைப்பெற்றுஇனிப்போக்குவனே? (7)

பெற்றினிப்போக்குவனே? உன்னைஎன்தனிப்பேருயிரை*
உற்றஇருவினையாய் உயிராய்ப்பயனாய் அவையாய்*
முற்றஇம்மூவுலகம் பெருந்தூருய்த்தூற்றில்புக்கு*
முற்றக்கரந்தொளித்தாய்! என்முதல்தனிவித்தேயோ! (8)

முதல்தனிவித்தேயோ! முழுமூவுலகாதிக்கெல்லாம்*
முதல்தனிஉன்னைஉன்னை எனைநாள்வந்துகூடுவன்நான்?
முதல்தனி அங்குமிங்கும் முழுமுற்றுறுவாழ்பாழாய்*
முதல்தனிசூழ்ந்தகன்ருழ்ந்துயர்ந்த முடிவிலீயோ? (9)

†சூழ்ந்தகன்ருழ்ந்துயர்ந்த முடிவில்பெரும்பாழேயோ!
சூழ்ந்ததனில்பெரிய பரநன்மலர்ச்சோதீயோ!*
சூழ்ந்ததனில்பெரிய சுடர்ஞானவின்பமேயோ!*
சூழ்ந்ததனில்பெரியஎன்னவாவறச்சூழ்ந்தாயே (10)

†அவாவறச்சூழ் அரியைஅயனை அரனை அலற்றி*
அவாவற்றுவீடுபெற்ற குருகூர்ச்சடகோபன் சொன்ன*
அவாவிலந்தாதிகளால் இவையாயிரமும்* முடிந்த
அவாவிலந்தாதிஇப்பத்து அறிந்தார்பிறந்தார்உயர்ந்தே. 11

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

கோயில் திருவாய்மொழி ஸம்பூர்ணம்

—*—

Koviloor Digital Library

திருவாய்மொழி யனுஸந்தித்தவனந்தரம் நெடும்ஸாவித்ரிபோலே பந்தாயிருக்கும் கண்ணிநுண் சிறுத்தாம்பனுஸந்தித்தவனந்தரம் குரு ஸாவித்ரியைப்போலே நூற்றெட்டாயிருக்கும் நூற்றந்தாதி யனுஸந்தித்தல்

திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்த

ப்ரபந்நகாயத்ரி என்னும்

இராமாநுச நூற்றந்தாதி

வேதப்பிரான்பட்டர் அருளிச்செய்தவை

ஒருவிகற்ப நேரிசைவெண்பா

முன்னைவினையகல மூங்கிற்குடியமுதன்*
பொன்னங்கழற்கமலப்போதிரண்டும்*—என்னுடைய
சென்னிக்கணியாகச் சேர்த்தினேன்*தென்புலத்தார்க்கு
என்னுக்கடவுடையேன் யான்?

கட்டளைக் கலித்துறை

நயந்தருபேரின்பமெல்லாம் பழுதென்றிநண்ணினர்பால்*
சயந்தருகீர்த்தி இராமாநுசமுனிதாளிணைமேல்*
உயர்ந்தகுணத்துத் திருவரங்கத்தமுதோங்கும்* அன்பால்
இயம்புங்கலித்துறையந்தாதியோத இசைநெஞ்சமே!

இனியென்குறைநமக்கு? எம்பெருமானார்திருநாமத்தால்*
முனிதந்த 'நூற்றெட்டுச் சாவித்திரி' யென்னுநுண்பொருளை*
கனிதந்தசெஞ்சொற் கலித்துறையந்தாதிபாடித்தந்தான்*
புனிதன்திருவரங்கத்தமுதாகிய புண்ணியனே.

அமுதனாருளிச்செய்ததால், அவரபிப்பிராயத்தாலே அபிநிவேசமுடைய ஆஸ்திகர் அருளிச் செய்தது.

சொல்லின்தொகைகொண்டு உனதடிப்போதுக்குத்தொண்டுசெய்யும்
நல்லன்பரேத்தும் உன்நாமமெல்லாம் என்தன்நாவினுள்ளே*
அல்லும்பகலும் அமரும்படிநல்கு அறுசமயம்
வெல்லும்பரம!* இராமாநுச! இதுஎன்விண்ணப்பமே.

—*—

Koviloor Digital Library

பைரவிராகம் - ரூபகதாளம்

†பூமன்னுமாது பொருந்தியமார்பன்* புகழ்மலிந்த
பாமன்னுமாறன் அடிபணிந்துய்ந்தவன்* பல்கலையோர்
தாம்மன்னவந்த இராமாநுசன் சரணாரவிந்தம்
நாம்மன்னிவாழ* நெஞ்சே! சொல்லுவோம்அவன்நாமங்களே.

தோடிராகம் - ரூபகதாளம்

†கள்ளார்பொழில் தென்னரங்கன்* கமலப்பதங்கள்நெஞ்சில்
கொள்ளா மனிசரை நீங்கி* குறையல் பிரானடிக்கீழ்
விள்ளாதஅன்பன்இராமாநுசன் மிக்கசீலமல்லால்
உள்ளாதுஎன்நெஞ்சு* ஒன்றறியேன்எனக்குற்றபேரியல்பே (2)

பேரியல்நெஞ்சே! அடிபணிந்தேன்உன்னை* பேய்ப்பிறவிப்
பூரியரோடுஉள்ள சுற்றம்புலற்றி* பொருவருஞ்சீர்
ஆரியன்செம்மைஇராமாநுசமுனிக்கு அன்புசெய்யும்
சீரியபேறுடையார்* அடிக்கீழ்என்னைச் சேர்த்ததற்கே. (3)

என்னைப்புவியில் ஒருபொருளாக்கி* மருள்சுரந்த
முன்னைப்பழவினை வேரறுத்து* ஊழிமுதல்வனையே
பன்னப்பணித்தஇராமாநுசன் பரன்பாதமும்என்
சென்னித்தரிக்கவைத்தான்* எனக்குஏதும்சிதைவில்லையே.(4)

எனக்குற்றசெல்வம் இராமாநுசனென்று* இசையகில்லா
மனக்குற்றமாந்தர் பழிக்கில்புகழ்* அவன்மன்னியசீர்
தனக்குற்றஅன்பர் அவன்திருநாமங்கள்சாற்றும்என்பா
இனக்குற்றம்காணகில்லார்* பத்தியேய்ந்தஇயல்விதென்றே.

இயலும்பொருளும் இசையத்தொடுத்து* ஈன்கவிகள்அன்பால்
மயல்கொண்டுவாழ்த்தும் இராமாநுசனை* மதியின்மையால்
பயிலும்கவிகளில்பத்தியில்லாத என்பாவிநெஞ்சால்
முயல்கின்றனன்* அவன்தன் பெருங்கீர்த்தி மொழிந்திடவே.

பியாகடைராகம் - ரூபகதாளம்

†மொழியைக்கடக்கும் பெரும்புகழான்*வஞ்சமுக்குறும்பாம்
குழியைக்கடக்கும்நம்கூரத்தாழ்வான் சரண்கூடியபின்*
பழியைக்கடத்தும் இராமாநுசன் புகழ்பாடிஅல்லா
வழியைக்கடத்தல்* எனக்குஇனியாதும் வருத்தமன்றே. (7)

Koviloor Digital Library

வருத்தும் புறவிருள்மாற்ற* எம்பொய்கைப்பிரான்மறையின்
குருத்தின்பொருளையும் செந்தமிழ்தன்னையும்கூட்டி*ஒன்றைத்
திரித்துஅன்றுஎரித்திருவிளக்கைத் தன்திருவுள்ளத்தே
இருத்தும்பரமன்* இராமாநுசன் எம்இறைவனே. (8)

இறைவனைக்காணும் இதயத்திருள்கெட* ஞானமென்னும்
நிறைவிளக்கேற்றிய பூதத்திருவடிதாள்கள்* நெஞ்சத்து
உறையவைத்தாளும்இராமாநுசன் புகழோதும்நல்லோர்
மறையினைக்காத்து* இந்தமண்ணகத்தே மன்னவைப்பவரே.(9)

மன்னியபேரிருள்மாண்டபின்* கோவலுள்மாமலராள்
தன்னொடுமாயனைக் கண்டமைகாட்டும்* தமிழ்த்தலைவன்
பொன்னடிபோற்றும்இராமாநுசற்கு அன்புபூண்டவர்தாள்
சென்னியில்சூடும்* திருவுடையார் என்றும்சீரியரே. (10)

கல்யாணிராகம் - ரூபகதாளம்

சீரியநான்மறைச்செம்பொருள்* செந்தமிழாலளித்த
பாரியலும்புகழ்ப் பாண்பெருமாள்* சரணாம்பதுமத்
தாரியல்சென்னிஇராமாநுசன் தன்னைச்சார்ந்தவர்தம்
காரியவண்மை* என்னால்சொல்லொணாதுஇக்கடலிடத்தே(11)

இடங்கொண்டகீர்த்தி மழிசைக்கிறைவன்* இணையடிப்போது
அடங்குமிதயத்து இராமாநுசன்* அம்பொற்பாதமென்றும்
கடங்கொண்டிறைஞ்சும்திருமுனிவர்க்கன்றிக்காதல்செய்யாத்
திடங்கொண்டஞானியர்க்கே*அடியேன்அன்புசெய்வதுவே. ()

செய்யும் பசுந்துளவத்தொழில்மாலையும்* செந்தமிழில்
பெய்யும் மறைத்தமிழ்மாலையும்* பேராதசீரரங்கத்து
ஐயன்கழற்கணியும்பரன்தாளன்றி ஆதரியா
மெய்யன்* இராமாநுசன் சரணேகதிவேறெனக்கே. (13)

கதிக்குப்பதறி* வெங்கானமும் கல்லும்கடலுமெல்லாம்
கொதிக்கத்தவம்செய்யும்கொள்கையற்றேன்*கொல்லிகாவலன்சொல்
பதிக்குங்கலைக்கவிபாடும் பெரியவர் பாதங்களே
துதிக்கும்பரமன்* இராமாநுசன் என்னைச் சோர்விலனே.(14)

சோராதகாதல் பெருஞ்சுழிப்பால்* தொல்லைமாலை ஒன்றும்
பாராது அவனைப் பல்லாண்டென்றுகாப்பிடும்* பான்மையன்
பேராத உள்ளத்து இராமாநுசன்தன் பிறங்கியசீர் [தாள்
சாராமனிசரைச்சேரேன்* எனக்குஎன்னதாழ்வினியே? (15)

Koviloor Digital Library

நாதநாமக்கிரியைராகம் - ஆதிதாளம்

†தாழ்வொன்றில்லாமறைதாழ்ந்து* தலமுழுதுங்கலியே
ஆள்கின்றநாள்வந்து அளித்தவன்காண்மின்* அரங்கர்மௌலி
சூழ்கின்றமாலையைச் சூடிக்கொடுத்தவள்தொல்லருளால்
வாழ்கின்றவள்ளல்* இராமாநுசன்என்னும் மாமுனியே. (16)

முனியார்துயரங்கள்முந்திலும்* இன்பங்கள்மொய்த்திடினும்
கனியார்மனம் கண்ணமங்கைநின்றானை* கலைபரவும்
தனியானையைத்தண்தமிழ்செய்த நீலன்தனக்குஉலகில்
இனியானை* எங்களிராமாநுசனை வந்தெய்தினரே. (17)

எய்தற்கரியமறைகளை* ஆயிரம்இன்தமிழால்
செய்தற்கு உலகில்வரும் சடகோபனை* சிந்தையுள்ளே
பெய்தற்கிசையும் பெரியவர்சீரை உயிர்களெல்லாம்
உய்தற்குதவும்* இராமாநுசன் எம்உறுதுணையே. (18)

உறுபெருஞ்செல்வமும் தந்தையும்தாயும்* உயர்குருவும்
வெறிதருபூமகள்நாதனும்* மாறன்விளங்கியசீர்
நெறிதரும்செந்தமிழாரணமேயென்று இந்நீணிலத்தோர்
அறிதரநின்ற* இராமாநுசன் எனக்கு ஆரமுதே. (19)

ஆரப்பொழில் தென்குருகைப்பிரான்* அமுதத்திருவாய்
ஈரத்தமிழின் இசையுணர்ந்தோர்கட்கு* இனியவர்தம்
சீரைப்பயின்றுய்யும் சீலங்கொள்நாதமுனியை நெஞ்சால்
வாரிப்பருகும்* இராமாநுசன் என்தன்மாநிதியே. (20)

நிதியைப்பொழியும் முகிலென்று* நீசர்தம்வாசல்பற்றித்
துதிகற்றுஉலகில் துவள்கின்றிலேன்இனி* தூய்நெறிசேர்
எதிகட்கிறைவன்யமுனைத்துறைவன் இணையடியாம்
கதிபெற்றுடைய* இராமாநுசன் என்னைக்காத்தனனே. (21)

கார்த்திகையானும்கரிமுகத்தானும்* கனலும்முக்கண்
மூர்த்தியும்மோடியும்வெப்பும் முதுகிட்* மூவுலகும்
பூத்தவனேயென்றுபோற்றிட வாணன்பிழைபொறுத்த
தீர்த்தனைஏத்தும்* இராமாநுசன் என்தன்சேமவைப்பே. (22)

வைப்பாயவான்பொருளென்று* நல்லன்பர்மனத்தகத்தே
எப்போதும் வைக்கும் இராமாநுசனை* இருநிலத்தில்
ஒப்பாரிலாதஉறுவினையேன் வஞ்சநெஞ்சில்வைத்து
முப்போதும்வாழ்த்துவன் என்னும்இது அவன்மொய்புகழ்க்கே? (23)

Koviloor Digital Library

மொய்த்தவெந்தீவினையால் பல்லுடல்தொறும்மூத்து* அதனால்
எய்த்தொழிந்தேன்முனநாள்களெல்லாம்* இன்றுகண்டுயர்ந்தேன்
பொய்த்தவம்போற்றும் புலைச்சமயங்கள்நிலத்தவியக்
கைத்தமெய்ஞ்ஞானத்து* இராமாநுசனென்னும் கார்தன்னையே. (24)

காரேய்கருணை இராமாநுச! இக்கடலிடத்தில்
ஆரேயறிபவர் நின்னருளின்தன்மை?* அல்லலுக்கு
நேரேஉறைவிடம்நான் வந்துநீஎன்னையுய்த்தபின் உன்
சீரேஉயிர்க்குயிராய்* அடியேற்குஇன்று தித்திக்குமே. (25)

திக்குற்றகீர்த்தி இராமாநுசனை* என்செய்வினையாம்
மெய்க்குற்றம்நீக்கி விளங்கியமேகத்தை* மேவும்நல்லோர்
எக்குற்றவாளர் எதுபிறப்பு ஏதியல்வாகநின்றோர்
அக்குற்றம்அப்பிறப்பு*அவ்வியல்வே நம்மைஆட்கொள்ளுமே. (26)

கொள்ளக்குறைவற்றிலங்கி* கொழுந்துவிட்டோங்கிய உன்
வள்ளல்தனத்தினால் வல்வினையேன்மனம்நீபுகுந்தாய்*
வெள்ளைச்சுடர்விடும் உன்பெருமேன்மைக்கு இழுக்கிதென்று
தள்ளுற்றிரங்கும்* இராமாநுச! என்தனிநெஞ்சமே. (27)

நெஞ்சில்கறைகொண்டகஞ்சனைக் காய்ந்தநிமலன்* நங்கள்
பஞ்சித்திருவடிப் பின்னைதன்காதலன்* பாதம்நண்ணா
வஞ்சர்க்கரிய இராமாநுசன் புகழன்றிஎன்வாய்
கொஞ்சிப்பரவகில்லாது* என்னவாழ்வு இன்றுகூடியதே!(28)

கூட்டும்விதி என்றுகூடுங்கொலோ?* தென்குருகைப்பிரான்
பாட்டென்னும்வேதப் பசுந்தமிழ்தன்னை* தன்பத்தியென்னும்
வீட்டின்கண்வைத்த இராமாநுசன் புகழ்மெய்யுணர்ந்தோர்
ஈட்டங்கள்தன்னை* என்நாட்டங்கள் கண்டுஇன்பமெய்திடவே. (29)

இன்பம்தரு பெருவீடுவந்தெய்திலென்? எண்ணிறந்த
துன்பம்தரு நிரயம்பலசூழிலென்?* தொல்லுலகில்
மன்பல்லுயிர்கட்கிறைவன் மாயனெனமொழிந்த
அன்பன்அனகன்* இராமாநுசன் என்னையாண்டனனே. (30)

†ஆண்டுகள்நாள்திங்களாய்* நிகழ்காலமெல்லாம்மனமே!
ஈண்டு பல்யோனிகள்தோறுழல்வோம்* இன்றோரெண்ணின்றியே
காண்தகுதோளண்ணல் தென்னத்தியூரர் கழலிணைக்கீழ்ப்
பூண்டஅன்பாளன்* இராமாநுசனைப் பொருந்தினமே. (31)

Koviloor Digital Library

பொருந்தியதேசும் பொறையும்திறலும்புகழும்* நல்ல
திருந்தியஞானமும் செல்வமும்சேரும்* செறுகலியால்
வருந்தியஞாலத்தை வண்மையினால்வந்தெடுத்தளித்த
அருந்தவன்* எங்களிராமாநுசனை அடைபவர்க்கே. (32)

அடையார்கமலத்து அலர்மகள்கேள்வன்* கையாழியென்னும்
படையோடுநாந்தகமும் படர்தண்டும் ஒண்சார்ங்கவில்லும்*
புடையார்புரிசங்கமும் இந்தப்பூதலம் காப்பதற்கென்று
இடையே* இராமாநுசமுனியாயின இந்நிலத்தே. (33)

நிலத்தைச்செறுத்துண்ணும் நீசக்கலியை*நினைப்பரிய
பலத்தைச்செறுத்தும் பிறங்கியதில்லை* என்பெய்வினைதென்
புலத்தில்பொறித்த வப்புத்தகச்சும்மைபொறுக்கியபின்
நலத்தைப்பொறுத்தது* இராமாநுசன்தன் நயப்புகழே. (34)

நயவேன்ஒருதெய்வம் நானிலத்தே* சிலமானிடத்தைப்
புயலேயெனக் கவிபோற்றிசெய்யேன்* பொன்னரங்கமென்னில்
மயலேபெருகும்இராமாநுசன் மன்னுமாமலர்த்தாள்
அயரேன்* அருவினை என்னை எவ்வாறு இன்றுஅடர்ப்பதுவே? (35)

அடல்கொண்டநேமியன் ஆருயிர்நாதன்* அன்றுஆரணச்சொல்
கடல்கொண்டஒண் பொருள்கண்டளிப்ப*பின்னும்காசினியோர்
இடரின்கண்வீழ்ந்திடத்தானும் அவ்வொண்பொருள்கொண்டுஅவர்பின்
படரும்குணன்* எம்இராமாநுசன்தன் படியிதுவே. (36)

படிகொண்டகீர்த்தி இராமாயணமென்னும் பத்திவெள்ளம்
குடிகொண்டகோயி லிராமாநுசன்குணங்கூறும்* அன்பர்
கடிகொண்டமாமலர்த்தாள் கலந்துஉள்ளம்கனியும்நல்லோர்
அடிகண்டுகொண்டுகந்து* என்னையும் ஆளவர்க்குஆக்கினரே (37)

ஆக்கிஅடிமைநிலைப்பித்தனை என்னைஇன்று* அவமே
போக்கிப் புறத்திட்டதென்பொருளாமுன்பு?* புண்ணியர்தம்
வாக்கில்பிரியாஇராமாநுச! நின்னருளின்வண்ணம்
நோக்கில்தெரிவரிதால்* உரையாய் இந்தநுண்பொருளே. (38)

பொருளும்புதல்வரும்பூமியும்* பூங்குழலாரும்என்றே
மருள்கொண்டுஇளைக்கும் நமக்குநெஞ்சே! மற்றுளார்தரமோ?
இருள்கொண்டவெந்துயர்மாற்றித் தன்னீறல்பெரும்புகழே
தெருளும்தெருள்தந்து* இராமாநுசன்செய்யும் சேமங்களே.

Koviloor Digital Library

சேமநல்வீடும் பொருளும்தருமமும்* சிறியநற்
காமமும் என்றிவைநான்கென்பர்* நான்கினும்கண்ணனுக்கே
ஆமதுகாமம் அறம்பொருள்வீடிதற் கென்றுரைத்தான்
வாமனன்சீலன்* இராமாநுசன் இந்தமண்மிசையே. (40)

மண்மிசையோனிகள்தோறும்பிறந்து* எங்கள்மாதவனே
கண்ணுறநிற்கிலும் காண்கில்லா* உலகோர்களெல்லாம்
அண்ணல்இராமாநுசன் வந்துதோன்றிய அப்பொழுதே
நண்ணருஞானம் தலைக்கொண்டு* நாரணற்காயினரே. (41)

ஆயிழையார் கொங்கைதங்கும்* அக்காதலளற்றழுந்தி
மாயும்என்னாவியை வந்தெடுத்தான்இன்று* மாமலராள்
நாயகன் எல்லாவுயிர்கட்கும்நாதன் அரங்கனென்னும்
தூயவன்* தீதிலிராமாநுசன் தொல்லருள்சுரந்தே. (42)

சுரக்கும்திருவும்உணர்வும்* சொலப்புகில்வாயமுதம்
பரக்கும் இருவினைபற்றறவோடும்* படியிலுள்ளீர்!
உரைக்கின்றனன் உமக்கு யான்அறஞ்சீறும் உறுகலியைத்
துரக்கும்பெருமை* இராமாநுசனென்று சொல்லுமினே. (43)

சொல்லார் தமிழ்ஒருமூன்றும்* சுருதிகள்நான்கும் எல்லை
யில்லா அறநெறியாவும் தெரிந்தவன்* எண்ணருஞ்சீர்
நல்லார்பரவும்இராமாநுசன் திருநாமம்நம்பிக்
கல்லார் அகலிடத்தோர்* எதுபேறென்றுகாமிப்பரே. (44)

பேறொன்றுமற்றில்லை நின்சரணன்றி* அப்பேறளித்தற்கு
ஆறொன்றுமில்லை மற்றச்சரணன்றி* என்றுஇப்பொருளைத்
தேறுமவர்க்கும்எனக்கும் உனைத்தந்தசெம்மை சொல்லால்
கூறும்பரமன்று* இராமாநுச! மெய்ம்மைகூறிடிலே. (45)

கூறும்சமயங்களாறும்குலைய* குவலயத்தே
மாறன்பணித்த மறையுணர்ந்தோனை* மதியிலியேன்
தேறும்படி என்மனம்புகுந்தானைத் திசையனைத்தும்
ஏறும்குணனை* இராமாநுசனை இறைஞ்சினமே. (46)

இறைஞ்சப்படும்பரன் ஈசன்அரங்கனென்று* இவ்வுலகத்து
அறம்செப்பும் அண்ணல் இராமாநுசன்* என்னருவினையின்
திறம்செற்றுஇரவும்பகலும்விடாது என்தன்சிந்தையுள்ளே
நிறைந்துஒப்பறஇருந்தான்* எனக்குஆரும் நிகரில்லையே. (47)

Koviloor Digital Library

நிகரின்றிநின்ற என்நீசதைக்கு* நின்னருளின்கணன்றிப்
புகலொன்றுமில்லை அருட்குமஃதேபுகல்* புன்மையிலோர்
பகரும்பெருமைஇராமாநுச! இனிநாம்பழுதே
அகலும்பொருளென்?* பயனிருவோமுக்குமானபின்னே. (48)

ஆனதுசெம்மைஅறனெறி* பொய்ம்மைஅறுசமயம்
போனதுபோன்றிஇறந்ததுவெங்கலி* பூங்கமலத்
தேனதிபாய்வயல் தென்னரங்கன்கழல்சென்னிவைத்துத்
தானதில்மன்னும்* இராமாநுசன் இத்தலத்துதித்தே. (49)

உதிப்பன உத்தமர்சிந்தையுள்* ஒன்னலர்நெஞ்சம்அஞ்சிக்
கொதித்திட மாறிநடப்பன* கொள்ளைவன்குற்றமெல்லாம்
பதித்தஎன்புன் கவிப்பாவினம்பூண்டன பாவுதொல்சீர்
எதித்தலைநாதன்* இராமாநுசன்தன்இணையடியே. (50)

அடியைத்தொடர்ந்தெழும் ஐவர்கட்காய்* அன்றுபாரதப்
முடியப் பரிநெடுந்தேர்விடும்கோனை* முழுதுணர்ந்த [போர்
அடியர்க்கமுதம்இராமாநுசன் என்னையாளவந்துஇப்
படியில்பிறந்தது* மற்றில்லைகாரணம் பார்த்திடிலே. (51)

பார்த்தான் அறுசமயங்கள்பதைப்ப* இப்பார்முழுதும்
போர்த்தான்புகழ்கொண்டு புன்மையினேனிடைத்தான்புகுந்து
தீர்த்தான்இருவினைதீர்த்து அரங்கன்செய்ய தாளிணையோடு
ஆர்த்தான்* இவைஎம்மிராமாநுசன் செய்யும்அற்புதமே. (52)

அற்புதன் செம்மைஇராமாநுசன்* என்னையாளவந்த
கற்பகம் கற்றவர்காமுறுசீலன்* கருதரிய
பற்பல்லுயிர்களும்பல்லுலகுயாவும் பரனதென்னும்
நற்பொருள்தன்னை* இந்நானிலத்தேவந்து நாட்டினனே. (53)

நாட்டிய நீசச்சமயங்கள்மாண்டன* நாரணனைக்
காட்டியவேதம் களிப்புற்றது* தென்குருகைவள்ளல்
வாட்டமிலாவண்தமிழ்மறைவாழ்ந்தது மண்ணுலகில்
ஈட்டியசீலத்து* இராமாநுசன்தன் இயல்வுகண்டே. (54)

கண்டவர்சிந்தைகவரும்* கடிபொழில்தென்னரங்கன்
தொண்டர்குலாவும் இராமாநுசனை* தொகையிறந்த
பண்தருவேதங்கள் பார்மேல்நிலவிடப்பார்த்தருளும்
கொண்டலைமேவித்தொழும்* குடியாம்எங்கள் கோக்குலமே.

Koviloor Digital Library

கோக்குலமன்னரை மூவெழுகால்* ஒருகூர்மழுவால்
போக்கியதேவனைப் போற்றும்புனிதன்* புவனமெங்கும்
ஆக்கியகீர்த்திஇராமாநுசனை அடைந்தபின்என்
வாக்குஉரையாது* என்மனம்நினையாது இனிமற்றொன்றையே

மற்றொருபேறு மதியாது* அரங்கன்மலரடிக்குஆள்
உற்றவரே தனக்கு உற்றவராக்கொள்ளும் உத்தமனை*
நற்றவர்போற்றும்இராமாநுசனை இந்நாநிலத்தே
பெற்றனன்* பெற்றபின் மற்றறியேன்ஒருபேதைமையே. (57)

பேதையர்வேதப்பொருளிதென்றுஉன்னி* பிரமம்நன்றென்று
ஓதி மற்றெல்லாவுயிரும்அஃதென்று* உயிர்கள்மெய்விட்டு
ஆதிப்பரனொடொன்றாமென்றுசொல்லும் அவ்வல்லலெல்லாம்
வாதில்வென்றான்* எம்இராமாநுசன் மெய்ம்மதிக்கடலே. (58)

கடலளவாயதிசையெட்டினுள்ளும்* கலியிருளே
மிடைதருகாலத்து இராமாநுசன்* மிக்கநான்மறையின்
சுடரொளியால் அவ்விருளைத் துரந்திலனேல் உயிரை
யுடையவன்* நாரணனென் றறிவாரில்லை உற்றுணர்ந்தே. (59)

உணர்ந்தமெய்ஞ்ஞானியர் யோகம்தொறும்* திருவாய்மொழியின்
மணந்தரும்இன்னிசைமன்னுமிடந்தொறும்* மாமலராள்
புணர்ந்தபொன்மார்பன்பொருந்தும்பதிதொறும்புக்குநிற்கும்
குணந்திகழ்கொண்டல்* இராமாநுசன் எம்குலக்கொழுந்தே.

கொழுந்துவிட்டோடிபடரும் வெங்கோள்வினையால்* நிரயத்து
அழுந்தியிட்டேனை வந்துஆட்கொண்டபின்னும்* அருமுனிவர்
தொழும்தவத்தோன்எம்இராமாநுசன்தொல்புகழ்சுடர்மிக்கு
எழுந்தது* அத்தால்நல்லதிசயம்கண்டது இருநிலமே. (61)

இருந்தேன்இருவினைப்பாசம்கழற்றி* இன்றுயான்இறையும்
வருந்தேன்இனி எம்இராமாநுசன்* மன்னுமாமலர்த்தாள்
பொருந்தாநிலையுடைப்புன்மையினோர்க்கு ஒன்றும்நன்மைசெய்யாப்
பெருந்தேவரைப்பரவும்* பெரியோர்தம்கழல்பிடித்தே. (62)

பிடியைத்தொடரும் களிறென்ன* யான்உன்பிறங்கியசீர்
அடியைத்தொடரும்படி நல்கவேண்டும்* அறுசமயச்இப்
செடியைத்தொடரும் மருள்செறிந்தோர்சிதைந்தோடவந்து
படியைத்தொடரும்* இராமாநுச! மிக்கபண்டிதனே! (63)

Koviloor Digital Library

பண்தருமாறன் பசுந்தமிழ்* ஆனந்தம்பாய்மதமாய்
விண்டிடஎங்களிராமாநுசமுனிவேழம்*மெய்ம்மை
கொண்டநல்வேதக்கொழுந்தண்டமேந்திக் குவலயத்தே
மண்டிவந்தேன்றது* வாதியர்காள்! உங்கள்வாழ்வற்றதே. (64)

வாழ்வற்றது தொல்லைவாதியர்க்கு* என்றும்மறையவர்தம்
தாழ்வற்றது தவம்தாரணிபெற்றது* தத்துவநூல்
கூழற்றது குற்றமெல்லாம்பதித்தகுணத்தினர்க்குஅந்
நாழற்றது*நம்இராமாநுசன்தந்த ஞானத்திலே. (65)

ஞானம்கனிந்த நலங்கொண்டு* நாள்தொறும்நைபவர்க்கு
வானம்கொடுப்பது மாதவன்* வல்வினையேன்மனத்தில்
ஈனம்கடிந்தஇராமாநுசன் தன்னையெய்தினர்க்குஅத்
தானம்கொடுப்பது*தன்தகவென்னும் சரண்கொடுத்தே (66)

சரணமடைந்த தருமனுக்கா* பண்டுநூற்றுவரை
மரணமடைவித்த மாயவன்* தன்னைவணங்கவைத்த
கரணமிவைஉமக்கன்றென்றுஇராமாநுசன் உயிர்கட்கு
அரணங்கமைத்திலனேல்* அரணார் மற்றிவ்வாருயிர்க்கே? (67)

ஆரெனக்கின்று நிகர்சொல்லில்* மாயன்அன்றுஐவர்தெய்வத்
தேரினில் செப்பியகீதையின்* செம்மைப்பொருள்தெரியப்
பாரினில்சொன்ன இராமாநுசனைப் பணியும்நல்லோர்
சீரினில்சென்றுபணிந்தது* என்ஆவியும்சிந்தையுமே. (68)

சிந்தையினோடுகரணங்கள் யாவும்சிதைந்து* முன்னாள்
அந்தமுற்றாழ்ந்ததுகண்டு* அவைஎன்தனக்குஅன்றுஅருளால்
தந்தஅரங்கனும்தன்சரண்தந்திலன் தான்அதுதந்து*
எந்தைஇராமாநுசன் வந்தெடுத்தனன் இன்றுஎன்னையே. (69)

என்னையும்பார்த்து என்னியல்வையும்பார்த்து* எண்ணில்பல்குணத்த
உன்னையும்பார்க்கில்அருள்செய்வதேநலம்*அன்றிஎன்பால்
பின்னையும்பார்க்கில்நலமுளதே உன்பெருங்கருணை
தன்னைஎன்பார்ப்பர்?* இராமாநுச! உன்னைச்சார்ந்தவரே. (70)

சார்ந்ததுஎன்சிந்தை உன்தாளிணைக்கீழ்* அன்புதான்மிகவும்
கூர்ந்தது அத்தாமரைத்தாள்களுக்கு* உன்தன்குணங்களுக்கே
தீர்ந்ததுஎன்செய்கை முன்செய்வினை நீசெய்வினையதனால்
பேர்ந்தது* வண்மைஇராமாநுச! எம்பெருந்தகையே! (71)

Koviloor Digital Library

கைத்தனன் தீயசமயக்கலகரை* காசினிக்கே
உய்த்தனன் தூயமறைநெறிதன்னை* என்றுஉன்னிஉள்ளம்
நெய்த்தஅன்போடு இருந்தேத்தும் நிறைபுகழோருடனே
வைத்தனன்என்னை* இராமாநுசன் மிக்கவண்மைசெய்தே. (72)

வண்மையினாலும் தன்மாதகவாலும்* மதிபுரையும்
தண்மையினாலும் இத்தாரணியோர்கட்கு* தான்சரணாய்
உண்மைநன்ஞானமுரைத்த இராமாநுசனை உன்னும்
திண்மையல்லால் எனக்கில்லை* மற்றோர்நிலை தேர்ந்திடிலே(73)

தேரார் மறையின்திறமென்று* மாயவன்தீயவரைக்
கூராழிகொண்டுகுறைப்பது* கொண்டலனையவண்மை
ஏரார்குணத்துஎம்இராமாநுசன் அவ்வெழில்மறையில்
சேராதவரைச்சிதைப்பது* அப்போதுஒருசிந்தைசெய்தே. (74)

செய்த்தலைச்சங்கம் செழுமுத்தமீனும்* திருவரங்கர்
கைத்தலத்துஆழியும் சங்கமும்ஏந்தி* நங்கண்முகப்பே
மொய்த்தலைத்துஉன்னைவிடேனென்றிருக்கிலும் நின்புகழே
மொய்த்தலைக்கும்வந்து*இராமாநுச! என்னைமுற்றும்நின்றே.

†நின்றவண்கீர்த்தியும் நீள்புனலும்* நிறைவேங்கடப்பொற்
குன்றமும்வைகுந்தநாடும் குலவியபாற்கடலும்*
உன்தனக்குஎத்தனையின்பந்தரும்? உன்னிணைமலர்த்தாள்
என்தனக்கும்அது* இராமாநுச!*இவைஈந்தருளே. (76)

ஈந்தனன்ஈயாதஇன்னருள்* எண்ணில்மறைக்குறும்பைப்
பாய்ந்தனன் அம்மறைப்பல்பொருளால்* இப்படியனைத்தும்
ஏய்ந்தனன்கீர்த்தியினால் என்வினைகளைவேர்பறியக்
காய்ந்தனன்* வண்மைஇராமாநுசற்குஎன்கருத்துஇனியே? (77)

கருத்தில்புகுந்து உள்ளில்கள்ளம்கழற்றி* கருதரிய
வருத்தத்தினால் மிகவஞ்சித்து* நீஇந்தமண்ணகத்தே
திருத்தித்திருமகள் கேள்வனுக்குஆக்கியபின் என்னெஞ்சில்
பொருத்தப்படாது* எம்இராமாநுச! மற்றோர்பொய்ப்பொருளே. (78)

பொய்யைச்சுரக்கும் பொருளைத்துரந்து* இந்தப்பூதலத்தே
மெய்யைப்புரக்கும் இராமாநுசன்நிற்க* வேறுநம்மை
உய்யக்கொள்ளவல்லதெய்வம்இங்குயாதென்று உலர்ந்துஅவமே
ஐயப்படாநிற்பர்* வையத்துள்ளோர் நல்லறிவிழந்தே. (79)

Koviloor Digital Library

நல்லார்பரவும் இராமாநுசன்* திருநாமம்நம்ப
வல்லார்திறத்தை மறவாதவர்கள்யவர்* அவர்க்கே
எல்லாவிடத்திலும்என்றும் எப்போதிலும்எத்தொழும்பும்
சொல்லால்மனத்தால்* கருமத்தினுல்செய்வன்சோர்வின்றியே.

சோர்வின்றி உன்தன் துணையடிக்கீழ்* தொண்டுபட்டவர்பால்
சார்வின்றிநின்றஎனக்கு* அரங்கன்செய்யதாளிணைகள்
பேர்வின்றிஇன்று பெறுத்தும்இராமாநுச? இனிஉன்
சீரொன்றியகருணைக்கு* இல்லைமாறு தெரிவுறிலே. (81)

தெரிவுற்றஞானம் செறியப்பெருது* வெந்தீவினையால்
உருவற்றஞானத்து உழல்கின்றஎன்னை* ஒருபொழுதில்
பொருவற்றகேள்வியனுக்கிநின்ருன் என்னபுண்ணியனே?
தெரிவுற்றகீர்த்தி* இராமாநுசனென்னும் சீர்முகிலே. (82)

சீர்கொண்டு பேரறம்செய்து* நல்வீடுசெறிதுமென்னும்
பார்கொண்டமேன்மையர் கூட்டனல்லேன்* உன்பதயுகமாம்
ஏர்கொண்டவீட்டை எளிதினில்எய்துவன் உன்னுடைய
கார்கொண்டவண்மை* இராமாநுச! இதுகண்டுகொள்ளே. (83)

கண்டுகொண்டேன் எம்இராமாநுசன்தன்னைகாண்டலுமே [வெந்நோய்
தொண்டுகொண்டேன்அவன்தொண்டர்பொற்ருளில்* என்தொல்லை
விண்டுகொண்டேன் அவன்சீர்வெள்ளவாரியைவாய்மடுத்து இன்று
உண்டுகொண்டேன்*இன்னம்உற்றனஓதில்உலப்பில்லையே (84)

ஓதியவேதத்தின் உட்பொருளாய்* அதனுச்சிமிக்க
சோதியைநாதனெனஅறியாது உழல்கின்றதொண்டர்*
பேதைமைதீர்த்தஇராமாநுசனைத் தொழும்பெரியோர்
பாதமல்லால்என்தன்ஆருயிர்க்கு* யாதொன்றும்பற்றில்லையே. (85)

பற்று மனிசரைப்பற்றி* அப்பற்றுவிடாதவரே
உற்றுரெனஉழன்று ஓடிநையேன்இனி* ஒள்ளியநூல்
கற்றுர்பரவும் இராமாநுசனைக் கருதும் உள்ளம்
பெற்றுர்யவர்* அவர்எம்மைநின்ருளும்பெரியவரே. (86)

பெரியவர்பேசிலும் பேதையர்பேசிலும்* தன்குணங்கட்கு
உரியசொல்லென்று முடையவனென்றென்று* உணர்வின்மிக்கோர்
தெரியும்வண்கீர்த்தி இராமாநுசன் மறைதேர்ந்துஉலகில்
புரியும்நன்ஞானம்* பொருந்தாதவரைப் பொரும்கலியே. (87)

Koviloor Digital Library

கலிமிக்கசெந்நெல் கழனிக்குறையல்* கலைப்பெருமான்
ஒலிமிக்கபாடலையுண்டு தன்னுள்ளம் தடித்து* அதனுல்
வலிமிக்கசியம்இராமாநுசன் மறைவாதியராம்
புலிமிக்கதென்று* இப்புவனத்தில்வந்தமை போற்றுவனே (88)

போற்றரும்சிலத்துஇராமாநுச!* நின்புகழ்தெரிந்து*
சாற்றுவனேல் அதுதாழ்வு* அதுதீரில் உன்சீர்தனக்குஓர்
ஏற்றமென்றேகொண்டிருக்கிலும் என்மனமேத்தியன்றி
ஆற்றகில்லாது* இதற்குஎன்வினைவாயென்றிட்டஞ்சுவனே.

நினையார்பிறவியை நீக்கும்பிரானை* இந்நீனிலத்தே
எனையாளவந்த இராமாநுசனை* இருங்கவிகள்
புனையார் புனையும்பெரியவர்தாள்களில் பூந்தொடையல்
வனையார்* பிறப்பில்வருந்துவர் மாந்தர்மருள்சுரந்தே. (90)

மருள்சுரந்து ஆகமவாதியர்கூறும்* அவப்பொருளாம்
இருள்சுரந்தெய்த்த உலகிருள்நீங்க* தன்ஈண்டியசீர்
அருள்சுரந்துஎல்லாவுயிர்கட்கும்நாதன் அரங்கனென்னும்
பொருள்சுரந்தான்* எம்இராமாநுசன் மிக்கபுண்ணியனே. (91)

புண்ணியநோன்பு புரிந்துமிலேன்* அடிபோற்றிசெய்யும்
நுண்ணருங்கேள்வி நுவன்றுமிலேன்* செம்மைநூற்புலவர்க்கு
எண்ணருங்கீர்த்தி இராமாநுச! இன்றுநீபுகுந்துஎன்
கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும்* நின்றஇக்காரணம்கட்டுரையே.

கட்டப்பொருளைமறைப்பொருளென்று* கயவர்சொல்லும்
பெட்டைக்கெடுக்கும் பிரானல்லனே?* என்பெருவினையைக்
கிட்டிக்கிழங்கொடு தன்னருளென்னும் ஒள்வாளுருவி
வெட்டிக்களைந்த* இராமநுசனென்னும் மெய்த்தவனே. (93)

தவம்தரும்செல்வம் தகவும்தரும்* சலியாப்பிறவிப்
பவம்தரும் தீவினைபாற்றித்தரும்* பரந்தாமமென்னும்
திவம்தரும் தீதிலிராமாநுசன் தன்னைச்சார்தவர்கட்கு
உவந்தருந்தேன்* அவன்சீரன்றியானென்றும்உள்மகிழ்ந்தே.

உண்ணின்றுஉயிர்களுக்கு உற்றனவேசெய்து* அவர்க்குஉயவே
பண்ணும்பரனும் பரிவிலனும்படி* பல்லுயிர்க்கும்
விண்ணின்தலைநின்று விடளிப்பான் எம்இராமாநுசன்
மண்ணின்தலத்துஉதித்து* உய்மறைநாலும் வளர்த்தனனே.

Koviloor Digital Library

வளரும்பிணிகொண்ட வல்வினையால்* மிக்கநல்வினையில்
கிளரும்துணிவு கிடைத்தறியாது* முடைத்தலையூன்
தளருமளவும் தரித்தும்விழுந்தும் தனிதிரிவேற்கு
உளர்எம்இறைவர்* இராமாநுசன்தன்னை உற்றவரே. (96)

தன்னையுற்றாட்செய்யும் தன்மையினோர்*மன்னுதாமரைத்தாள்
தன்னையுற்றாட்செய்ய என்னையுற்றான்இன்று* தன்தகவால்
தன்னையுற்றாரன்றித்தன்மையுற்றாரில்லையென்றறிந்து
தன்னையுற்றாரை* இராமாநுசன்குணம்சாற்றிடுமே. (97)

†இடுமே இனியசுவர்க்கத்தில்* இன்னும்நரகிலிட்டுச்
சுடுமேஅவற்றைத்தொடர்தருதொல்லை* சுழல்பிறப்பில்
நடுமேஇனிநம்இராமாநுசன் நம்மைநம்வசத்தே
விடுமே சரணமென்றால்* மனமே! நையல் மேவுதற்கே. (98)

தற்கச்சமணரும் சாக்கியப்பேய்களும்* தாழ்சடையோன்
சொற்கற்றசோம்பரும் சூனியவாதரும்* நான்மறையும்
நிற்கக்குறும்புசெய் நீசரும்மாண்டனர் நீணிலத்தே
பொற்கற்பகம்* எம்இராமாநுசமுனி போந்தபின்னே. (99)

போந்ததுஎன்னெஞ்சென்னும் பொன்வண்டு*உனதடிப்போதில்ஒண்சீ
ராந்தெளிதேனுண்டு அமர்ந்திடவேண்டி* நின்பாலதுவே
ஈந்திடவேண்டும்இராமாநுச! இதுவன்றிஒன்றும்
மாந்தகில்லாது* இனிமற்றொன்றுகாட்டி மயக்கிடலே. (100)

மயக்கும்இருவினை வல்லியில்பூண்டு* மதிமயங்கித்
துயக்கும்பிறவியில் தோன்றியஎன்னை* துயரகற்றி
உயக்கொண்டுநல்கும்இராமாநுச! என்றதுஉன்னையுன்னி
நயக்குமவர்க்கு இதிழுக்கென்பர்* நல்லவரென்றுநைந்தே

நையும்மனம் உன்குணங்களைஉன்னி* என்நாஇருந்துஎம்
ஐயன்இராமாநுசனென்றழைக்கும்* அதிவினையேன்
கையும்தொழும் கண்கருதிடும்காணக் கடல்புடைசூழ்
வையமிதனில்* உன்வண்மை என்பால்என்வளர்ந்ததுவே?

வளர்ந்தவெங்கோப மடங்கலொன்றாய்* அன்றுவாளவுணன்
கிளர்ந்த பொன்னாகம் கிழித்தவன்* கீர்த்திப் பயிரெழுந்து
விளைந்திடும்சிந்தைஇராமாநுசன் என்தன்மெய்வினைநோய்
களைந்து நன்ஞானம்அளித்தனன்* கையில்கனியென்னவே.

Koviloor Digital Library

கையில்கனியென்னக் கண்ணனைக்காட்டித்தரிலும்* உன்தன்
மெய்யில்பிறங்கியசீரன்றி வேண்டுலன்யான்* நிரயத்
தொய்யில்கிடக்கிலும் சோதிவிண்சேரிலும் இவ்வருள் நீ
செய்யில்தரிப்பன்* இராமாநுச! என்செழுங்கொண்டலே!

செழுந்திரைப்பாற்கடல் கண்துயில்மாயன்* திருவடிக்கீழ்
விழுந்திருப்பார்நெஞ்சில் மேவுநன்ஞானி* நல்வேதியர்கள்
தொழுந்திருப்பாதன்இராமாநுசனைத் தொழும்பெரியோர்
எழுந்திரைத்தாடும்இடம்* அடியேனுக்குஇருப்பிடமே. (105)

†இருப்பிடம் வைகுந்தம்வேங்கடம்*மாலிருஞ்சோலையென்னும்
பொருப்பிடம்மாயனுக்குஎன்பர்நல்லோர்*அவைதம்மொடும்-
இருப்பிடம்மாயன்இராமாநுசன்மனத்துஇன்றுஅவன்வந் [வந்
திருப்பிடம்* என்தனிதயத்துள்ளே தனக்குஇன்புறவே. (106)

†இன்புற்றசீலத்து இராமாநுச!* என்றும்எவ்விடத்தும்
என்புற்றநோயுடல்தோறும் பிறந்திறந்து* எண்ணரிய
துன்புற்றுவீயினும்சொல்லுவதுஒன்றுஉண்டுஉன்தொண்டர்கட்கே
அன்புற்றிருக்கும்படி* என்னையாக்கி அங்காட்படுத்தே. (107)

†அங்கயல்பாய்வயல் தென்னரங்கன்* அணியாகமன்னும்
பங்கயமாமலர்ப்பாவையைப் போற்றுதும்*பத்தியெல்லாம்
தங்கியதென்னத்தழைத்துநெஞ்சே! நம்தலைமிசையே
பொங்கியகீர்த்தி* இராமாநுசனடிப்பூமன்னவே. (108)

திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்.

இராமாநுசநூற்றந்தாதி ஸம்பூர்ணம்.

—*—

Koviloor Digital Library



ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

நாலாயிரத்தனியன்கள்

ராமாநுஜதயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம் |
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம் ||
லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம் |
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ||

யோ நித்ய மச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாயமேநே |
அஸ்மத்குரோர் பகவதோ஽ஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே ||

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதிஸ்
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் |
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா ||

பூதம் ஸரஸ்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந் |
பக்தாங்க்ரிரேணு பரகாலயதீந்த்ரமிச்ராந்
ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோ஽ஸ்மி நித்யம் ||

குருமுக மநதீத்ய ப்ராஹ வேதாநசேஷாந்
நரபதிபரிக்லுப்தம் சுல்கமாதாதுகாம: |
ச்வசுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ||

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூ ரென்றுஒருகால்*
சொன்னார் கழற்கமலம் சூடினோம்* —முன்னாள்
கிழியறுத்தா னென்றுரைத்தோம்*கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே! வந்து.

Koviloor Digital Library

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று*
ஈண்டிய சங்கமெடுத்தூத* வேண்டிய
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்*
பாதங்கள் யாமுடைய பற்று.

நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ச்ருதிசதசிரஸ்ஸித்தமத்யாபயந்தீ|
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்யை நமஇதமிதம் பூயஏவாஸ்து பூய:॥

அன்னவயல்புதுவையாண்டாள்*— அரங்கற்குப்
பன்னுதிருப்பாவைப்பல்பதியம்*...இன்னிசையால்
பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை* பூமாலை
சூடிக்கொடுத்தாளைச் சொல்லு.

சூடிக்கொடுத்தசுடர்க் கொடியே!* தொல்பாவை
பாடியருளவல்லபல்வளையாய்!*—நாடி நீ
வேங்கடவற்கென்னைவிதியென்றவிம்மாற்றம்*
நாம்கடவாவண்ணமேநல்கு.

அல்லிநாள்தாமரைமேலாரணங்கினின் துணைவி*
மல்லிநாடாண்டமடமயில்—மெல்லியலாள்*
ஆயர்குலவேந்தனாகத்தாள்* தென்புதுவை
வேயர்பயந்த விளக்கு.

இன்னமுதமூட்டுகே விங்கேவா பைங்கிளியே!*
தென்னரங்கம்பாடவல்ல சீர்ப்பெருமாள்*—பொன்னஞ்
சிலைசேர் நுதலியர்வேள் சேரலர்கோன்* எங்கள்
குலசேகரனென்றேகூறு.

ஆரம்கெடப்பரனன்பர்கொள்ளாரென்று* அவர்களுக்கே
வாரங்கொடுகுடப்பாம்பில்கையிட்டவன்* மாற்றலரை
வீரங்கெடுத்தசெங்கோல் கொல்லிகாவலன் வில்லவர்கோன்*
சேரன் குலசேகரன் முடிவேந்தர்சிகாமணியே.

தருச்சந்தப்பொழில்தழுவு தாரணியின்துயர்தீர*
திருச்சந்தவிருத்தம்செய் திருமழிசைப்பரன்வருமூர்*
கருச்சந்தும்காரகிலும் கமழ்கோங்கும்மணநாறும்*
திருச்சந்தத்துடன்மருவு திருமழிசைவளம்பதியே.

Koviloor Digital Library

உலகும்மழிசையு முணர்ந்து* தம்மில்
புலவர் புகழ்க்கோலால் தூக்க*—உலகுதன்னை
வைத்தெடுத்தபக்கத்தும்* மாநீர்மழிசையே
வைத்தெடுத்தபக்கம்வலிது.

மற்றொன்றும்வேண்டாமனமே! மதிளரங்கர்
கற்றினம்மேய்த்த கழலிணைக்கீழ்*—உற்ற
திருமாலைபாடுஞ்சீர்த் தொண்டரடிப்பொடியெம்
பெருமானை* எப்பொழுதும்பேசு

தமேவ மத்வா பரவாஸுதேவம்
ரங்கேசயம் ராஜவதர்ஹணீயம்|
ப்ராபோதகீம் யோசிக்ருந ஸூக்திமாலாம்
பக்தாங்ப்ரிரேணும் பகவந்தமீடே.

மண்டங்குடியென்பர்மாமறையோர்மன்னியசீர்*
தொண்டரடிப்பொடிதொன்னகரம்*—வண்டு
திணர்த்தவயல் தென்னரங்கத்தம்மானை* பள்ளி
யுணர்த்தும்பிரானுதித்தவூர்.

ஆபாதசூடமநுபூய ஹரிம் சயாநம்
மத்யே கவேரதுஹிதுர் முதிதாந்தராத்மா |
அத்ரஷ்ட்ருதாம் நயநயோர் விஷயாந்தராணும்
யோ நிஸ்சிகாய மநவை முநிவாஹநம் தம்॥

காட்டவேகண்டபாதகமலம் நல்லாடையுந்தி*
தேட்டருமுதரபந்தம் திருமார்புகண்டம்செவ்வாய்*
வாட்டமில்கண்கள் மேனி முனியேறித்தனிபுகுந்து*
பாட்டினால்கண்டுவாழும் பாணர்தாள்பரவினோமே.

கலயாமி கலித்வம்ஸம் கவிம் லோகதிவாகரம்|
யஸ்ய கோபி: ப்ரகாசாபி ராவித்யம் நிஹதம் தம:॥

வாழிபரகாலன் வாழிகலிகன்றி*
வாழிகுறையலூர்வாழ்வேந்தன்*—வாழியரோ
மாயோனைவாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன்*
தூயோன்சுடர்மானவேல்.

நெஞ்சுக்கிருள்கடிதீபம் அடங்காநெடும்பிறவி
நஞ்சுக்குநல்லவமுதம்* தமிழ்நன்னூல்துறைகள்
அஞ்சுக்கிலக்கியம் ஆரணசாரம்* பரசமயப்
பஞ்சுக்கனலின் பொறி பரகாலன்பனுவல்களே.

Koviloor Digital Library

எங்கள்கதியே! இராமாநுசமுனியே!*
சங்கைகெடுத்தாண்டதவராசா! —*பொங்குபுகழ்
மங்கையர்கோவிந்த மறையாயிரமனைத்தும்*
தங்குமனம்நீயெனக்குத்தா.

கைதைசேர்பூம்பொழில்சூழ் கச்சிநகர்வந்துதித்த*
பொய்கைப்பிரான் கவிஞர்போரேறு* —வையத்து
அடியவர்கள்வாழ அருந்தமிழ்நூற்றந்தாதி*
படிவிளங்கச்செய்தான் பரிந்து.

என்பிறவிதீர இறைஞ்சினேன் இன்னமுதா*
அன்பே தகளியளித்தானை* —நன்புகழ்சேர்
சீதத்தார்முத்துக்கள்சேரும்* —கடல்மல்லைப்
பூதத்தார் பொன்னங்கழல்.

சீராரும்மாடத்திருக்கோவலூரதனுள்
காரார்கருமுகிலைக் காணப்புக்கு* —ஓராத்
திருக்கண்டேனென்றுரைத்த சீரான்கழலே*
உரைக்கண்டாய் நெஞ்சே! உகந்து.

நாராயணன்படைத்தான் நான்முகனை* நான்முகனுக்கு
ஏரார்சிவன்பிறந்தானென்னும்சொல்* —சீரார்
மொழிசெப்பிவாழலாம் நெஞ்சமே!* மொய்பூ
மழிசைப் பரனடியேவாழ்த்து.

கருவிருத்தக்குழிநீத்தபின் காமக்கடுங்குழிவீழ்ந்து*
ஒருவிருத்தம்புக்குழலுறுவீ குயிரின்பொருள்கட்கு*
ஒருவிருத்தம்புகுதாமல் குருகையர்கோனுரைத்த*
திருவிருத்தத்தோரடிகற்றிரீர் திருநாட்டகத்தே.

காசினியோர்தாம்வாழக் கலியுகத்தேவந்துதித்து*
ஆசிரியப்பாவதனு லருமறைநூல்விரித்தானை*
தேசிகனைப் பராங்குசனைத் திகழ்வகுளத்தாரானை*
மாசடையாமனத்துவைத்து மறவாமல்வாழ்த்துதுமே.

முந்துற்றநெஞ்சே! முயற்றிதரித்துரைத்து*
வந்தித்து வாயாரவாழ்த்தியே* —சந்த
முருகூரும்சோலைசூழ் மொய்பூம்பொருநல்*
குருகூரன் மாறன்பேர் கூறு.

Koviloor Digital Library

முள்ளிச்செழுமலரோ தாரான்முளைமதியம்*
கொள்ளிக்கென்னுள்ளம் கொதியாமே*—வள்ளல்
திருவாளன் சீர்க்கலியன் கார்க்கலியைவெட்டி*
மருவாளன் தந்தான்மடல்.

பொன்னுலகில்வானவரும் பூமகளும்போற்றிசெய்யும்*
நன்னுதலீர்! நம்பிநறையூரர்*—மன்னுலகில்
என்னிலைமைகண்டு மிரங்காரேயாமாகில்*
மன்னுமடலூர்வன்வந்து.

அவிதிதவிஷயாந்தரஃ சடாரேஃ
உபநிஷதாமுபகாநமாத்ரபோகஃ।
அபிச குணவசாத்ததேகசேஷீ
மதுரகவிர் ஹ்ருதயே மமாவிரஸ்து॥

வேறொன்றும்நானறியேன் வேதம் தமிழ்செய்த*
மாறன் சடகோபன் வண்குருகூ—ரேறு* எங்கள்
வாழ்வாமென்றேத்தும்மதுரகவியார்* எம்மை
ஆள்வார்அவரே யரண்.

பக்தாம்ருதம் விச்வஜநாநுமோதநம்
ஸர்வார்த்ததம் ஸ்ரீசடகோபவாங்மயம் ।
ஸஹஸ்ரசாகோபநிஷத்ஸமாகமம்
நமாம்யஹம் த்ராவிடவேதஸாகரம் ॥

திருவழுதிநாடென்றும் தென்குருகூரென்றும்*
மருவினியவண்பொருநலென்றும்*—அருமறைக
ளந்தாதிசெய்தா னடியிணையே யெப்பொழுதும்*
சிந்தியாய் நெஞ்சே! தெளிந்து.

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர்பேணும்*
இனத்தாரையல்லா திறைஞ்சேன்*—தனத்தாலும்
ஏதுங்குறைவிலேன் *எந்தைசடகோபன்
பாதங்கள் யாமுடையபற்று.

ஏய்ந்தபெருங்கீர்த்தியிராமாநுசமுனிதன்*
வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன்—ஆய்ந்தபெருஞ்
சீரார்சடகோபன் செந்தமிழ்வேதம்தரிக்கும்
பேராதவுள்ளம்பெற.

Koviloor Digital Library

வான்திகழும்சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்*
ஆன்றதமிழ்மறைகளாயிரமும்* —ஈன்ற
முதல்தாய்சடகோபன் மொய்ப்பால்வளர்த்த*
இதத்தாய்இராமாநுசன்.

மிக்கஇறைநிலையும் மெய்யாமுயிர்நிலையும்*
தக்கநெறியும் தடையாகித் —தொக்கியலும்*
ஊழ்வினையும் வாழ்வினையு மோதும் குருகையர்கோன்*
யாழினிசை வேதத்தியல்.

முன்னைவினையகல மூங்கிற்குடியமுதன்
பொன்னங்கழற்கமலப்போதிரண்டும்* —என்னுடைய
சென்னிக்கணியாகச் சேர்த்தினேன் *தென்புலத்தார்க்கு
என்னுக்கடவுடையேன் யான்.

நயந்தருபேரின்பமெல்லாம் பழுதின்றிநண்ணினர்பால்*
சயந்தருகீர்த்திஇராமாநுசமுனிதாளிணைமேல்*
உயர்ந்தகுணத்துத்திருவரங்கத்தமுதுஓங்கும்அன்பால்
இயம்பும்* கலித்துறையந்தாதியோதவிசை நெஞ்சமே;

சொல்லின்தொகைகொண்டு உனதடிப்போதுக்குத்தொண்டுசெய்யும்*
நல்லன்பரேத்துமுன்நாமமெல்லாம் என்தன்நாவினுள்ளே*
அல்லும்பகலும் அமரும்படிநல்கு* அறுசமயம்
வெல்லும்பரம! இராமாநுச! இதுஎன்விண்ணப்பமே.

நாலாயிரத் தனியன்கள் ஸம்பூர்ணம்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்

எம்பெருமானார் திருவடிகளே சரணம்

தேசிகன் திருவடிகளே சரணம்.

—*—

Koviloor Digital Library

தனியன்

சிறொன்றுதூப்புல் திருவேங்கடமுடையான்*
பாரொன்றச்சொன்ன பழமொழியுள் —*ஒரொன்று
தானேயமையாதோ தாரணியில்வாழ்வார்க்கு*
வானேறப்போமளவும் வாழ்வு.

ஸ்ரீமத் வேதாந்ததேசிகன் அருளிச்செய்த ப்ரபந்தங்களில்

அதிகாரசங்கிரகம்

எண்சீராசிரிய விருத்தம்

†பொய்கைமுனி பூதத்தார் பேயாழ்வார் தண்
பொருநல்வருங்குருகேசன் விட்டுசித்தன்*
துய்யகுலசேகரன் நம்பாணநாதன்
தொண்டரடிப்பொடி மழிசைவந்தசோதி*
வையமெல்லாம் மறைவிளங்க வாள்வேலேந்தும்
மங்கையர்கோனென்றிவர்கள் மகிழ்ந்துபாடும்*
செய்யதமிழ்மாலைகள் நாம் தெளியவோதித்
தெளியாதமறைநிலங்கள் தெளிகின்றோமே. (1)

இன்பத்தி லிறைஞ்சுதலி லிசையும்பேற்றில்
இகழாதபல்லுறவி லிராகமாற்றில்*
தன்பற்றில் வினைவிலக்கில் தகவோக்கத்தில்
தத்துவத்தையுணர்த்துதலில் தன்மையாக்கில்*
அன்பர்க்கே யவதரிக்குமாயன்நிற்க
அருமறைகள் தமிழ்செய்தான் தாளேகொண்டு*
துன்பமற்றமதுரகவி தோன்றக்காட்டும்
தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே. (2)

†என்னுயிர் தந்தளித்தவரைச் சரணம்புக்கு
யானடைவே அவர்குருக்கள்நிரைவணங்கிப்*
பின்னருளால் பெரும்பூதூர்வந்தவள்ளல்
பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால்நம்பி*

Koviloor Digital Library

நன்னெறியையவர்க்குரைத்த உய்யக்கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனைநாதன்*
இன்னமுதத்திருமகளென்றிவரை முன்னிட்டு
எம்பெருமான் திருவடிகளடைகின்றேனே. (3)

கட்டளைக்கலித்துறை

ஆரணநூல்வழிச்செவ்வை யழித்திடுமைதுகர்க்கோர்*
வாரணமா யவர்வாதக்கதலிகள் மாய்த்தபிரான்*
எரணிகீர்த்தி இராமாநுசமுனியின்னுரைசேர்*
சீரணிசிந்தையினேம் சித்தியோமினித்தீவினையே. (4)

நீளவந்தின்று விதிவகையால் நினைவொன்றியநாம்*
மீளவந்தின்னும் வினையுடம்பொன்றி விழுந்துழலாது*
ஆளவந்தாரென வென்றருள்தந்து விளங்கியசீர்*
ஆளவந்தாரடியோம் படியோமினி அல்வழக்கே. (5)

காளம்வலம்புரியன்ன நற்காதலடியவர்க்குத்
தாளம்வழங்கித் தமிழ்மறையின்னிசைதந்த வள்ளல்*
மூளுந்தவநெறி மூட்டிய நாதமுனிகழலே*
நாளுந்தொழுதெழுவோம் நமக்காார்நிகர் நானிலத்தே. (6)

†ஆளுமடைக்கலமென்றெம்மை அம்புயத்தாள்கணவன்*
தாளிணைசேர்ந்தெமக்கும் அவைதந்த தகவுடையார்*
மூளுமிருட்கள் விள முயன்றேதிய மூன்றினுள்ளம்*
நாளுமுகக்கவிங்கே நமக்கோர்விதிவாய்க்கின்றதே* (7)

அந்தாதித்தொடை

†திருவுடன்வந்த செழுமணிபோல் திருமாலிதயம்*
மருவிடமென்ன மலரடிசூடும் வகைபெறும்நாம்*
கருவுடன்வந்த கடுவினையாற்றில் விழுந்துழலாது*
அருவுடனைந்தறிவார் அருள்செய்யவமைந்தனரே. (8)

அமையாவிவையெனுமாசையினல் அறுமூன்று உலகில்*
சுமையானகல்விகள் சூழவந்தாலுந் தொகையிவையென்று*
இமையாவிமையவரேத்திய வெட்டிரண்டெண்ணிய*நம்
சமையாசிரியர் சதுர்க்குந்தவிநிலை தந்தனரே. (9)

Koviloor Digital Library

நிலைதந்ததாரகனாய் நியமிக்கு மிறைவனுமாய்*
இலதொன்றெனாவகை எல்லாம்தனதெனுமெந்தையுமாய்*
துலையொன்றிலையென நின்ற குழாய்முடியானுடம்பாய்*
விலையின்றி நாமடியோமென்று வேதியர்மெய்ப்பொருளே. (10)

பொருளொன்றெனநின்ற பூமகள்நாத னவனடிசேர்ந்து*
அருளொன்றுமன்ப னவன்கொளுபாய மமைந்தபயன்*
மருளொன்றியவினைவல்விலங்கென்றிவை யைந்தறிவார்*
இருளொன்றிலாவகை யென்மனந்தேறவியம்பினரே. (11)

தேறவியம்பினர் சித்துமசித்துமிறையுமென*
வேறுபடும் வியன்தத்துவமூன்றும் வினையுடம்பில்*
கூறுபடுங்கொடுமோகமுந் தானிறையாங்குறிப்பும்*
மாறநினைந்தருளால் மறைநூல்தந்தவாதியரே. (12)

வாதியர் மன்னுந்தருக்கச்செருக்கின்மறைகுலையச்*
சாதுசனங்களடங்க நடுங்கத் தனித்தனியே.
ஆதியெனாவகை யாரணதேசிகர் சாற்றினர்* நம்
போதமருந்திருமா துடனின்ற புராணனையே. (13)

நின்றபுராண னடியிணையேந்தும் நெடும்பயனும்
பொன்றுதலேநிலையென்றிடப் பொங்கும்பவக்கடலும்*
நன்றிதுதீயதிதென்று நவின்றவர்நல்லருளால்*
வென்றுபுலன்களை வீடினை வேண்டும் பெரும்பயனே. (14)

வேண்டும் பெரும்பயன் வீடொன்றறிந்து விதிவகையால்*
நீண்டுங்குறுகியும் நிற்கும் நிலைகளுக்கேற்குமன்பர்*
மூண்டொன்றில் மூலவினைமாற்றுதலின் முகந்தனடி
பூண்டன்றி* மற்றோர்புகலொன்றிலையென நின்றனரே. (15)

நின்றநிலைக்குற நிற்குங்கருமமும் நோமதியால்*
நன்றெனநாடியஞானமும் நல்குமுட்கண்ணுடையார்*
ஒன்றியபத்தியு மொன்றுமிலாவிரைவார்க்கு* அருளால்
அன்றுபயன்தருமாறுமறிந்தவரந்தணரே. (16)

அந்தணரந்தியரெல்லையினின்ற வனைத்துலகும்*
நொந்தவரே முதலாகநுடங்கி அவன்னியராய்*
வந்தடையும்வகை வன்தகவேந்திவருந்திய* நம்
அந்தமிலாதியை அன்ப ரறிந்தறிவித்தனரே. (17)

Koviloor Digital Library

அறிவித்தனரன்ப ரையம்பறையு முபாயமில்லாத்*
துறவித்துனியில் துணையாம்பரனை வரிக்கும்வகை*
உறவித்தனையின்றி யொத்தாரெனநின்ற உம்பரைநாம்*
பிறவித்துயர்செகுப்பீரென்றிரக்கும் பிழையறவே. (18)

அறவேபரமென் றடைக்கலம்வைத்தன ரன்றுநம்மைப்*
பெறவேகருதிப் பெருந்தகவுற்றபிரானடிக்கீழ்*
உறவேயிவனுயிர்காக்கின்ற ஒருயிருண்மையை* நீ
மறவேலென நம்மறைமுடிசூடிய மன்னவரே. (19)

மன்னவர் விண்ணவர்வானோரிறையொன்றும்வான்கருத்தோர்*
அன்னவர்வேள்வியனைத்துமுடித்தன ரன்புடையார்க்கு*
என்னவரந்தர வென்றநம்மத்திகிரித்திருமால்*
முன்னம்பருந்தி யடைக்கலங்கொண்ட நம்முக்கியரே. (20)

முக்கியமந்திரங்காட்டிய மூன்றில்நிலையுடையார்*
தக்கவையன்றித் தகாதவையொன்றுந் தமக்கிரையார்*
இக்கருமங்க ளெமக்குளவென்னு மிலக்கணத்தால்*
மிக்கவுணர்த்தியர் மேதினிமேவிய விண்ணவரே. (21)

விண்ணவர்வேண்டி விலக்கின்றிமேவு மடிமையெல்லாம்*
மண்ணுலகத்தில் மகிழ்ந்தடைகின்றனர் வண்துவரைக்*
கண்ணனடைக்கலங்கொள்ளக் கடன்கள்கழற்றிய* நம்
கண்ணமருந்தமிழ்வேதமறிந்த பகவர்களே. (22)

வேதமறிந்தபகவர்வியக்க விளங்கியசீர்*
நாதன்வகுத்தவகைபெறும்நாம் அவன்நல்லடியார்க்கு*
ஆதரமிக்க வடிமையிசைந் தழியாமறைநூல்
நீதிநிறுத்த நிலைகுலையாவகை நின்றனமே. (23)

நின்றனமன்புடைவானோர் நிலையில் நிலமளந்தான்*
நன்றிதுதீயதிதென்று நடத்திய நான்மறையால்*
இன்றுநமக்கிரவாதலின் இம்மயன்நிலவே
அன்றி* அடிக்கடி ஆரிருள் தீர்க்கவடியுளதே. (24)

உளதானவல்வினைக் குள்ளம்வெருவி யுலகளந்த*
வளர்தாமரையினை வஞ்சரணாக வரித்தவர்தாம்*
களைதானெனவெழுங் கன்மந்துறப்பர் துறந்திடினும்*
இளைதாம நிலைசெக எங்கள்பிரானருள்தேனெழுமே. (25)

Koviloor Digital Library

†தேனார்கமலத்திருமகள்நாதன் திகழ்ந்துறையும்*
வானுடுகந்தவர் வையத்திருப்பிடம்* வன்றருமக்
கானுரிமயமுங்கங்கையுங் காவிரியுங்கடலும்*
நானுநகரமும் நாகமுகங்கூடிய நன்னிலமே. (26)

நன்னிலமாமது நற்பகலாமது* நன்னிமித்தம்
என்னலுமாமது யாதானுமாமங்கடியவர்க்கு*
மின்னிலைமேனி விடும்பயணத்து விலக்கிலதோர்*
நன்னிலையாம்நடுநாடிவழிக்கு நடைபெறவே. (27)

நடைபெறவங்கிபகலொளிநாள் உத்தராயணமாண்டு*
இடைவருகாற்றிரவி இரவின்பதிமின்வருணன்*
குடையுடைவானவர்கோன் பிரசாதிபயென்றிவரால்*
இடையிடைபோகங்களெய்தி எழிற்பதமேறுவரே. (28)

ஏறியெழிற்பத மெல்லாவுயிர்க்குமிதமுகக்கும்*
நாறுதுழாய்முடிநாதனைநண்ணி யடிமையில்நம்*
கூறுகவர்ந்த குருக்கள் குழாங்கள் குரைகழற்கீழ்*
மாறுதலின்றி மகிழ்ந்தெழும்போகத்துமன்னுவமே. (29)

†மன்னுமனைத்துறவாய் மருள்மாற்றருளாழியுமாய்த்*
தன்னினைவாலனைத்துந் தரித்தோங்குந்தனியிறையாய்*
இன்னமுகத்தமுதா லிரங்குந்திருநாரணனே*
மன்னியவன்சரண் மற்றோர்பற் றின்றிவரிப்பவர்க்கே. (30)

வரிக்கின்றனன்பரன்யாவரை யென்று மறையதனில்*
விரிக்கின்றதுங் குறியொன்றால்வினையரையாதலில்நாம்*
உரைக்கின்றநன்னெறி யோரும்படிகளிலோர்ந்து* உலகம்
தரிக்கின்றதாரகனார் தகவால் தரிக்கின்றனமே. (31)

தகவால்தரிக்கின்ற வன்னடியார்களைத் தன்திறத்தில்*
மிகவாதரஞ்செயும் மெய்யருள்வித்தகன்மெய்யுரையின்*
அகவாயறிந்தவ ராரணநீதிநெறிகுலைதல்*
உகவாரென வெங்கள்தேசிக ருண்மையுரைத்தனரே. (32)

உண்மையுரைக்குமறைகளி லோங்கியவுத்தமனார்*
வண்மையளப்பரிதாதலின் வந்துகழல்பணிவார்*
தண்மைகிடக்கத் தாமளவென்றவியப்பிலதாம்*
உண்மையுரைத்தனரோரந்தவிரவுயர்ந்தனரே. (33)

Koviloor Digital Library

உயர்ந்தனன்காவலனல்லார்க் குரிமைதுறந்துயிராய்*
மயர்ந்தமைதீர்ந்து மற்றோர்வழியின்றியடைக்கலமாய்ப்*
பயந்தவன்நாரணன் பாதங்கள்சேர்ந்துபழவடியார்*
நயந்தகுற்றேவலெல்லாம் நாடும் நன்மனுவோதினமே. (34)

ஓதுமிரண்டையிசைந் தருளாலுத வுந்திருமால்*
பாதமிரண்டுஞ் சரணெனப்பற்றி நம்பங்கயத்தாள்*
நாதனைநண்ணி நலந்திகழ்நாட்டிலடிமையெல்லாம்*
கோதிலுணர்த்தியுடன் கொள்ளுமாறு குறித்தனமே. (35)

குறிப்புடன்மேவுந் தருமங்களின்றி யக்கோவலனார்*
வெறித்துளவக்கழல் மெய்யரணென்று விரைந்தடைந்து*
பிரித்தவினைத்திரள் பின்றொடராவகை யப்பெரியோர்*
மறிப்புடைமன்னருள்வாசகத்தால் மருளற்றனமே. (36)

மருளற்றதேசிகர் வானுகப்பாலிந்தவையமெல்லாம்*
இருளற் றிறையவனிணையடி பூண்டுயவெ ண்ணுதலால்*
தெருளுற்றசெந்தொழிற்செல்வம்பெருகிச் சிறந்தவர்பால்*
அருளுற்றசிந்தையினா லழியாவிளக்கேற்றினரே. (37)

ஏற்றிமனத்தெழில்ஞானவிளக்கை யிருளனைத்தும்*
மாற்றினவர்க்கு* ஒருகைமாறு மாயனுங்காணகில்லான்*
போற்றியுகப்பதும் புந்தியிற்கொள்வதும் பொங்குபுகழ்ச்*
சாற்றிவளர்ப்பதுஞ் சற்றல்லவோமுன்னம்பெற்றதற்கே! (38)

முன்பெற்றஞானமும் மோகந்துறக்கலும்மூன்றுரையில்*
தன்பற்றதன்மையுந் தாழ்ந்தவர்க்கியுந்தனித்தகவும்*
மன்பற்றிநின்றவகை யுரைக்கின்றமறையவர்பால்*
பின்பற்றியென்பயன்? சிரறிவோர்க்கிவை செப்பினமே. (39)

†செப்பச்செவிக்கமுதென்னத்திகழுஞ் செழுங்குணத்துத்*
தப்பற்றவர்க்குத் தாமேயுகந்துதருந்தகவால்*
ஒப்பற்றநான்மறையுள்ளக்கருத்தி லுரைத்துரைத்த*
முப்பத்திரண்டிவை முத்தமிழ்சேர்ந்தமொழித்திருவே (40)

எண்சீராசிரிய விருத்தம்

†புருடன்மணிவரமாகப் பொன்றாமூலப்
பிரகிருதிமறுவாக மான்தண்டாகத்*
தெருள்மருள்வாள்மறைவாக ஆங்காரங்கள்
சார்ங்கஞ்சங்காக மனந்திகிரியாக*

Koviloor Digital Library

இருடிகங்களீரைந்துஞ் சரங்களாக
விருபூதமாலை வனமாலையாகக்*
கருடனுருவாமறையின் பொருளாங்கண்ணன்
கரிகிரிமேல்நின்றனைத் துங்காக்கின்றானே. (41)

†ஆராதவருளமுதம் பொதிந்தகோயில்
அம்புயத்தோனயோத்திமன்னர்க்களித்தகோயில்*
தோலாததனிவீரன் தொழுதகோயில்
துணையானவீடணற்குத் துணையாங்கோயில்*
சேராதபயனெல்லாஞ் சேர்க்குங்கோயில்
செழுமறையின்முதலெழுத்துச் சேர்ந்தகோயில்*
தீராதவினையனைத்துந் தீர்க்குங்கோயில்
திருவரங்கமெனத்திகழுங் கோயில்தானே. (42)

†கண்ணனடியிணையெமக்குக் காட்டும்வெற்புக்
கடுவினையரிருவினையுங் கடியும்வெற்பு*
திண்ணமிதுவீடென்னத்திகழும்வெற்புத்
தெளிந்தபெருந்தீர்த்தங்கள் செறிந்தவெற்பு*
புண்ணியத்தின்புகலிதென்னப் புகழும்வெற்புப்
பொன்னுலகில் போகமெல்லாம்புணர்க்கும்வெற்பு*
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும்வெற்பு
வேங்கடவெற்பெனவிளங்கும் வேதவெற்பே. (43)

அறுசீர்ச்சந்தவிருத்தம்

†உத்தமவமர்த்தலமமைத்ததொ ரெழிற்றனுவுயர்த்தகணையால்*
அத்திரவரக்கன்முடிபத்துமொருகொத்தென உதிர்த்ததிறலோன்
மத்துறுமிகுத்ததயிர்மொய்த்தவெண்ணெய்வைத்ததுணுமத்தனிடமாம்*
அத்திகிரிபத்தர்வினை தொத்தறவறுக்குமணியத்திகிரியே. (44)

எழுசீராசிரியவிருத்தம்

எட்டுமாமூர்த்தி யெண்கண்ண னெண்டிக்கு
எட்டிறையெண்பிரகிருதி*
எட்டுமாவரைகளீன்றவெண்குணத்தோன்
எட்டெணு மெண்குணமதியோர்க்கு*
எட்டுமாமல ரெண்சித்தி யெண்பத்தி
எட்டியோகாங்க மெண்செல்வம்*
எட்டுமாகுண மெட்டெட்டெணுங்கலை எட்
டிரதமேலதுவு மெட்டினவே. (45)

Koviloor Digital Library

எண்சீராசிரியவிருத்தம்

ஒண்டொடியாள் திருமகளுந் தானுமாகி
ஒருநினைவா லீன்றவுயிரெல்லாமுய்ய*
வண்டுவரைநகர்வாழ வசுதேவற்காய்
மன்னவர்க்குத் தேர்ப்பாகனுகிநின்ற*
தண்டுளவமலர்மார்பன் தானேசொன்ன
தனித்தருமந்தானெமக்காய்த் தன்னையென்றும்*
கண்டுகளித்தடிசூட விலக்காய்நின்ற
கண்புதையல் விளையாட்டைக் கழிக்கின்ருனே. (46)

மூண்டாலு மரியதவின் முயலவேண்டா
முன்னமதிலாசைதனைவிடுகை திண்மை*
வேண்டாதுசரணநெறிவேறோர்கூட்டு
வேண்டியலனத்திரம்போல் வெள்கிநிற்கும்*
நீண்டாகு நிறைமதியோர் நெறியில்கூடா
நின்றவிமைதுணையாக வென்றன்பாதம்*
பூண்டாலுன் பிழைகளெல்லாம் பொறுப்பேனென்ற
புண்ணியனுர் புகழனைத்தும் புகழுவோமே. (47)

சாதனமுநற்பயனு நானேயாவன்
சாதகனுமென்வயமா யென்னைப்பற்றும்*
சாதனமுஞ்சரணநெறி யன்றுனக்குச்
சாதனங்களிந்நிலைக்கோ ரிடையிவில்லா*
வேதனைசேர்வேறங்க மிதனில்வேண்டா
வேறெல்லாநிற்குநிலை நானேநிற்பன்*
தூதனுமாநாதனுமா மென்னைப்பற்றிச்
சோகந்தீரெனவுரைத்தான் சூழ்கின்ருனே. (48)

தன்வினைவில்லிலக்கின்றித் தன்னைநண்ணுர்
நினைவனைத்துந்தான் விளைத்தும் விலக்குநாதன்*
எந்நினைவையிப்பவத்திலின்று மாற்றி
யிணையடிக்கீழடைக்கலமென் றெம்மை வைத்து*
முன்வினைவால் யாம்முயன்ற வினையால்வந்த
முனிவயர்ந்துமுத்திதர முனனேதோன்றி*
நன்வினைவால்நாமிசையுங்கால மின்றே
நானையோ வென்று நகைசெய்கின்ருனே. (49)

Koviloor Digital Library

கட்டளைக்கலித்துறை

†பாட்டுக்குரிய பழையவர்மூவரைப் பண்டொருகால்*
மாட்டுக்கருள்தருமாயன் மலித்து வருத்துதலால்*
நாட்டுக்கிருள்செக நான்மறையந்திநடைவிளங்க*
வீட்டுக்கிடைகழிக்கே வெளிகாட்டுமம்மெய்விளக்கே. (50)

பதினாறுசீராசிரியவிருத்தம்

†உறுசகடமுடைய வொருகாலுற்றுணர்ந்தன*
உடன்மருதமுடைய வொருபோதிற்றவழ்ந்தன*
உறிதடவுமளவி லுரலூடுற்றுநின்றன*
உறுநெறி ஓர் தருமன்விடுதூதுக்குகந்தன*
மறநெறியர்முறிய பிருதானத்துவந்தன*
மலர்மகள்கைவருட மலர்போதிற்சிவந்தன
மறுபிறவியறுமுனிவர்மாலுக் கிசைந்தன*
மனுமுறையில்வருவதோர்விமானத்துறைந்தன*(51)

அறமுடையவிசயனமர்தேரில் திகழ்ந்தன*
அடலுரகபடமடிய வாடிக்கடிந்தன*
அறுசமயமறிவரிய தானத்தமர்ந்தன
அணிகுருகைநகர் முனிவர்நாவுக்கமைந்தன*
வெறியுடையதுளவமலர் வீறுக்கணிந்தன*
விழுகரியோர் குமரனென மேவிச்சிறந்தன*
விறலசுரர் படையடைய வீயத்தொடர்ந்தன*
விடலரியபெரியபெருமாள் மெய்ப்பதங்களே. (52)

எண்சீராசிரியவிருத்தம்

மறையுரைக்கும்பொருளெல்லா மெய்யென்றோர்வார்
மன்னியசூர்மதியுடையார் வண்குணத்தில்*
குறையுரைக்கநினைவில்லார் குருக்கள்தம்பால்
கோதற்றமனம்பெற்றார் கொள்வார்நன்மை*
சிறைவளர்க்குஞ்சிலமாந்தர் சங்கேதத்தால்
சிதையாத திண்மதியோர் தெரிந்ததோரார்*
பொறைநிலத்தில் மிகும்புனிதர் காட்டுமெங்கள்
பொன்றாதநன்னெறியில் புகுதுவாரே. (53)

Koviloor Digital Library

கட்டளைக்கலித்துறை

இதுவழியின்னமுதென்றவ ரின்புலன்வேறிடுவார்*
இதுவழியாமலவென்றறிவா ரெங்கள் தேசிகரே*
இதுவழியெய்துகவென் றுகப்பாலென்பிழைபொறுப்பார்*
இதுவழியாமறையோரருளால் யாமிசைந்தனமே. (54)

†எட்டுமிரண்டுமறியாதவெம்மை யிவையறிவித்து*
எட்டவொண்ணாதவிடந்தரு மெங்களம்மாதவனார்*
முட்டவினைத்திரள்மாள முயன்றிடுமஞ்சலென்றார்*
கட்டெழில்வாசகத்தால் கலங்காநிலைபெற்றனமே. (55)

†வானுளமர்ந்தவருக்கும் வருந்தவருநிலைகள்*
தானுளனாயுகக்குந்தர மிங்குநமக்குளதே
கூனுளநெஞ்சுகளாற் குற்றமெண்ணியிகழ்ந்திடினும்*
தேனுளபாதமலர்த்திருமாலுக்குத் தித்திக்குமே. (56)

†வெள்ளைப்பரிமுகர் தேசிகராய் விரகால்* அடியோம்
உள்ளத்தெழுதியதோலையிலிட்டனம் யாமிதற்கென்?*
கொள்ளத்துணியினுங் கோதென்றிகழினுங் கூர்மதியீர்!*
வள்ளத்தனையுகவாதிகழா தென்னெழில்மதியே. (57)

அடிவரவு:—பொய்கை இன்பத்தில் என்னுயிர் ஆரண நூல் நீளவந்து காளம்வலம் ஆளுமடை திருவுடன்—புருடன் ஆராத கண்ணன் உத்தம எட்டுமாமூர்த்தி ஒண்தொடியாள் மூண்டாலும் சாதனமும் தன்வினைவில் பாட்டுக்கு உறுசகடம் வறை இதுவழிஎட்டும் வானுள வெள்ளை மூலம்.

தேசிகன் திருவடிகளே சரணம்

அதிகாரசங்கிரகம் ஸம்பூர்ணம்.

—*—

Koviloor Digital Library

அடைக்கலப்பத்து

—*—

சொச்சகக்கலிப்பா

†பத்திமுதலாமவற்றில் பதியெனக்குக்கூடாமல்*
எத்திசையுமுழன்றேடி இளைத்துவிழுங்காகம்போல்*
முத்திதருநகரேழில் முக்கியமாங்கச்சிதனில்*
அத்திகிரியருளாளர்க்கு அடைக்கலம்நான்புகுந்தேனே. (1)

சடைமுடியன்சதுமுகனென்று அவர்முதலாந்தரமெல்லாம்*
அடையவினைப்பயனுகி அழிந்துவிடும்படிகண்டு*
கடிமலராள்பிரியாத கச்சிநகரத்திகிரி*
இடமுடையஅருளாளர் இணையடிகளடைந்தேனே. (2)

மந்திரங்கள்வேறின்றித் தமதுவழியழியாது*
மந்திரங்கள்தம்மாலும் மற்றுமுள்ளவுரையாலும்*
அந்தரங்கண்டடிபணிவரெல்லார்க்குமருள்புரியும்*
சிந்துரவெற்பிறையவனுர் சீலமல்லதறியேனே. (3)

காகமிராக்கதன் மன்னர்காதலி கத்திரபந்து*
நாகமானயன் முதலா நாகநகரார்தமக்கும்*
போகமுயர்வீடுபெறப் பொன்னருள்செய்தமைகண்டு*
நாகமலைநாயகனுர் நல்லடிப்போதடைந்தேனே. (4)

உகக்குமவையுகந்துகவா வனைத்துமொழிந்து* உறவுகுணா
மிகத்துணிவுபெறவுணர்ந்து வியன்காவலெனவரித்து*
சகத்திலொருபுகலில்லாத் தவமறியேன்* மதிட்கச்சி
நகர்க்கருணைநாதனை நல்லடைக்கலமாயடைந்தேனே. (5)

அளவுடையாரடைந்தார்க்கும் அதனுரையே கொண்டவர்க்கும்*
வளவுரைதந்தவனருளே மன்னியமாதவத்தோர்க்கும்*
களவொழிவாரெமரென்ன இசைந்தவர்க்குங்காவலராம்*
துளவமுடியருள்வாதர் துவக்கிலெனைவைத்தேனே. (6)

Koviloor Digital Library

உமதடிகளடைகின்றேன் என்றொருகாலுரைத்தவரை*
அமையுமினியென்பவர்போல் அஞ்சலெனக்கரம்வைத்து*
தமதனைத்துமவர்தமக்கு வழங்கியுந்தாம்மிகவிளங்கும்*
அமைவுடையவருளாளர் அடியிணையையடைந்தேனே. (7)

திண்மைகுறையாமைக்கும் நிறைகைக்குந்தீவினையால்*
உண்மைமறவாமைக்கும் உளமதியிலுக்கக்கைக்கும்*
தண்மைகழியாமைக்கும் தரிக்கைக்குந்தனிகைக்கும்*
வண்மையுடையருளாளர் வாசகங்கள்மறவேனே. (8)

சுருதிநினைவிவையறியுந் துணிவுடையார்தூமொழிகள்*
பரிதிமதியாசிரியர்பாசுரஞ் சேர்ந்தருக்கணங்கள்*
கருதியொருதெளிவாளாற் கலக்கமறுத்தத்திகிரி*
பரிதிமதிநயனமுடைப் பரமனடிபணிந்தேனே. (9)

†திருமகளுந்திருவடிவும் திருவருளுந்தெள்ளறிவும்*
அருமையிலாமையுமுறவும் அளப்பரியவடியரசும்*
கருமமழிப்பளியமைப்பும் கலக்கமிலாவகைநின்ற*
அருள்வாதர்நிலையிலக்கில் அம்பெனநானமிழ்ந்தேனே. (10)

†ஆறுபயன்வேறில்லா அடியவர்களனைவர்க்கும்*
ஆறுமதன்பயனுமிவை ஒருகாலும்பலகாலும்*
ஆறுபயனெனவேகண்டு அருளாளாடியிணைமேல்*
கூறியநற்குணவுரைகள் இவைபத்துங்கோதிலவே. (11)

அடிவரவு:—பத்தி சடை தந்திரம் காகம் உகக்கும் அளவுடை உமதடிகள் திண்மை சுருதி திருமகள் ஆறு அமலன்.

தேசிகன் திருவடிகளே சரணம்

—*—

Koviloor Digital Library

மும்மணிக்கோவை

—*—

நிலைமண்டிலவாசிரியப்பா

†அருள்தருமடியார்பால்மெய்யையைவைத்து*
தெருள்தரநின்ற தெய்வநாயக!* நின்
அருளெனுஞ்சீரோர் அரிவையானதென*
இருள்செகவெமக்கோ ரின்னொளிவிளக்காய்*
மணிவரையன்ன நின்திருவுருவில்*
அணியமராகத்தலங்கலா யிலங்கி*
நின்படிக்கெல்லாந் தன்படியேற்க*
அன்புடனுன்னோ யவதரித்தருளி*
வேண்டுரைகேட்டு மீண்டவைகேட்பித்து*
ஈண்டியவினைகள் மாண்டிடமுயன்று*
தன்னடிசேர்ந்த தமருனையணுக*
நின்னுடன்சேர்ந்துநிற்கும் நின்திருவே. (1)

நேரிசை வெண்பா

திருமா லடியவர்க்குமெய்யனுர்* செய்ய
திருமாமகளென்றுஞ்சேரும்*—திருமார்பில்
இம்மணிக்கோவையுட னேற்கின்ருர்* என்தன்இம்
மும்மணிக்கோவைமொழி. (2)

கட்டளைக்கலித்துறை

மொழிவார்மொழிவன மும்மறையாகுமயிந்தையில்வந்து*
இழிவாரிழிகவென் றின்னமுதக்கடலாகிநின்ற*
விழிவாரருள்மெய்யர் மெல்லடி வேண்டியமெல்லியர்மேல்*
பொழிவாரனங்கர்தம் பூங்கரும்புந்தியபூமழையே. (3)

நிலைமண்டிலவாசிரியப்பா

மழையிலெழுந்த மொக்குள்போல்வையம்*
அழியவென்றழியா வடியவர்மெய்ய!*
அருமறையின்பொரு ளாய்ந்தெடுக்குங்கால்*
திருவுடனமர்ந்த தெய்வநாயக!*
நின்திருத்தனக்கு நீதிருவாகி*
இந்துதன்னிலவுட னிலங்குதன்மையினை*
நந்துதலில்லா நல்விளக்காகி*

Koviloor Digital Library

அந்தமிலமுதவாழியாய் நிற்றி*
பாற்கடல்தன்னிற் பன்மணியன்ன*
சீர்க்கணஞ்சேர்ந்த சீலமெல்லியிலே*
அடியவர்பிழைகள் நின்கருத்தடையாது*
அடையவாண்டருளு மரசனும்நீயே*
உயர்ந்தநீயுன்னை யெம்முடன்கலந்தனை*
அயிந்தைமாநகரி லமர்ந்தனையெமக்காய்*
சித்திரமணியெனத் திகழுமன்னுருவில்*
விண்ணினுளமர்ந்த வியனுருவதனால்*
எண்ணியவிரிரண் டுருக்களுமடைதி*
பன்னிருநாமம் பலபலவுருவாய்*
என்னுருவெங்கு மெய்திநீநிற்றி
மீனேடாமைகேழல் கோளரியாய்*
வானூர்குறளாய் மழுப்படைமுனியாய்*
பின்னுமிராமரிருவராய்ப் பாரில்*
துன்னியபரந்தீர் துவரைமன்னனுமாய்*
கலிதவிர்த்தருளுங் கற்கியாய்மற்றும்*
நலிவதற்கென்னும் வல்வினைமாற்ற*
நானுவுருவங்கொண்டு நல்லடியோர்*
வானூரின்பமிங்குற வருதி*
ஓருயிருலகுக்கென்னும்நீ திருவொடு*
ஓருயிரெல்லாம்மேந்தி யின்புறுதி*
யாவருமறியாதெங்கு நீகரந்து*
மேவுருச்சூழ்ந்து வியப்பினுல்மிகுதி*
கொண்டிடவெம்மை யடைக்கலமுலகில்*
கண்டிலங்கதியுனையன்றி மற்றென்றும்*
பல்வகைநின்ற நின்படியனைத்தினும்*
தொல்வகை காட்டுந் துணிந்துதூமறையே. (4)

நேரிசைவெண்பா

தூமறையினுள்ளந் துளங்காத்துணிவுதரும்*
ஆமறிவாலார்ந்தடிமை யாகின்றேம்—பூமறையோன்
பாராயணத்திற் பணியுமயிந்தைநகர்*
நாராயணனுர்க்கே நாம். (5)

Koviloor Digital Library

கட்டளைக்கலித்துறை

ஆர்க்குங்கருணைபொழிவா னயிந்தையில்வந்தமர்ந்த*
கார்க்கொண்டலைக்கண்ட காதற்புனமயில்கண்பனியா*
வேர்க்கும்முகிழ்க்கும்விதிர்விதிர்க்கும்வென்கிவெவ்வுயிர்க்கும்*
பார்க்கின்றவர்க்கிது நாமென்கொலென்றுபயிலுவமே? (6)

நிலைமண்டிலவாசிரியப்பா

பயின்மதிநீயே பயின்மதிதருதலின்*
வெளியும்நீயே வெளியுறநிற்றலின்*
தாயும்நீயே சாயைதந்துகத்தலின்*
தந்தையும் நீயே முந்திநின்றளித்தலின்*
உறவும்நீயே துறவாதொழிதலின்*
உற்றதும்நீயே சிற்றின்பமின்மையின்*
ஆறும்நீயே ஆற்றுக்கருடலின்*
அறமும்நீயே மறநிலைமாய்த்தலின்*
துணைவனும்நீயே யிணையிலையாதலின்*
துய்யனும்நீயே செய்யாளுறைதலின்*
காரணம்நீயே நாரணனுதலின்*
கற்பகம்நீயே நற்பதந்தருதலின்*
இறைவனும்நீயே குறையொன்றிலாமையின்*
இன்பமும்நீயே துன்பந்துடைத்தலின்*
யானும்நீயே யென்னுளுறைதலின்*
எனதும்நீயே யுனதன்றியின்மையின்*
நல்லாய்நீயே பொல்லாங்கிலாமையின்
வல்லாய்நீயே வையமுண்டுமிழ்தலின்*
எங்ஙனமாகும் மெய்ய! நின்வியப்பே*
அங்ஙனேயொக்க வறிவதாரணமே. (7)

நேரிசைவெண்பா

ஆரணங்கள்தேட வயிந்தைநகர்வந்துதித்த*
காரணராய்நின்ற கடல்வண்ணர் —*நாரணனுர்
இப்படிக்குமிக்கு அன்றெடுத்தபாதங்கழுவ*
மெய்ப்படிக்கமானது பொன்வெற்பு. (8)

Koviloor Digital Library

கட்டளைக்கலித்துறை

வெற்புடனென்றியாயிந்தையில் வெவ்வினைதீர் மருந்தொன்று*
அற்புதமாகவமர்ந்தமைகேட் டருள்வேண்டிநிற்க*
பற்பிலமர்ந்தசெய்யாள்படி காட்டிய பண்புடையெம்*
விற்புருவக்கொடிக்கோர் விலங்காமயல்பெற்றனமே. (9)

நிலைமண்டிலவாசிரியப்பா

†பெற்றனை நீயே மற்றுளவெல்லாம்*
பெறுவதுநின்னை யுருவருகொள்வார்*
நின்னாலன்றி மன்னாரின்பம்*
நின்பொருட்டு நீயேன்பொருட்டில்லை*
நின்னுருநின்று மின்னுருத்தோன்றும்*
நின்தனக்குநிகர் நின்னடியடைவார்*
நின்பாலன்றி யன்பாலுய்யார்*
வாரணமழைக்க வந்தகாரணமே. (10)

தேசிகன் திருவடிகளே சரணம்.

நவரத்தினமாலை

* * *

பதினாறுசீராசிரியச்சந்தவிருத்தம்

†ஒருமதியன்ப ருளங்கவர்ந்தன
உலகமடங்க வளர்ந்தளந்தன
ஒருசடைபொன்றிய கங்கைதந்தன
உரகபடங்க ளரங்குகொண்டன*
தருமமுயர்ந்த திதென்னநின்றன
தருமவிரந்த திசைந்துசென்றன
சகடமுடைந்து கலங்கவென்றன
தமர்களருந்து மருந்திதென்பன*
திருமகள் செய்யகரங்க ளொன்றின
திகழ்துளவுந் மணங்கமழ்ந்தன
செழுமணிகொண்ட சிலம்பிலங்கின
சிலைதவிலன்றே ரணங்குமிழ்ந்தன*

Koviloor Digital Library

அருமறையந்த மமர்ந்தபண்பின
அயன்முடிதன்னி லமர்ந்துயர்ந்தன
அருள்தரவெண்ணி யயிந்தைவந்தன
அடியவர் மெய்யர் மலர்ப்பதங்களே. (1)

இருபத்தெண்சீராசிரியச்சந்தவிருத்தம்

மகரம்வளரு மளவில்பௌவமடையவுற்றலைத்தனை
வடிவுகமடமெனவமர்ந்து கிரிதனைத்தரித்தனை
மலியுமசுரனுரமிடந்து வசுதைபேர்த்தெடுத்தனை
வலிகொளவுணனுடல்பிளந்து மதலைமெய்க்குதித்தனை*
பகருமுலகு மடியளந்து தமர்களுக்களித்தனை
பரசுமுனிவன்வடிவுகொண்டு பகைவரைத்துணித்தனை
பணியவிசைவில்தசமுகன்தன் முடிகள்பத்தறுத்தனை
படியுமுருவில்வருபிலம்பவசுரனைத் தகர்த்தனை*
நகரிதுவரையெனவுகந்து வரைகரத்தெடுத்தனை
நடமொடியலும்பரியில்வந்து நலிவறுக்கவுற்றனை
நலியும்வினைகள் செகுமருந்தின் நலமுறைந்தவெற்பினை
நணுகுகருடநதிகிளர்ந்த புனலுகப்பில் வைத்தனை*
அகரமுதல வுரைகொண்மங்கைகணவனுக் களித்தனை
அடையும் வினதசிறுவனுய்ய வருள்கொடுத்துயர்த்தினை
அடியுமணையுமெனுமனந்த னடிதொழக்களித்தனை
அவனிமருவுதிருவயிந்தை யடியவர்க்குமெய்யனே! (2)

எழுசீராசிரியச்சந்தவிருத்தம்

புரமுயர்த்தவசுரர்கட்கொர் புறமுரைத்தபொய்யினன்*
வரையெடுத்துமழைதடுத்த மழையொடொத்தமெய்யினன்*
திரைநிரைத்தகடலெரித்த சிலைவளைத்தகையினன்
அருள்கொடுத்துவினைதவிர்க்கு மடியவர்க்குமெய்யனே. (3)

கலி விருத்தம்

† தேசொத்தாரில்லையெனுந் தெய்வநாயகனார்*
வாசக்குழல் மாமலராள்மணவாளர்*
வாசிந்தெழுமன்மதனார் மணற்றேப்பில்*
மாசிக்கடலாடி மகிழ்ந்துவருவரே. (4)

Koviloor Digital Library

அறுசீராசிரியவிருத்தம்

உருளுஞ்சகடமொன் றுதைத்தா யுலகமேழுண்டுமிந்தளந்தாய்!*
பொருளுமழலுமிறையாகப் பூண்டேனடிமையினில் மீண்டேன்*
இருளுமருளுந்தருமந்தா ளெழிலாராழிசங்கேந்தி*
அருளுந்தெருளுந்தரவென்பா லடியோர்மெய்யவந்தருளே. (5)

எண்சீராசிரியவிருத்தம்

வஞ்சனைசெய்பூதனையை மலியுஞ்சாட்டை
மல்லரையோர்மதகளிற்றை வானோரஞ்சும்*
கஞ்சனைமுன் கடிந்தவனி பாரந்தீர்த்த
காவலனே! கோவலனாய் நின்ற கோவே!*
அஞ்சனமுங்காயாவு மனையமேனி
அடியவர்க்கு மெய்யனே! அயிந்தை வாழும்*
அஞ்சலென வருள்பொழியும் வள்ளலே! நின்
வடிவழகுமறவாதார் பிறவாதாரே. (6)

எழுசீராசிரியவிருத்தம்

மையுமாகடலுமயிலுமாமழையு மணிகளுங்குவளையுங்கொண்ட*
மெய்யனே!அடியோர்மெய்யனே!விண்ணோரீசனே!நீசனேனடைந்தே
கையுமாழியுமாய்க்களிறுகாத்தவனே!காலனார்தமரெனைக்கவராது*[ன்*
ஐயனே!வந்தன்றஞ்சலென்றருள்தென்னயிந்தைமாநகரமர்ந்தானே (7)

பதினான்குசீர்ச்சந்தவிருத்தம்

மஞ்சுலாவுசோலைசூ ழயிந்தைமன்னுமன்னுசீர்
வரையெடுத்துநிரையளித்த மாசில்வாசுதேவனே!*
செஞ்சொலன்பர்சிந்தைகொண்டு தீதிலாததூதனாய்த்
தேருமூர்ந்துதேசுயர்ந்த செல்வதெய்வநாயக!*
வெஞ்சொலாளர்காலதூதர் வீசுபாசம்வந்தென்மேல்
விழுந்தழுந்தியானயர்ந்து வீழ்வதற்குமுன்னம் நீ*
அஞ்சலஞ்சலென் றளிக்கவே ண்டுமச்சுதா!
அடியவர்க்குமருளியக்கு மடியவர்க்குமெய்யனே! (8)

கட்டளைக்கலித்துறை

பொருத்தம்பொருந்தலும் போகின்றவற்றுடன் பொய்ம்மதிமேல்*
விருத்தங்கலித்துறைமேவு மழன்மதம்வேறினியென்?*
திருத்தனமனத்திவிற்சேரா வெமைத்தெய்வநாயக! நின்*
வருத்தம்பொறுவருளால் மன்னடைக்கலங்கொண்டருளே. (9)

Koviloor Digital Library

எண்சீராசிரியவிருத்தம்

†அந்தமில்சீரயிந்தைநக ரமர்ந்தநாத
னடியிணைமேலடியுரையா லைம்பதேத்தி*
சிந்தைகவர்பிராகிருத நூறுகூறிச்
செந்தமிழ்மும்மணிக்கோவை செறியச்சேர்த்து*
பந்துகழலம்மானை யூசலேசல்
பரவுநவமணிமாலை யிவையுஞ்சொன்னேன்*
முந்தைமறைமொழியவழி மொழிநீயென்று
முகுந்தனருள்தந்தபயன் பெற்றேன்நானே. (10)

அடிவரவு:- ஒருமதி மகரம் புரமுயர்த்த தேசு உருளும் வஞ்சனை மையும் மஞ்சுலாவு பொருத்தம் அந்தமில்சீர் ஆழ்வார்கள்.

தேசிகன் திருவடிகளே சரணம்

—*—

பிரபந்தசாரம்

தனியன்

எண்சீராசிரியவிருத்தம்

ஆரணநான்கின்பொருளை யாழ்வார்களாய்ந்தடைவே
அன்புடனேயம்புவியோ ரனைவருமீடேறவென்று*
நாரணனுர்தாள்களிலே நாலாயிரந்தமிழால்
நண்ணியுரைசெய்தவற்றைநாடிவகைதொகைசெய்தாய்!*
பூரணமாஞானியர்சேர் பொங்குபுகழ்த்தூப்புலவரும்
புனிதனென்றும்பிள்ளையென்றும் புவியோர்புகழ்வேங்கடவா!*
தாரணியோரிங்குகக்கச் சாற்றியநற்பிரபந்தசாரந்
தனையுரைத்துவாழுமனந் தந்தருளாயென்தனக்கே. (1)

ஆதிமறையோதிமகி ழயக்கிரீவர்தம்மருளால்
அன்புடனேதூப்புல்நக ரவதரித்திங்குவந்த*
வாதியரைவென்றுவந்து வண்புவிமேலெதிராசர்
வாழ்வுறுநற்றெரிசனத்தை வண்மையுடனேவளர்த்து*

Koviloor Digital Library

நிதிநெறிதவறாமல் நிறுத்திவிடும்வேங்கடவா!
நேசமுடனாழ்வார்கள் நிலைகளையெல்லாமுணர்ந்து*
சாதுசனம்வாழவென்று சாற்றியநற்பிரபந்தசாரந்
தனையுரைத்துவாழுமனந் தந்தருளாயென்தனக்கே. (2)

எண்சீராசிரியவிருத்தம்

†ஆழ்வார்களவதரித்த நாளூர்திங்க
ளடைவுதிருநாமங்க ளவர்தாஞ்செய்த*
வாழ்வானதிருமொழிக ளவற்றுட்பாட்டின்
வகையானதொகையிலக்க மற்றுமெல்லாம்*
வீழ்வாகமேதினிமேல் விளங்கநாளும்
விரித்துரைக்குங்கருத்துடனே மிக்கோர்தங்கள்*
நீள்பாதநிரந்தரமுந் தொழுதுவாழ்த்தும்
நேசமுடனடியேன்தன் நெஞ்சுதானே. (1)

அருள்மிகுத்ததொருவடிவாய்க் கச்சிதென்னில்
ஐப்பசிமாதத் திருவோணத்துநாளில்*
பொருண்மிகுத்தமறைவிளங்கப் புவியோருய்யப்
பொய்கைதனில்வந்துதித்த புனிதா! முன்னாள்*
இருளதனில்த ண்கோவ லிடைகழிச்சென்று
இருவருடன்நிற்கவும் மாலிடைநெருக்க*
திருவிளக்காமெனும் வையந்தகளிநூறுஞ்
செம்பொருளா வெனக்கருள்செய்திருந்தநீயே. (2)

கடன்மல்லைக்காவலனே! பூதவேந்தே!
காசினிமேலைப்பசியி லவிட்டநாள்வந்து*
இடர்கடியுந்தண்கோவ லிடைகழிச்சென்று
இணையில்லாமூவருமா யிசைந்தேநிற்க*
நடுவிலிவரொருவரு மென்றறியாவண்ணம்
நள்ளிருவில்மால் நெருக்க நந்தாஞானச்
சுடர்விளக்கேற்றிய அன்பேதகளியாவ
தொடைநூறுமெனக்கருள்செய் துலங்கநீயே. (3)

மாமயிலைப்பதியதனில் துலாமாதத்தில்
வருஞ்சதயத் தவதரித்துக்கோவலூரில்*
தூமுனிவரிருவருடன் துலங்கநின்று
துன்னியபேரிருள்நீங்கச் சோதிதோன்ற*

Koviloor Digital Library

சேமமுடனெடுமாலைக் காணப்புக்குத்
திருக்கண்டேனெனவுரைத்த தேவே! உன்தன்*
பாமருவுதமிழ்மாலை நூறுபாட்டும்
பழவடியேனுக்கருள்செய் பரம! நீயே. (4)

தைம்மகத்தில்வரும் மழிசைப்பரனே! மற்றைச்
சமயங்கள் பலதெரிந்து* மாயோனல்லால்
தெய்வம்மற்றில்லையென வுரைத்தவேதச்
செழும்பொருள் நான்முகன்தொண்ணூற்றுறுபாட்டும்*
மெய்ம்மிகுத்த திருச்சந்தவிருத்தப்பாடல்
விளங்கியநூற்றிருபதுந் தப்பாமல்மெய்யே*
வையத்தில்மறவாம லுரைத்துவாழும்
வகையடியெனுக்கருள்செய் மகிழ்ந்துநீயே. (5)

†முன்னுரைத்ததிருவிருத்தம் நூறுபாட்டும்
முறையின்வருமாசிரிய மேழுபாட்டும்
மன்னிநற்பொருள் பெரியதிருவந்தாதி
மறவாதபடி யெண்பத்தேழுபாட்டும்*
பின்னுரைத்தோர் திருவாய்மொழியெப்போதும்
பிழையற வாயிரத்தொருநூற்றிரண்டுபாட்டும்*
இந்நிலத்தில் வைகாசிவிசாகந்தன்னி
லெழிற்குருகைவரு மாறு! இரங்குநீயே. (6)

தேறியமாஞானமுடன் திருக்கோளூரில்
சித்திரையிற்சித்திரைநாள் வந்துதோன்றி*
ஆறியநல்லன்புடனே குருகூர்நம்பிக்கு
அனவரதம் அந்தரங்கவடிமைசெய்து
மாறனையல்லாலென்று மறந்துந்தேவு
மற்றறியேனேனு மதுரகவியே! நீமுன்*
கூறிய கண்ணிநுண்சிறுத்தாம்பதனிற்பாட்டுக்
குலவுபதினொன்று மெனக்குதவுநீயே. (7)

பொன்புரையும் வேற்குலசேகரனே! மாசிப்
புனர்பூசத் தெழிவஞ்சிக்களத்துத்தோன்றி*
அன்புடனேநம்பெருமாள் செம்பொற்கோயி
லனைத்துலகின் பெருவாழ்வுமடியார்தங்கள்*

Koviloor Digital Library

இன்பமிகு பெருங்குழுவுங்காண மண்மேல்
இருளிரியவென்றெடுத்த விசையிற்சொன்ன*
நன்பொருள்சேர் திருமொழி நூற்றைந்துபாட்டும்
நன்குகவெனக்கருள்செய் நல்கிநீயே. (8)

பேரணிந்தவில்லிபுத்தூ ராவிதன்னிற்
பெருஞ்சோதிதனில் தோன்றும்பெருமானே! முன்*
சீரணிந்த பாண்டியன்தன் நெஞ்சுதன்னில்
தியக்கற மால்பரத்துவத்தைத் திறமாச்செப்பி*
வாரணமேல் மதுரைவலம்வரவே வானில்
மால் கருடவாகனனாய்த்தோன்ற வாழ்த்தும்*
ஏரணிபல்லாண்டுமுதற் பாட்டு நானூற்
றெழுபத்தொன்றிரண்டு மெனக்குதவு நீயே. (9)

†வேயர்புகழ் வில்லிபுத்தூராடிப்பூரம்
மேன்மேலும் மிகவிளங்க விட்டுசித்தன்*
தூயதிருமகளாய்வந் தரங்கனார்க்குத்
துழாய்மாலை முடிசூடிக்கொடுத்த மாதே!*
நேயமுடன் திருப்பாவைப்பாட் டாறைந்தும்
நீயுரைத்த தையொருதிங்கட்பாமாலை*
ஆயபுகழ் நூறுடன் நாற்பத்துமூன்றும்
அன்புடனே யடியேனுக்கருள்செய்நீயே. (10)

மன்னுமதிள் திருமண்டங்குடிதான் வாழ
மார்கழிமாதக்கேட்டைநாளில் வந்து*
துன்னுபுகழ்த் தொண்டரடிப்பொடியே! நீமுன்
துழாய்மாலைப்பணியடிமை செய்துநாளும்*
தென்னரங்கமணவாளர்க் கன்புமிக்குச்
செப்பிய நற்றிருமாலை நாற்பத்தைந்தும்*
பன்னியநற்றிருப்பள்ளியெழுச்சிப் பத்தும்*
பழவடியேனுக்கருள்செய் பரிந்துநீயே. (11)

உலகறிய மலிபுகழ்க்கார்த்திகைமாதத்தில்
உரோகிணிநா ளுறந்தைவளம்பதியில் தோன்றி*
தலமளந்ததென்னரங்கர்பா லுலோக
சாரங்கமாமுனி தோள்தனிலே வந்து

Koviloor Digital Library

பலமறையின் பொருளாற் பாண்பெருமாளே! நீ
பாதாதிகேசமதாய்ப் பாடித்தந்த*
சொலவமலனுதிபிரான் பத்துப்பாட்டும்
சோராம லெனக்கருள்செய் துலங்கநீயே. (12)

†அறிவுதரும் பெரியதிருமொழி தப்பாமல்
ஆயிரத்தோ டெண்பத்துநாலு பாட்டும்*
குறியதொருதாண்டகம்நாலைந் தாறைந்தும்
குலாநெடுந்தாண்டக மெழுகூற்றிருக்கையொன்றும்*
சிறியமடற்பாட்டு முப்பத்தெட்டிரண்டும்
சீர்பெரியமடல்தனிற்பாட் டெழுபத்தெட்டும்*
இறைவனே! கார்த்திகையிற் கார்த்திகை நாள்
எழில்குறையல் வருகலியா! இரங்குநீயே. (13)

†தேசமெலாமுகந்திடவே பெரும்பூதூரில்
சித்திரையி லாதிரைநாள் வந்துதோன்றி*
காசிமேல் வாதியரைவென் றரங்கர்
கதியாகவாழ்ந்தருளு மெதிராசா! முன்
பூசுரர்கோன் திருவரங்கத்தமுதனா ருன்
பொன்னடிமே லந்தாதியாகப் போற்றி
பேசியநற்கலித்துறை நூற்றெட்டுப்பாட்டும்
பிழையறவே யெனக்கருள்செய் பேணி நீயே. (14)

எண்ணின் முதலாழ்வார்கள் மூன்றுநூறும்
எழின்மழிசைப்பிரா னிருநூற்றொருபத்தாறும்*
உண்மைமிகு மாறன்மறை யாயிரத்தோடு
உற்ற விருநூற்றுத்தொண்ணூறு மாறும்*
வண்மையுடை மதுரகவி பத்துமொன்றும்
வஞ்சியர்கோ னூற்றைந்தும் பட்டநாதன்*
பண்ணியல் நானூற்றேழுபத்துமூன்றும்
பார்க்கோதை நூற்றேழுபத்து மூன்றே. (15)

†பத்தரடிப்பொடிபாட லைம்பத்தைந்தும்
பாணர்புகழ் பத்துடனே பரகாலன் சொல்*
அத்தனுயர்வேங்கடமாற் காயிரத்தோ
டானவிருநூற்றேரைம்பத்துமூன்றும்*

Koviloor Digital Library

முத்திதருமெதிராசர் பொன்னடிக்கே
மொழிந்த வமுதர்பாடல் நூறுமெட்டும்*
எத்திசையும்வாழ விவர்பாடிவைத்த
விவை நாலாயிரமு மடியோங்கள்வாழ்வே. (16)

†வையகமென் பொய்கை பூதம் பேயாழ்வார்
மழிசையர்கோன் மகிழ்மாறன் மதுரகவி*
பொய்யில்புகழ்க்கோழியர்கோன் விட்டுசித்தன்
பூங்கோதை தொண்டரடிப்பொடிபாணாழ்வார்*
ஐயனருட்கலிய னெதிராசர் தம்மோடு*
ஆறிருவரோரொருவ ரவர்தாஞ்செய்த
துய்யதமி ழிருபத்துநான்கிற்பாட்டின்
தொகை நாலாயிரமு மடியோங்கள் வாழ்வே. (17)

அந்தமிலா வாரணம் நாலாகிநின்ற
அதன்கருத்தை யாழ்வார்க ளாய்ந்தெடுத்து*
செந்தமிழாலருள்செய்த வகைதொகையுஞ்
சிந்தாம லுலகங்கள் வாழவென்று*
சந்தமிகுதமிழ்மறையோன் தூப்புல்தோன்றும்
வேதாந்தகுரு மொழிந்த பிரபந்தசாரம்*
சிந்தையினாலனுதினமும் சிந்திப்போர்க்குச்
சேமமதாந் திருமால் தன்கருணையாலே. (18)

அடிவரவு : ஆழ்வார்கள் அருள் கடல் மாமயிலை தை முன் தேறிய பொன் பேரணி வேயர் மன்னு உலகறிய அறிவு தரும் தேசமெல்லாம் எண்ணில் பத்தரடிப்பொடி வையகம் அந்தமிலா ஆகாரம்.

தேசிகன் திருவடிகளே சரணம்

—★—

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 32541